முருகேச பண்டிதம்

சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல்

சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல்

சுன்னாகம் மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல்

சுன்னாகம் மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல்

மயிலணிச் சிலேடை வெண்பா

மயிலணி விசாலாட்சி அம்மை பதிகம்

கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல்

குடந்தை வெண்பா

பதார்த்ததீபிகை

நீதி நூறு

அலங்கார பஞ்சகம்

வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேச பண்டிதம்

பதிப்பாசிரியர்கள்:
சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்)
திருமதி றஜனி நரேந்திரா

வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: முருகேச பண்டிதம்

விடயம்: முருகேசபண்டிதரின் படைப்புக்களும் அவர் தொடர்பான கட்டுரைகளும்

பதிப்பாசிரியர்கள்: சு.ஶ்ரீகுமரன் (இயல்வாணன்)
திருமதி றஜனி நரேந்திரா

முதற் பதிப்பு: டிசெம்பர் 2018

பக்கங்கள்: 128

பிரதிகள்: 2010

வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

அச்சுப்பதிப்பு: எவகிறீன் அச்சகம்
இல.693, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9893

ISBN: 978 955 7331 133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளரின் ஆசிச்செய்தி

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்படும் "முருகேச பண்டிதம்" பதிப்பிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

தமிழ் மொழியின் சிறப்பிற்கும் - வளர்ச்சிக்கும் - பரம்பலுக்கும் பல்வேறு அறிஞர்களும், பெரியவர்களும் காலத்திற்குக் காலம் அரும் பெரும் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அத்தகைய பணிகளின் பலன்களாக பல்லாயிரக்கணக்கான இலக்கண இலக்கியங்கள் தோன்றியுள்ளன. காலத்தின் கோலத்தினால் அவை சிதைந்தும், அழிந்தும் பாவனைக்குட்படுத்த முடியாது போனமை அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் அழிந்து வரும் இலக்கியங்களைப் பேணும் பொருட்டு மீள்பதிப்புச் செய்து எதிர்கால சந்ததிக்குக் கையளிப்பது எமது தலையாய கடப்பாடு ஆகும்.

"முருகேச பண்டிதம்" நூலைப் பதிப்புச் செய்வதற்கு பிள்ளையார் சுழியிட்டுத் தொடக்கி வைத்த முருகேச பண்டிதரின் பூட்டன் முறையான திரு.சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்) அவர்களுக்கும், பதிப்பிற்குரிய செயற்பாட்டினை முன்னெடுத்துக் கொடுத்த உடுவில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜனி நரேந்திராவிற்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நிலைபேற்றுப் பணிகள் வளர வேண்டும் என்பதனைத் தெரிவிப்பதுடன் இம் முயற்சிக்கு முன்னின்று உழைத்த பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து இந்நூல் வெளியீடு சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துரை

பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றாகிய "முருகேச பண்டிதம்" நூலை பதிப்புச் செய்து வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் புகழ்பூத்த இலக்கண இலக்கிய விற்பன்னராகத் திகழ்ந்த முருகேச பண்டிதர் பல்வேறு நூல்களை யாத்துள்ளார். அவற்றுள் பல அழிவடைந்தும் அருகியும் போய்விட்டன. எனவே இன்று தேடற்கரிய நூலாகிய முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டு மீளவும் பதிப்பிக்கும் நிலை கடவுளின் செயலாகவே கருதமுடிகின்றது. இது போன்ற நிறைந்த பழந்தமிழ் நூல்களைத் தற்போது இனங்கண்டு அவற்றின் முக்கியத்துவம் கருதி பதிப்பித்து வெளியீடு செய்ய எமது பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முன்னின்று பணியாற்றி வருகின்றது.

இந்த வகையிலே இப்பதிப்பு முயற்சிக்கு உழைத்தவர்களாகிய திரு.சு.ஸ்ரீகுமரன் (இயல் வாணன்), உடுவில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜனி நரேந்திரா மற்றும் இணைந்து பணியாற்றிய ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் திணைக்களம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பதிப்பு முயற்சிக்கு அனுமதி தந்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்களுக்கும் திணைக்களம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி அபிராமி பாலமுரளி
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

ஆறுமுகநாவலரில் எட்டுவயது இளையவர் முருகேசபண்டிதர். தம் இளமைக்காலத்தில் நாவலர் எழுத்துக்களை விமரிசிக்கும் தகுதியைப் பெற்றிருந்தார். இருந்த போதும் எழுத்து மூலம் நாவலரை விமரிசனம் செய்யாத பண்புடையராயும் இருந்த சிறப்பினால் இருவரும் ஒருவரை ஒருவர் மதித்தனர் என்பதும் உண்மை. நாவலர் இவருடன் நட்பைப் பேணி, தன் கிறிஸ்து மத கண்டன வேலைக்கு இவரது உதவிகளைப் பெற்றார் என்பது இவர் வர லாற்றால் அறிய முடிகின்றது.

இளமையில் தன் மனைவியை இழந்து தமிழ் நாட்டில் தமிழ்ப்பணியும் ஆன்மசாத னையும் மேற்கொண்டிருக்கிறார். தன் காலத்து அறிஞர் செயல்களில் உள்ள இலக்கண வழுக்களைச் சுட்டிக் கண்டிக்கும் தன்மையுடன் விளங்கினார்.

"நீதிக்கும் உண்மைக்கும் அன்றி வேறொன்றுக்கும் அஞ்சாதவர்; சுயநலத்துக்காகத் தமது பெருமையையும் பண வருவாயையும் மதித்துப் பிறருக்குப் பணியாதவர்; எல்லா நன்றியிலும் செய்நன்றியைச் சொல்லிலும் செயலிலும் மறவாதவர்" என்ற பெருமை சாதாரணமானதன்று. இத்தகைய பெருமைக்கு சிறிதும் குறை உண்டாகாத வண்ணம் இவர் தமது பிற்கால வாழ்க்கைக்கு உறுதுணையாயிருந்த வெள்ளை நாடார்- பெருமான் நாடார் நட்பைப் பெற்றி ருந்தார். இவர் தமது இறுதிக்காலத்திலும் கல்வி கற்பிப்பதிலும் நூல்களியற்றுவதிலும் சோர்வின்றியிருந்தார். அவருக்கு வேண்டிய வசதிகள் குறைவின்றியிருந்ததால் மன அமைதியோடிருந்து 1900 ஆம் ஆண்டு விகாரி வருடம் ஆவணி மாதம் 10 ஆம்திகதி தேகவி யோகமாயினார். இவரது உடலம் சகல சிறப்புக்களோடும் சமாதி வைக்கப்பட்டது என்ற இச்செய்தி முருகேச பண்டிதரின் தூய்மைக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் சான்றாக உள்ளது.

இவர் இயற்றிய பாடல்களில் வரும் கற்பனைப் பெருமையும் கருத்துப் பெருமையும் கவித்துவமும் பிறநயங்களும் படிப்போர்க்கு இன்பமும் பக்தியும் அளிக்கவல்லன என்பது இவர் வரலாற்றிலும் பாடல்களிலும் அறியப்படும் உண்மைகளாகும்.

உலகிலுள்ள கவிதைகள் காப்பியங்களை மூன்று தன்மையென வகைப்படுத்துவர். நாளிகேர பாகம் - கதலீபாகம்- திராட்சாபாகம் என்பனவே அம் மூன்று வகையாகும்.

தேங்காயின் வெளிப்பகுதியை விலக்கி அதன் மூடியை உடைத்து உள்ளுள்ள பாகத்தை துருவியோ தோண்டியோ பயன்படுத்தத்தக்கதாயிருப்பது தேங்காய். தேங்காய் போலச் சிரமப்பட்டு பொருள் நயம்கொள்ள இருப்பவை நாளிகேர பாகம் எனப்படும்.

வாழைப்பழத்தை உரித்து உண்பது போல் சிறிய முயற்சியினால் பொருள் கொண்டு மகி ழத் தக்கதாயிருப்பவை கதலீபாகம் எனப்படும்.

திராட்சைப் பழத்தை அப்படியே உண்டு மகிழ்வது போல் படித்த அளவிலேயே இரசிக்கத் தக்கதாயிருப்பவை திராட்சாபாகம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று வகையில் சிறப்பானது திராட்சாபாகம் என்று பலரும் கருதுவர். ஆனால் இம்மூன்று வகைப்பொருள்களில் எல்லோரும் எக்காலமும் பயன்படுத்துபவை தேங்காயே என்பது அழகிய உண்மையாகும். அதாவது கதலி, திராட்சை என்பது எளிதில் பயன் கொள்ளத் தக்கதாயிருந்தாலும் எல்லோருக்கும் எக்காலமும் பயன்படும் தன்மை தேங் காய்க்கே உள்ளது. எனவே பயன்படும் தன்மையால் எல்லோரும் விரும்பும் தேங்காய் போல நாளிகேர பாகக் கவிதை முதலியன அதிக பயன்தரும் என்றார் ஒரு சிந்தனையாளர்.

அச்சிந்தனையாளர் கருத்துக்குப் பொருத்தமான முறையில் முருகேச பண்டிதரின் பல கவிதைகள் நாளிகேர பாகக் கவிதைகளாகவே உள்ளன. நாளிகேரத்தைப் போலப் பயன் கொள்ளத்தக்கவையாகவும் உள்ளன. நல்ல ஒரு தேங்காயை ஒரு சிறு பிள்ளை பயன் கொள்ள இயலாது வருந்துவது போன்ற தன்மை இன்றைய பல தமிழறிஞர்களிடையே உள் ளது. அதற்காக இக்கவிதைகளைப் புறக்கணிக்கலாகாது. தேங்காயின் பயன் கருதி அதனைப் பயன்படுத்துவது போல இக்கவிதைகளின் நயமும் சிறப்பும் கருதி இவற்றின் பொருளை அறிந்து மகிழ முன்வர வேண்டும்.

சாதாரணமான மகிழ்ச்சிக்காக பெரும் செயலையும் பிற இடையூறுகளையும் பொருட்படுத் தாது தொலைக்காட்சிப் பெட்டியை வாங்கி வீட்டில் பொருத்தி அதன் பயனை அடைவது போல் இக்கவிதைகளின் பயனையும் அடைவது அறிவுடைமையாகும்.

இப்பாடல்களை இக்காலத்தவர் பயன்கொண்டு மகிழும்படி உரை எழுத வேண்டும் என்று பதிப்பாசிரியர்கள் விரும்பியதன் பயனாக இப்பாடல்களைப் படித்து உரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ஆனால் இவர்கள் எதிர்பார்த்த அளவு முழுப்பாடல்களுக்கும் என்னால் உரை எழுத இயலவில்லை. இவரின் பாடல்கள் பலவற்றில் கும்பகோணத்தின் தல வரலாற்றுச் செய்திகள் உள்ளன. அச் செய்திகள அறியாததால் அவற்றின் பொருளை அறிய இயலவில்லை. குறுகிய காலத்துள் அவற்றை ஆராய்ந்து அவற்றின் சிறப்பை வெளிப்படுத்த முடியவில்லை.

திருக்கு - இயமகம் - சிலேடை போன்ற கவித்துவத் திறமைகளை அறிந்து வெளிப்படுத்தும் திறமைகளும் போதிய அளவு எனக்கில்லாமையால் இம் முயற்சியில் பிரவேசிக்கவே அஞ்சினேன். ஆனால், என் அன்பர்கள் இருவரும் தந்த ஊக்கத்தால் இயன்ற அளவு முயன்று சில பாடல்கள் கருத்துக்களை ஓரளவு அடையாளம் காட்டியுள்ளேன். இப்படியான செயல் பலரை இப்பாடல்களில் ஆர்வம் கொள்ளச் செய்யும் என நம்புகின்றேன்.

நான் எழுதிய கருத்துக்களையும் பாடல்களையும் வாசித்துச் சிந்திப்பவர்கள் மகிழ்பவர்கள் பிற பாடல்களையும் அணுக முயல்வர் என்றே நம்புகின்றேன்.

உடல் நலமும் நான் கருதிய சில நண்பர்களின் உதவியும் கிடைத்தால் இன்னும் சில பாடற் கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என நம்பினேன். இந்த இரண்டு வாய்ப்புக்களும் கிடைக்காமையால் என்னால் இவ்வளவுமே இயன்றது. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர அருளும் கலைமகளும் தமிழ்த் தெய்வமும் முருகேச பண்டிதரும் ஆசி வழங்கில் மீதியும் கிடைக்க வாய்ப்பு உண்டாகும்.

பண்டிதர் **தி. பொன்னம்பலவாணர்,**

பொன்னாலை, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

வட புலத்திலே ஈழத்து இலக்கியத்துக்கு வளம் சேர்த்த பிரதேசமாக சுன்னாகம் திகழ்கிறது. ஒரு இலக்கண, இலக்கியப் புலமைப் பாரம்பரியம் இங்கு வேரூன்றி இருந்தது. ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் சுன்னாகத்தில் வாழ்ந்த அரங்கநாத ஐயரின் புதல்வரான வரதபண்டிதர் (1656 - 1716) இந்தப் புலமைப் பாரம்பரியத்தின் தலைமகனாக விளங்கினார். சோதிடத்திலும் வைத்தியத்திலும் சிறந்து விளங்கிய இவர் வாழவும் கெடவும் பாடுந் திறன் பெற்றதனால் வரகவி எனப் போற்றப்பட்டார். பிள்ளையார் கதை, சிவராத்திரி புராணம், ஏகாதாசிப்புராணம், கிள்ளைவிடு தூது, அமுதாகரம் முதலான அரிய நூல்கள் இவரால் இயற்றப்பட்டன.

இவரைத் தொடர்ந்து புலவர் அம்பலவாண பிள்ளையின் மகனான முத்துக்குமார கவிராசர் (1780-1850) இப்பிரதேசத்தில் இருந்து தமிழுக்கு வளம் சேர்த்தார். சிதம்பர நடராஜர் தோத்திரம் எனப் பலவற்றைப் பாடிய அவர் யேசுமத பரிகாரம் எனும் கண்டனத்தையும் பாடினார். முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகரான முத்துக்குமாரக் கவிராசர் 'கவிராச சேகரம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவராவார்.

அவரைத் தொடர்ந்து ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் புகழ் பூத்த இலக்கண, இலக்கிய விற்பன்னராக முருகேச பண்டிதர் (1829 - 1900) விளங்கினார். எனது தாய் வழிப் பூட்டனாரான இவர் இலக்கியம் படைத்ததைக் காட்டிலும் ஐயந்திரிபறக் கற்பிக்கும் ஆசிரியராகவே சிறந்து விளங்கினார். பஞ்ச இலக்கணத்திலும் துறை போன இவர் இலக்கணத் தவறுகளைக் கண்டறிந்து கண்டனங்கள் விடுப்பவராவார். இதனால் இவர் 'இலக்கணக் கொட்டர்' என அழைக்கப்பட்டார்.

பூதப்பிள்ளை - உமைநாச்சியம்மை தம்பதியினரின் மகனான இவர் கதிராசிப் பிள்ளையை மணந்து அவரது பூர்வீக இடமான சுன்னாகம் தெற்கில் - இன்று முருகேச பண்டிதர் வீதி என அழைக்கப்படும் இடத்தில் - அவர்களது வீட்டில் வாழ்ந்து வந்தார். துரதிஷ்ர வசமாக அவருக்குப் புத்திர பாக்கியமில்லை. 'மிளகாயை அரைத்து தலையில் தப்பித் தோய்கின்ற வழக்கம் அவரிடம் இருந்தது. அத்துடன் மிளகாயைத் திரணையாக வைத்துச் சோற்றுடன் உண்ணும் வழக்கமும் அவரிடம் இருந்தது' என எனது பேரனார் ஆ.செல்லையா தெரிவித்திருந்தார். இதனை உறுதி செய்வது போல 1938 ஆம் ஆண்டு ஈழகேசரியில் தி.சதாசிவ ஐயர் எழுதிய குறிப்பும் உள்ளது. அவரை ஊரில் உள்ளவர்கள் 'மிளகாய்ச்சட்டம்பியார்' எனவும் பட்டப்பெயர் கொண்டு அழைத்துள்ளனர்.

பண்டிதர் கதிர்காமத்துக்குக் கால்நடையாகச் சென்று வரும்போது மனைவியை இழந்து ஊர் மீண்டார். ஊரில் வாழ்ந்த அவருக்கு உறவினர்கள் சார்ந்து சில பிரச்சினைகள் ஏற்பட்டன. அவர் காது படவே ஏளனம் செய்யும் வகையில் சில உறவினர்கள் நடந்து கொண்டனர். அதனால் வெறுப்புற்ற அவர் "ஒரு மக்கட்குண்டோ உயர்வு" என்பதை ஈற்றடியாகக் கொண்ட கையறம் பாடி விட்டு ஊரை விட்டு வெளியேறி இந்தியா சென்று விட்டார். அங்கே இரு தசாப்தங்களுக்கு மேல் வாழ்ந்து இறையடி சேர்ந்தார். பின்னாளில் இந்தக் கையறத்துக்கு மாற்றாக இணுவில் வீரமணி ஐயரைக் கொண்டு "திருவேறு சுன்னைநகர் திகழ்ந்தி லங்கித்தீந் தமிழால் அருளாளன் நூல் படைத்து அணியணியாய்க் குவித்திடவே" என ஊரை வாழ்த்தும் செய்யுள் இயற்றி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இவை எதுவும் இன்றில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950ஆம் ஆண்டு எமது ஊரிலுள்ள பெரியவர்களான எனது உறவினர்கள் இணைந்து "முருகேச பண்டிதர் ஞாபகார்த்தச் சபை" ஒன்றினை அமைத்து முருகேச பண்டிதரின் படைப் புக்களை வெளியிட முனைந்தனர். அதன் பிரகாரம் குமாரசாமிப்புலவரது மகனான கு.முத்துக்குமாரசாமிப்பிள்ளையின் தொகுப்பில் பலரது நிதிப்பங்களிப்புடன் 1950 இல் **முருகேச பண்டிதர் பிரபந்த திரட்டு** வெளியிடப்பட்டது. அது இன்று கிடைத்தற்கரிய நூலாகி விட்டது.

இந்த நூலுடன் முருகேச பண்டிதர் தொடர்பான ஏனைய விடயங்களையும் சேர்த்து ஒரு நூலாக வெளியிடும் எண்ணம் என்னிடம் பல காலமாக இருந்தது . 1990 களின் ஆரம்பத்தில் இதனை வெளியிட ஒரு முயற்சி எடுத்திருந்தேன். இதன் பொருட்டு தேடலில் ஈடுபட்ட வேளை அரும்பொருள்கள் சேகரிப்பாளர் கலைஞானியிடம் முருகேச பண்டிதருடைய ஒரு படத்தைப் பார்க்க நேர்ந்தது. பண்டிதருடைய தமையனான சுப்பிரமணியம் பிச் (FITCH) குடும்பத்துடன் பண்டிதர் நிற்கும் குழுப் படமே அது. எனினும் அதன் பிரதியொன்றைப் பதிப்பித்துத் தருவதற்கு அவர் மறுத்து விட்டார். மாறாக ஓவியர் ஞானகுருவைக் கொண்டு பெரிய படமாக வரைவதற்கு எம்மை நிதியுதவி நல்குமாறு கேட்டுக் கொண்டார். எமது உறவினர்கள் சிலருடன் நானும் கலைஞானி அவர்களும் பேசி, அதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தோம். எனினும் யுத்தமும், தொடர்ந்த இடம் பெயர்வும் எல்லாவற்றையும் நிறுத்தி விட்டது. கலைஞானியின் அரும்பொருள்கள் பெருமளவில் அழிந்து போனதுடன் அவரும் அமரத்துவம் அடைந்து விட்டார். பின்னர் 2002 ஆம் ஆண்டில் மீண்டும் முயற்சி எடுக்கப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்ட நிலையில் அதுவும் நின்று போனது.

சுன்னாகம் பொது நூலகத்தால் வெள்ளி மலை என்ற பெயரில் ஒரு சஞ்சிகை 2007 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் வெளிவந்தது. அதன் ஆசிரியர் குழுவில் நானும் இருந்தேன். நண்பர் சி.ரமேஷ் அவர்களும் இருந்தார். முருகேச பண்டிதர் தொடர்பிலும், அவரது படைப்புக்கள் தொடர்பிலும் விரிவாக எழுதுமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். வெள்ளிமலை மூன்றாவது இதழில் இருந்து எட்டாவது இதழ் வரை அவர் தொடராக எழுதினார். திரு.க.சௌந்தராஜன் ஐயா அதனை வெள்ளிமலையில் பிரசுரித்து உதவினார்.

வலி.தெற்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகஸ்தராகக் கடமையேற்ற திருமதி றஜனி நரேந்திரா அவர்கள் பழந் தமிழ் நூல்களைத் தேடி எடுத்துப் பதிப்பிக்கும் ஆர்வத்தில் என்னுடன் கதைத்தபோது, முருகேச பண்டிதரின் நூலை வெளியிடப் பிரயத்தனப்படும் எனது எண்ணத்தைச் சொன்னேன். உடனேயே செயலில் இறங்கிய அவர் அதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்தார். பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி அவர் கள் மிக உத்வேகத்துடன் எமது மரபுச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கினராய் இருப்பதால், உடனேயே நிதியொதுக்கி, அனுமதி தந்தார்.

முருகேச பண்டிதர் தொடர்பிலான பல விடயங்களை சி.ரமேஷ் தேடித் தந்து உதவினார். இந்தப் பிரபந்தங்களுக்கு உரை எழுத வேண்டும் என்ற ஆவலில் சக கலாசார உத்தியோகஸ்தர் அ.சிவஞானசீலன் அவர்கள் பல பண்டிதர்களை அணுகி முயற்சி எடுத்தார். எனினும், முருகேச பண்டிதரின் கடுந்தமிழுக்கு உரையெழுதும் கடின நிலையால் அவர்கள் பின்வாங்கியமையால் அது கைகூடவில்லை. பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் அவர்கள் சில பாடல்களுக்கு உரையெழுதினார். எனினும், முழுமை கருதி அவற்றை இப்பதிப்பில் சேர்க்கவில்லை. இதனை முழுமைப்படுத்தி, அடுத்த பதிப்புக்களில் வெளியிட எண்ணியுள்ளோம். ஓய்வுநிலை நூலகர் க.சௌந்தரராஜன் ஐயர் அவர்கள் மெய்ப்புத் திருத்தி உதவினார். தேடித் தொகுத்த விடயங் களுடன் முருகேச பண்டிதம் வெளிவருவது மிக்க மகிழ்வைத் தருகிறது.

இதனை வெளியிடுவதற்குத் துணை நின்ற இவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

– சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்)

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டு

முருகேச பண்டிதர் ஞாபகார்த்த சபையார்
விரும்பிய வண்ணம்

சுன்னாகம்
கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
தொகுத்தது

புலவரகம்

மயிலணி சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

முருகேச பண்டிதர் அவர்கள் இற்றைக்கு ஐம்பத்தாறு வருடங்களுக்கு முன் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரும் புலவராகத் திகழ்ந்தனர். அக்காலத்தில் அவருடைய பெருமையை அறியாதார் இலர். அவர் கிறீஸ்தவ பாதிரிமார்கள் செய்து வந்த சைவநிந்தனையைப் பொறுக்கமாட்டாது கண்டனப்பத்திரங்கள் வாயிலானும் பிரசங்கவாயிலானும் அவர்களை அடங்கச் செய்து சைவசமயத்தை வளர்த்த பெருமை யாவராலும் பாராட்டற்பாலது. இவ்விஷயத்தில் அவர் ஆறுமுகநாவலருக்கும் உறுதுணையாக விளங்கினர். அன்னார் இயற்றிய நூல்கள் இக்காலத்தில் கிடைத்தற்கரியவாயினமையால் அவருடைய சிறந்த மாணவராகிய வித்துவசிரோமணி குமாரசுவாமிப்புலவருடைய மகன் திரு.முத்துக்குமார சுவாமிப்பிள்ளை B.A.அவர்களைப் பண்டிதர் இயற்றிய நூல்களைத் தேடித் தொகுக்குமாறு வேண்டினோம். அவர் எமது வேண்டுகோட்கு இணங்கி இயன்றவரை முயன்று பண்டிதருடைய நூல்களைத் தொகுத்துத் தந்துள்ளார். இதைப் புலவரக வெளியீட்டிலொன்றாக வெளியிடவும் இசைந்துள்ளார். இதற்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையதென்பது மிகையாகாது.

இந்நூலை அச்சிடுவதற்குத் தமிழபிமானம் மிக்க அவருடைய வழித்தோன்றல்கள் பொருளுதவி புரிந்தனர். அவருடைய நன்றி பெரிதும் பாராட்டக் கூடியதாகும். பணமுதவியவர்களின் அட்டவணை கீழே காட்டப்படுகின்றது.

ச.பொன்னம்பலம்
சி.நவரத்தினம்.
(இணைச்செயலாளர் மு.ப.ஞா.சபை)

பணமுதவியவர்கள்

	ரூபா சதம்
திரு.ச.பொன்னம்பலம் Asst.Supt.Surveys	100.00
திரு.சி.நவரத்தினம் Land Office	100.00
திரு.சு.சண்முகம் G.P.O	50.00
திரு.ஆ.செல்லையா F.M.S.	25.00
திரு.வே.தம்பையா F.M.S.Pensioner	25.00
திரு.W.P.A.குக் Retd.Div.Ag.Officer	25.00
திரு.செ.மாணிக்கவாசகர் Teacher	25.00
திரு. மு.நவரத்தினம் Federal Treasury F.M.S.	25.00
திரு. T.நடராசா சுன்னாகம்	25.00
திருமதி இராசம்மா பொன்னம்பலம் சுன்னாகம்	25.00
திரு. சி.செல்லையா Irrig.Dept.	25.00
திரு. R.C.S.குக் Asst.Registrar.C.Societies	20.00
திரு. சீ.நல்லதம்பி	10.00
திரு. மூ.பொன்னுத்துரை	10.00
திரு. கு.சிவசம்பு Retired Teacher	10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப்பாயிரம்

உடுவில் தமிழ்ப்புலவர்

உயர்திரு. வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள்

சாற்றியது

பொன்னாரும் புனற்கொன்றைப் புரிசடையார்
போதமுற வருள்செய்த விருமொழியுள்
தென்னாடு வழங்கொழிக்குந் தீந்தமிழிற்
சிறந்தபல விலக்கணமு மிலக்கியமுஞ்
சின்னாளிற் கற்றுயர்ந்த திருவுடையோன்
செவ்வேளின் பதமலர்கள் தியானிப்போன்
சுன்னாக மாநகரோன் முருகேச
சுகுணமணி சொற்றகவி யளப்பிலவே.

பத்திமிகு பாக்களன்றிக் கத்திய நூல்
பாங்காக அளித்தமையும் பகரொணாதால்
சுத்தசைவ நெறிகண்ட தூயபுகழ்
நாவலர்க்குத் துணையான முருகேச
வித்தகனார் விளங்குவட நூறெரிந்த
குமாரசுவா மித்தோன்றல் வியன்குருவே
இத்திறத்த விலக்கணக்கொட் டாரமான
எழிலாரும் பண்டிதரின் கவிகணன்றே

விரவுதமிழ்ப் புலமையுடன் விஞ்ஞான
வீறுகலை யாங்கிலமும் உணர்ந்தசெம்மல்
வரகுணத்தோர் புகழ்முத்துக் குமாரசாமி
மதிமிக்கோன் மாண்பான கவிகளெலாங்
கரலிகித வழுக்களைந்து கவினிதாகக்
கவிஞருக்கு விருந்தளித்தான் அன்னசெயல்
பாவரிய பாரிலென்றுந் திகழ்ந்துமேவப்
பாராட்டித் துணையாத லாற்றனன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

முகவுரை

பதிப்புரை

சிறப்புப்பாயிரம்

நூலாசிரியர் வரலாறு

முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு

சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல்

சிவபூதராயர் ஊஞ்சல்

மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல்

மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல்

மயிலணிச் சிலேடை வெண்பா

மயிலணி விசாலாட்சி அம்மை பதிகம்

வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல்

குடந்தை வெண்பா

பதார்த்ததீபிகை

நீதிநூறு

தனிச் செய்யுட்கள்

முருகேச பண்டிதர் புகழ்மாலை

அநுபந்தம்

முருகேச பண்டிதர் வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் வரலாறு

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் தமிழ்ப் புலவர் பலர் தோன்றுவதற்கு இடமாக விளங்கிய பெருமையுடையது. முதன்முதல் சுன்னாகத்தில் தோன்றிய தமிழ்ப்புலவர் காசி மாநகரினின்றும் வந்து குடியேறிய அரங்கநாதையர் மகன் வரதபண்டிதராவர். அவர் வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றுப் பெரும் புலவராகத் திகழ்ந்தனர். சிவராத்திரிப் புராணம், கிள்ளிவிடுதூது, அமுதாகரம் முதலிய பல அரிய நூல்களை இயற்றியவரும் அவரே. அவருக்குப் பின்னர் முத்தகக் கவிபாடுவதில் வித்தகராகிய முத்துக்குமார கவிராசரவர்கள் 1780 இல் தோன்றி ஞானக் கும்மி, யேசுமதபரிகாரம் முதலிய பல நூல்களை இயற்றிப் புகழ் படைத்தனர். 1824 ஆம் ஆண்டிற்றோன்றிய வடமொழிப் புலவர் நாகநாத பண்டிதரவர்கள் இதோபதேசம் முதலிய பல நூல்களை இயற்றினார். 1829 ஆம் ஆண்டிற்றோன்றிய சங்கரபண்டிதரவர்கள் வடமொழி தென்மொழி என்னும் இருமொழிகளிலும் வல்லுனராய்ச் சைவப்பிரகாசனம், சப்த சங்கிரகம் முதலிய அரிய நூல்களை இயற்றிச் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றினர். அப்புலவர் வரிசையில் ஐந்தாவது பெரும் புலவராக விளங்கியவர் மகா கவியாகிய முருகேச பண்டிதராவர். அவர் யாழ்ப்பாணத்திலும் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் தன்னிகரில்லாத் தனிப்பெரும் புலவராக விளங்கியவர். கும்பகோணம் வைத்தியநாத தேசிகர் அவர்கள் அவரது கவிதாசக்தியை வியந்து "தோமறு தமிழ்ச்சொன் மாரி தொலைவின்றிப் பொழியுமேகம்" என்று கூறிய செய்யுட்பகுதியும் அவர் பெருமையைப் புலப்படுத்துகின்றது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் இலக்கிய, இலக்கண அறிவு நிரம்பப் பெற்ற பெரும்புலவர் முருகேச பண்டிதர் என்பது கூறாதே அமையும்.

தோற்றம்

முருகேச பண்டிதரவர்கள் யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தில் சைவ வேளாண் குலத்தில் உதித்த பூதப்பிள்ளை அவர்களுக்கும், அவர் மனைவி உமை நாச்சியம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக 1829 ஆம் ஆண்டு தோன்றினார். அவருடைய தந்தையார் சயம்புடையாருடைய மகன் சிற்றம்பலம் என்பவரின் புத்திரராவர். கல்வியறிவிற் சிறந்தவராதல் பற்றி அவர் "சட்டம்பியார் பூதப்பிள்ளை" என்று யாவராலும் அழைக்கப்பட்டார். பண்டிதருடைய தாயார் வேதாரணியப் புலவர் மகன் சுப்பிரமணியர் என்பவரின் புத்திரியாவர். தாய்மரபுந் தந்தைமரபுந் தமிழ்க் கல்வி வளம் பொருந்தியதாதலின் முருகேச பண்டிதரும் இயல்பாகவே தமிழ்க் கல்வியில் அதிகம் ஊக்கம் காட்டினர். பண்டிதருடன் உடன் பிறந்தார் சுப்பிரமணியர், கதிர்காமர், நன்னியம்மை என்னும் மூவராவர். மூத்த தமையனாராகிய சுப்பிரமணியர் என்பவர் பாடசாலையிற் கற்கும்போதே கிறீஸ்தவ மதம் புகுந்து "பிச்" (Fitch) என்னும் நாமமும் பூண்டு கிறீஸ்தவப் போதகராய் இலங்கையிலும் இந்தியாவிலும் உத்தியோகம் பார்ப்பாராயினர். மற்றையோர் வேளாண் தொழிலைக் கடைப்பிடித்து சீருஞ் சிறப்போடும் வாழ்ந்தனர். அவர்களுடைய சந்ததியார் இன்றும் சிறப்போடு வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணக்கொட்டர்

முருகேசபண்டிதர் தமது இளமைக் காலத்தில் அவ்வூர் வாசியாகிய சிவசங்கர பண்டிதரிடம் சித்தாந்த தருக்க சாஸ்திரங்களை முறையே கற்றார். அவ்வாறு கற்றமையோட மையாது மேலும் மேலும் கற்கவேண்டும் என்னும் அவா மேலீட்டினால் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை அடைந்து பஞ்சலக்கணங்களையும், பாரதம், இராமாயணம் முதலிய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேறினர். அவருடைய பஞ்சலக்கணத் தேர்ச்சியையும் கவியியற்றுந் திறமையையும் யாவரும் மெச்சுவாராயினார். புன்னை வித்துவ சிரோமணி கணேசையரவர்கள் முருகேச பண்டிதருடைய இலக்கண அறிவை வியந்து 'எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள் பழுத்துள நாவினன்' என்று புகழ்ந்திருக்கின்றனர். பேசும்போதும் எழுதும் போதும் பண்டிதரவர்கள் இலக்கண வழுக்கள் விரவாத வசனநடையைக் கையாளும் வழக்குடையர். பிறர் எழுதும் நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்து அவற்றிற் காணப்படும் இலக்கண வழுக்களைப் பத்திரிகைகள் மூலம் எழுதி வெளிப்படுத்தியும் வந்தனர். அவருடைய இலக்கண வன்மையை நன்கறிந்த எல்லோரும் அவரை "இலக்கணக் கொட்டர்" என்று கூறினர்.

கற்பித்த இடங்கள்

முருகேச பண்டிதருடைய கவிகள், கட்டுரைகள், பிரசங்கங்கள் அவருடைய புகழை எங்கும் பரவச் செய்தன. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து மாணவர்கள் வந்து அவரிடம் பாடங் கேட்டுச் சென்றனர். முதலில் சுன்னாகத்து மயிலணியில் ஓர் பாடசாலையைத் தாபித்து மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வி கற்பித்தனர். அக்காலத்தில் அவரிடம் பாடங் கேட்டவருள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், ஊரெழு சரவணமுத்துப் புலவர், மானிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை ஆகிய மூவரும் சிறந்தவராவர். சில காலத்திற்குப் பின் அவர் யாழ்ப் பாணத்திலுள்ள பலவிடங்களுக்குஞ் சென்று மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார். அவர் யாழ்ப்பாணத்திற் படிப்பித்த இடங்களைப் பின்வரும் சுன்னாகம் குமார சுவாமிப் புலவர் பாட்டால் அறியலாம்.

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்
துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

ஆறுமுகநாவலரை வெல்லக் கருதியது

அவர் யாழ்ப்பாணத்திற் படிப்பித்துப் புகழெய்தியவிடங்கள் ஏழாலையும் கோப்பாயுமாம். ஏழாலையில் சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களால் தொடங்கப் பெற்ற தமிழ் வித்தியாசாலையில் சிலகாலம் தலைமையாசிரியராகக் கடமையாற்றினர். முன்னர் அவர் கோப்பாயில் பிரபல பிரபுவும் நீதவானுமாகிய அம்பலவாணத்துரையவர்களால் தொடங்கப் பெற்ற வித்தியாசாலையில் ஏறக்குறையப் பத்துவருடகாலம் தலைமையாசிரியராகக் கடமை ஆற்றினர். அக்காலத்தில் முருகேச பண்டிதரது கல்வித்திறமையை யாவரும் அறியக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. நீதவானது ஆதரவும் பெருமையும் பண்டிதருடைய பெருமை விளங்குவதற்கு ஏதுவாயின. தமிழுக்கும் சைவத்துக்கும் பல திறப்பட்ட தொண்டுகளாற்றி அரும்புகழை ஈட்டிய நாவலர் கந்தபுராணம் முதலிய அரிய நூல்களைப் பதிப்பித்து தமிழை வளர்த்த காலமும் அதுவாகும். யாவரும் மெச்சும் நாவலரைப் பண்டிதர் வெல்லக் கருதினார். ஆறுமுக நாவலர் பதிப்பு நூல்களில் இலக்கணப் பிழைகள் இருப்பதாகப் பண்டிதர் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பருக்குக் கூறினர். பத்திரிகை வாயிலாக அவர் ஒன்றையும் வெளிப்படுத்தவில்லை. ஆறுமுகநாவலரும் தமது பதிப்பு நூல்களில் பண்டிதர் பிழை கண்டு கூறுகிறாரெனக் கேள்விப்பட்டு அவரைப் பற்றி விசாரணை செய்தனர். பண்டிதருக்கு மாறாக அவரும் ஒன்றையும் எழுதி வெளிப்படுத்தவில்லை. இப்படி அவர்கள் இருவரும் முரண்பட்டிருக்குங் காலத்தில் நாவலர் பிரசங்கமொன்று கோப்பாயில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நாவலருக்கு வரவேற்புரை கூறுமாறு பண்டிதர் நியமிக்கப்பட்டார். பண்டிதர் நாவலர் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்து வந்த ஒப்புயர்வற்ற தொண்டின் சிறப்பை மிகத் திறமையாக எடுத்துரைத்தனர். நாவலரும் தமது பிரசங்கத்தின் முடிவில் முருகேச பண்டிதருடைய தமிழ்ப்புலமையை வியந்து அவரைச் சிறந்த வித்துவானென்றும் பாராட்டினர். மேலும் நாவலர் அவரைத் தமது இல்லத்திற்கும் வரவழைத்தார். பண்டிதரும் நாவலர் வேண்டுகோட்கிணங்கி அவர் இல்லஞ் சென்று அவருடன் நெருங்கிய தொடர்பு பூண்டனர். அக்காலந் தொடக்கம் நாவலரவர்கள் புறச் சமயங்களைக் கண்டித்துச் சைவத்தை வளர்க்கும் வேலைக்கு முருகேச பண்டிதரை உறுதுணையாய்க் கொண்டனர். நாவலரிறந்ததைக் கேள்வியுற்றபோது பண்டிதரின் உணர்ச்சி ததும்பும் பாடல்கள் அவர் நாவலரிடத்தில் வைத்த பேரன்பை நன்கு புலப்படுத்தும்.

ஆரிருந்தென் ஆர்சிறந்தென் ஆறுமுக நாவலன் போல்
ஆரிருந்து போதிப்பார் ஐயையோ – வாரணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போல வரா.

அருளப்ப முதலியாரை வாதுக்கழைத்தது

1878 ஆம் ஆண்டு இந்தியாவினின்று கிறீஸ்தமதப் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்த கத்தோலிக்க மதத்தினராகிய அருளப்ப முதலியார் என்பவர் இங்குள்ள சைவ சமயத்தவர்களை மதமாற்றஞ் செய்யத் தலைப்பட்டுச் சைவ நிந்தை மலிந்த பல துண்டுப்பத்திரங்களை வெளியிட்டனர். அவற்றிற்குப் பண்டிதர் பத்திரிகைகள் மூலம் கண்டனம் வெளியிட்டனர். அவரியற்றிய சிறு நூல்களிலொன்று அலங்காரபஞ்சகம். முதலியாரது சமயக் கொள்கைகளையும், மதமாற்றப் பிரசாரத்தையும் தடை செய்யும் நோக்கத்தோடு பண்டிதரவர்கள் அலங்கார பஞ்சகத்திற் காணப்படும் இலக்கண வழுக்களைத் திரட்டி "அலங்கார பஞ்சக சண்டமாருதம்" என்னும் கண்டனப்பத்திரத்தை வெளிப்படுத்தினர். இலக்கணக் கொட்டருடைய இலக்கண ஆராய்ச்சியின் திறமையை அவருடைய கண்டனத்தால் நன்கறியலாம்.

அலங்கார பஞ்சக சண்டமாருதம்

(மூன்றாம் செய்யுள்)

செய்யுள் வருமாறு:

அரும்பிராமணத் தினிய கனியுதவு
அருங்கொடி பரிதி யம்பரத்தி
இருந்தராசாத்தி கழுமொரு நீதி
யிறைமக ளிணையறு மறத்தி
பொருந்த வெஞ்ஞான்று ஞானசக்கிலிச்சி
புல்லனை யருள்க நன்குறத்தி
மருந்தெனப் புகழு மருதமடுவினில்
வதிஜெப மாலை மாமரியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பாட்டுரைத்த முதலியார் பதம் பிரித்துரைப்பதிற் பிழைபடுவதென்ன? 'அருங்கொடி' 'இருந்தராசு' என்னுந் தொடர்களை, அரும் - கொடி, இரும் - தராசு எனப் பிரித்ததேன்? இவற்றிற்கு 'மை' இறுதியாவதன்றி "இனமிகல்" என்பதனாற்றோன்றிய மகாவொற்றுமிறுதியாகுமா? "மணத்தினியகனி" என்பதற்கு "வாசனையைக் கொண்ட இன்பமாகிய கனி" என்றுரைத்தவர் "மணத்து, இனிய" என்று பதம் பிரித்ததேன்? வினையெச்சம் "வாசனையைக் கொண்ட" என்னும் பெயரெச்சப் பொருளைத் தருமா? அவ்விடத்தகரம் தொகுத்தல் விகாரம் என்பதல்லவா தகுதி. அஃதன்றி அத்தொடரில் "இனிய" என்பதற்கு இன்பமாகிய எனப்பொருளுரைத்ததேன்? இனிமைக்கு இன்பம் பிரதிபதமாகுமோ? அது காரணத்தைக் காரியமாக உபசரித்தோர் வழக்கெனின் அதனை விசேடவுரையில் விளங்க வையாததேன்? விசேடமன்றென விடப்பட்டதெனின் முற்செய்யுள்களிலுரைத்த விசேடங்கள் இதனினும் விசேடமுள்ளனவா? "ஞானசக் கிலிச்சி" என்றால், "இச்சி" எ-கு "விரும்புகின்ற" எனப் பொருளுரைக்க ஆன்றோர் வழக்குண்டா? "இணையறு மறத்தி" என்பதன் பின்னர் "நன்குறத்தி" "மாலைமாமரியே" என்பவற்றையும் விசேடணங்களோடு சேர்த்தியுரைக்க அறியாமல் "அருள்க", என முடித்துத் திரும்ப "நன்குறத்தி" என்றும் "மாலைமாமரியே" என்றும் விளித்ததென்ன? இப்படி உரைப்பினும் பொருள் பொருந்துமெனின் பொழிப்புரையில் மாறியுரைத்ததென்ன?

இங்ஙனம் முருகேச பண்டிதரவர்கள் அலங்கார பஞ்சகத்தின் ஒவ்வொரு பாட்டுக்கும் இலங்கை நேசன் மூலம் கண்டனம் விடுத்தனர். முதலியார் முறையாகச் சமாதானங் கூறாது கத்தோலிக்க பாதுகாவலன் மூலம் சில கண்டனங்கள் வரைந்தனர். பண்டிதர் பத்திரிகை மூலம் கண்டிப்பதை விடுத்து பல புலவர் கூடிய மகாசபையிலே அருளப்ப முதலியாரை வாதுக்கு வருமாறு இலங்கை நேசன் (2-5-1878) பத்திரிகையில் வாதவிளம்பரம் விடுத்தார். முதலியார் முன்வரவில்லை. பண்டிதரவர்கள் முதலியாரைக் கண்டித்து "முத்தகத்திரயம்" என்ற பெயரோடு மூன்று பாக்கள் சிலேடைப் பொருளில் பாடினர். இத்துடன் அருளப்ப முதலியாரும் அடங்கினர். சண்டையும் முடிவுற்றது.

இந்தியா சென்றது

1878 ஆம் ஆண்டு பண்டிதருடைய வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டன. அவருடைய மனைவி கதிராசியம்மையார் கதிர்காம யாத்திரைக்கு அவரோடு சென்று திரும்பும்போது நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பண்டிதருக்குப் பிள்ளைகளும் இல்லை. நெருங்கிய சுற்றத்தவரோடிணங்கி வாழ்ந்து பிற்காலத்தைச் சுன்னாகத்திற் கழிக்கும் கருத்தும் அவரிடம் இல்லை. குடும்பப் பிணக்குகளும் அவருடைய மனவமைதியைக் குலைத்தன. சைவத்துக்கும் தமிழுக்கும் உறைவிடமாக விளங்கும் தமிழ் நாட்டில் தமது பிறகாலத்தைக் கழிப்பது உசிதமெனத் தீர்மானித்துக் கொண்டு 1878 ஆம் ஆண்டு அங்கு பிரயாணமானார். அவர் இந்தியாவில், கும்பகோணம், சென்னை, சிதம்பரம், காஞ்சீபுரம், சேலம், திருப்பாற்றூர் முதலிய இடங்களில் இருபத்திரண்டு வருடகாலம் கல்வி கற்பித்துக் கொண்டும், நூல்களியற்றிக் கொண்டும் காலம் கழித்தனர்.

தியாகராசச் செட்டியாரைத் திகைக்க வைத்தது

முருகேச பண்டிதர் முதலில் கும்பகோணஞ் சென்று ஆசிரியராக வேலை பார்க்கக் கருதி ஆங்குள்ள உயர்தரப் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர் வேலை காலியாக இருப்பதைக் கேள்விப்பட்டு அவ்வேலைக்கு மனுப்பண்ணினார். மனுப்பண்ணியவர்கள் அநேகராய் இருந்தமையால் அவர்கள் எல்லோரையும் தமிழ்ப்பண்டிதர் தியாகராசச் செட்டியாரைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீக்ஷிப்பித்து வேலை கொடுப்பதாக கும்பகோணம் கல்லூரி அதிபர் கோபாலறாவ் தீர்மானித்தனர். ஆறுமுகநாவலரை வெல்லக் கருதிய அவர் தமது ஐம்பதாவது வயசில் தியாகராசச் செட்டியாரது எழுத்துப் பரீஷைக்கிருப்பதென்பது அவருக்கு மிக்க வெறுப்பை உண்டு பண்ணியது. உத்தியோகக் கவர்ச்சியினால் தூண்டப்பட்டவராய்ப் பல பண்டிதர்களோடும் பரீஷைக்குப் போயினர். கேள்விப்பத்திரம் கொடுக்கப்பட்டது. கேள்விப்பத்திரத்தில் உள்ள இலக்கணப் பிழைகளைக் கீறி, தக்க நியாயங்களும் கூறி, கேள்வி கேட்கும் முறையையும் ஒரு பாட்டிலமைத்துத் தியாகராசச் செட்டியார் கேள்விப்பத்திரம் தயாரிக்கத் தகுதியற்றவரென்பதையுங் குறித்துத் தமது விடைப்பத்திரத்தை எல்லோருக்கும் முன்னர் கொடுத்து விட்டுச் சென்றனர். தியாகராசச் செட்டியார் பண்டிதருடைய விடைகளை வாசித்து அவருடைய பஞ்சலக்கணத் திறமையைக் கண்டு திகைத்துப்போயினர். கோபாலறாவ் பண்டிதருடைய மதிநுட்பத்தை வியந்து அவரையே பண்டித வேலையில் அமர்த்தினர். அப்பாடசாலையில் எட்டு வருடங்கள் வரையில் வேலை பார்த்தனர்.

சீவகசிந்தாமணி வழுப் பிரகரணம்

முருகேச பண்டிதர் பட்டண உயர்தரக் கலாசாலையில் ஆசிரியராக இருக்கின்ற காலத்தில் கும்பகோணக் கல்லூரியில் டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். ஐயரவர்கள் 1887 ஆம் ஆண்டு சீவக சிந்தாமணி என்னும் நூலைத் திருத்திப் பதிப்பித்தார். அதில் அநேகம் பிழைகள் இருப்பதைக் கண்ட பண்டிதரவர்கள் "சீவக சிந்தாமணி வழுப்பிரகரணம்" என்னும் கண்டனத்தை வரைந்தனர். பண்டிதருடைய கண்டனத்திற்கு மறுப்பாக ஐயரவர்கள் மாணாக்கராகிய குடவாயில் சண்முகம்பிள்ளையவர்கள் ஓர் கண்டனம் எழுதினர். முருகேச பண்டிதர் அவர்களை வெல்லக்கருதி ஐயரவர்களையும் சண்முகம்பிள்ளை அவர்களையும் பகிரங்க வாதுக்கழைத்தனர். ஒருவரும் முன்வரவில்லை. வாதவிளம்பரம் கீழே தரப்படுகின்றது.

வாத விளம்பரம்

"கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீமத் சாமிநாதையரவர்களாவது, அவர்களுடைய மாணாக்கராகிய குடவாயில் ம.ள.ள.ஸ்ரீஜ.சண்முகம் பிள்ளையாவது, அவர்களைச் சார்ந்த பிறராவது சீவகசிந்தாமணி வழுப்பிரகரணத்தால் காட்டிய பிழைகளைப் பிழைகளல்ல என்று தக்க நியாயத்தோடு அறிஞர்கள் பலர் கூடிய சபையில் திக்கரித்துக் காட்டுவார்களாகில், சிக்கிநாயக்கன் பேட்டை இராகவாச்சாரியர் அவர்களும் தமது நியாய வாதா பாச நிராகரணத்தில் தாம் ஒப்புக்கொண்டு காட்டிய நியாயங்களையும் ஓர் ஆக்ஷேபத்துக்குமிடமின்றி அச்சபையில் தக்க நியாயத்தோடு தாபித்துக் காட்டச் சித்தமாயிருக்கிறார்.

"சீவகசிந்தாமணிப் பதிப்பிற் காட்டிய பிழைகளைப் பிழைகளென்றே யாம் ஒத்துக் கொண்டோம். இராகவாச்சாரியரே நியாயவாதபாச நிராகரண நிறுப்புச் செய்திடுக" என்னினும் தக்கவர்கள் முன்னிலையில் அவ்வாறு செய்தலும் அவருக்குச் சம்மதிதான். ஆதலால் அபிப்பிராயத்தோடு பொது இடமும் நாளுங் குறிக்க"

இங்ஙனம்
பு.முருகேசபிள்ளை
(சந்திரபானு அச்சுக்கூடம்)

சர்வதாரி வருடம்
ஐப்பசி மாதம் 19ஆம் நாள்
காஞ்சீபுரம்.1888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் காட்டிய பிழைகளுட் பல இரண்டாம் பதிப்பில் திருத்தமடைந்திருக்கின்றன. இச்சம்பவத்தின் பின்னர் ஐயரவர்களுக்கும் பண்டிதரவர்களுக்குமிடையில் மனவேற்றுமை ஏற்பட்டது.

காஞ்சீபுரத்தில் வாழ்க்கை

பண்டிதரவர்கள் கும்பகோணம் பட்டண உயர்தரக் கலாசாலையில் எட்டு வருடகாலம் படிப்பித்த பின்னர் காஞ்சீபுரத்தில் சில காலந் தங்கிப் பல மாணவர்களுக்கு இலக்கிய, இலக்கணங்கள் கற்பித்தனர். காஞ்சீபுரத்தில் பண்டிதர் இருந்தபோது அவரோடு நெருங்கிப் பழகிய தமிழ்ப் பண்டிதர் திரு.கோ.இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் எனக்குப் பண்டிதரவர்களது வித்துவத் திறமையை வியந்து கூறியிருக்கிறார். அவர் பேசும்போது இலக்கணச் சுவையோடு பேசும் வழக்குடையர் என்பதற்குப் பின்வரும் சம்பவத்தையும் எனக்குக் கூறினர். பண்டிதர் காஞ்சியில் சில புலவ நண்பர்களைப் பார்த்து "சாப்பாடாயிற்றா?" என்று வினவப் புலவர்களும் 'ஆம் சாப்பாடாயிற்று' என்று பகர்ந்தனர். பண்டிதர் "என்ன வேடிக்கை. சாப்பாடாயிற்றெனின் நீவிர் உயிரோடு இருக்க முடியுமா? இறத்தற் பொருளைத் தரும் "சா" அடியாகப் பிறந்த தொழிற் பெயராகிய சாப்பாட்டைப் பற்றியல்லவா கேட்டேன்" என்று கூறி யாவரையும் மகிழச் செய்தனர்.

சென்னை வாசம்

பண்டிதரவர்கள் காஞ்சீபுரம், சிதம்பரம் முதலிய இடங்களில் ஏறக்குறைய ஐந்து வருடகாலந் தங்கி பின்னர் சென்னைக்குச் சென்றார். அங்கு அவர் தமது பிற்கால வாழ்க்கைக் குறுதுணையாயிருந்தவர்களாகிய பெருமாள் நாடார், வெள்ளைய நாடார் என்போரின் நட்பைப் பெற்று அவர்களால் நடாத்தப் பெற்ற அச்சுக்கூடத்தில் நூற்பரிசோதகராக வேலை பார்த்து வந்தனர். தூய உள்ளமும் சீரிய எண்ணமும் படைத்த பண்டிதருக்கும் நாடார்களுக்குமிடையில் நட்பு வளர்ந்தது. அவர்கள் பண்டிதருடைய வித்துவத் திறமையையும் புலமையையும் நோக்கி அவரைக் கடைசிவரையும் தம்முடனே வைத்திருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். அவர்கள் சென்னையிலிருந்த தமது அச்சகத்தை சேலம் ஜில்லாவிலுள்ள திருப்பாற்றூருக்குக் கொண்டு போய் அமைத்தபோது பண்டிதரையும் அங்கு கூட்டிச் சென்றனர். வெள்ளைய நாடாரின் வேண்டுகோட்படி அவர் தமது இறுதிக் காலத்தைத் திருப்பாற்றூரில் கழிக்க இயைந்தனர். திருப்பாற்றூரில் அவர் புத்தகங்கள் பதிப்பிப்பதிலும் நாடார்கள் நடாத்தி வந்த "அமிர்தகுண போதினி" என்னும் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வதிலும் காலங் கழித்தனர்.

நூல்கள்

முருகேச பண்டிதர் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவை சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், பூதராயர் ஊஞ்சல், மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல், மயிலணி மகா விஷ்ணு ஊஞ்சல், வத்தாக்கை அம்மன் ஊஞ்சல், மயிலணி விசாலாட்சி அம்மன் பதிகம் (1877) குடந்தை வெண்பா (1882) மயிலணிச் சிலேடை வெண்பா, பதார்த்த தீபிகை, நீதிநூறு (1886) முதலியன.

நூற்றிறன் முதலியன

யாழ்ப்பாணத்தில் வசித்த சிறந்த புலவர்களுள் ஆசுகவியாக விளங்கிய முருகேச பண்டிதரவர்களே சிறந்தவரென்பது மிகையாகாது. எவ்விஷயத்தைப் பற்றியும் உடனே கஷ்டமின்றிச் செய்யுளியற்றும் வன்மை மிக்கவர். அவர் இயற்றிய நூல்கள் தோறும் புராண வரலாறுகளும் சாஸ்திர உண்மைகளும் மலிந்து விளங்குகின்றன. பாக்களில் வரும் கற்பனைப் பெருமையும், கருத்துப் பெருமையும், கவித்துவமும், பிறநயங்களும் படிப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு இன்பமும் பக்தியும் அளிக்க வல்லன. பண்டிதரியற்றிய ஊஞ்சல்கள் அனுப்பிராசங்கள் அமைந்து ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் கொண்டு விளங்குகின்றன. குடந்தை வெண்பா, நீதிநூறு, மயிலணிச் சிலேடை வெண்பா என்னும் நூல்கள் வெண்பாக்களினால் ஆக்கப்பட்டவை. குடந்தை வெண்பாவில் வரும் ஒவ்வொரு வெண்பாவிலுமுள்ள முதலிரண் டடிகளில் தல மகிமையை அடக்கிப் பின் இரண்டடியிலும் மடக்கமையப் பாடப்பட்டிருக்கிறது. இந்நூல் கும்பகோணம் வைத்தியநாத தேசிகர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மானிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை, கும்பகோணம் சபாபதிச் செட்டியார், இராகவ ஐயங்கார், உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் என்பவர்களுடைய சிறப்புப் பாயிரங்களோடு 1882 இல் வெளி வந்தது. நீதி நூறு கவிச் சிறப்பினாலும் பொருட்சிறப்பினாலும் நீதி நெறி விளக்கத்திற்கு இணையாக விளங்குகின்றது. அறம் பொருள் இன்பம் முதலியன இந்நூலில் பொதித்து விளங்குகின்றன. இக்காலத்தில் இதுபோன்ற நூலை இயற்ற வல்லவர்கள் அரியரென்பது மிகையாது. மயிலணிச் சிலேடை வெண்பாவில் இருபத்தொரு பாக்கள் மாத்திரமே கிடைத் தன. பதார்த்த தீபிகை பண்டிதரது தருக்க நூலுணர்ச்சியை நன்கு புலப்படுத்துகின்றது. இது தருக்க நூலில் கூறப்படும் விஷயங்கள் எல்லாவற்றையும் எழுபத்தெட்டுக் கலித்துறைப் பாக்களில் அடக்கிச் சிறப்பாக இயற்றப்பட்டிருக்கின்றது.

தோற்றம் குணம் முதலியன

பண்டிதர் தோற்றத்தாற் கரியவர். உருவத்தாற் சிறிது குறுகிய பருகிய உடலமைப்புடை யவர். அவருடைய சரீர பௌதீக நிலைமைக்குக் காரமான உணவு அதிகம் வேண்டி யிருந்தது. அவர் சாப்பிடும்போது அரைத்த மிளகாய்த்திரள் ஒன்றைத் தின்னும் வழக் குடையவர். தலை முழுகும்போது, மிளகாய் அரைத்துத் தலைக்குத் தப்பி முழுகுவரென்றும் அக்காரணம் பற்றி அவரை அவர் மாணாக்கர் "மிளகாய்ச் சட்டம்பியார்" என்று அழைப்பது வழக்கம் என்றும் கூறுவர். அவர் மிக்க கோபமும் வெடு வெடுப்பான பேச்சுமுடையவர். புலமை நிரம்பாதாரியற்றும் நூல்களிற் காணுங் குற்றங்களை இலங்கை நேசன், உதயபானு முதலிய பத்திரிகைகள் மூலம் கண்டிப்பவர். கண்டன மூலம் பிழைபட எழுதின புலவரை வெல்ல முடியாதாயின் அவரைப் பகிரங்க வாதுக்கழைப்பவர். அவரோடு வாது புரிய எவரும் அஞ்சுவர். நீதிக்கும் உண்மைக்குமன்றி வேறொன்றுக்கும் அஞ்சாதவர். சுயநலத்திற்காகத் தமது பெருமையையும் பண வருவாயையும் மதித்து பிறருக்குப் பணியாதவர். எல்லா நன்றியிலும் செய்நன்றியைச் சொல்லிலும் செயலிலும் மறவாதவர். தமது ஆசிரியர்களை மற வாது தாமியற்றும் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஆசிரிய வணக்கம் கூறும் வழக்கமுடையவர்.

இறுதிக் காலம்

பண்டிதருடைய வயோதிக காலம் திருப்பாற்றூரிலே கழிந்தன. உடல் மெலிவுற்ற போதி லும் நூல்களியற்றுவதிலும் கல்வி கற்பிப்பதிலும் சோர்வின்றியிருந்தனர். வெள்ளைய நாடாரவர்கள் அவருக்கு வேண்டிய வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினபடியால் அவர் மனவமைதியோடு இறுதிக்காலத்தை ஒரு குறையுமின்றிச் சந்தோஷமாகக் கழித்தனர். அவர் கடவுள் பக்தி மிக்கவராய்ச் சுப்பிரமணிய உபாசகராய் விளங்கினர். உடல் வலிமை வர வரக் குன்றினதின் காரணமாக அவர் 1900 ஆம் ஆண்டு விகாரி வருஷம் ஆவணி மாதம் 10 ஆம் திகதி தேகவியோகமாயினர். இவரது உட லம் சகல சிறப்புக்களோடும் சமாதி வைக்கப்பட்டது.

பண்டிதரின் பூதவுடல் மறைந்து விட்டாலும் அவருடைய புகழுடம்பு என்றும் அழியாது நிலைக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் வரலாற்றுக்கால அட்டவணை

1829 –	பிறப்பு
1841 – 49	சங்கரபண்டிதரிடம் கல்வி கற்றல்.
1850 – 53	சிவசம்புப் புலவரிடம் கல்வி கற்றல், சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல், மகாவிஷ்ணு ஊஞ்சல், விசாலாட்சியம்மை பதிகம் இயற்றல்.
1854 – 66	புன்னாலைக்கட்டுவன், சிறுப்பிட்டி, அளவெட்டி, கல்வளை முதலிய இடங்களில் கல்வி கற்பித்தல், விவாகம்.
1867 – 76	கோப்பாய் அம்பலவாண முதலியார் பாடசாலையில் தலைமையாசிரியர் பதவி.
1877 –	ஏழாலை சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழ் வித்தியாசாலையில் தலைமையாசிரியர் பதவி. மயிலணிச் சிலேடை வெண்பா இயற்றல்.
1878 – 85	கதிர்காம யாத்திரை, மனைவி இறந்தது. இந்தியா சென்றது, கும்பகோணம் உயர்தரப்பாடசாலையில் பண்டிதர் வேலை, குடந்தை வெண்பா, நீதிநூறு இயற்றல்.
1886 – 90	சிதம்பர காஞ்சீபுர வாசம். சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம்.
1891 – 95	சென்னை வாசம் C.N.அச்சுக்கூடத்தில் நூற்பரிசோதகர் வேலை.
1896 – 1900	திருப்பாற்றூர் வாசம், பதார்த்ததீபிகை இயற்றல்
15-8-1900	தேகவியோகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு

சுன்னாகம்
சந்திரசேகரப்பிள்ளையார்
ஊஞ்சல்

காப்பு

திருமேவு கனகமலைச் சிகர மாகித்
 திகழிலங்கைக் கொருமுகமாய்த் திகழ்யாழ்ப் பாணத்(து)
உருமேவு திலகமென உலகம் எல்லாம்
 ஓங்குபுகழ்ச் சுன்னைநகர் உவந்து வாழும்
அருள்மேவு சந்திரசே கரப்பேர் பெற்ற
 அத்திமுகத் துத்தமனுக்(கு) ஐயிரண்டு
பொருள்மேவு கவிஊஞ்சல் இசையாற் பாடப்
 போற்றுகவென்(று) அவனடியைப் போற்று வாமே.

நூல்

மதியேறும் ஒலிதருமெய்ச் சைவ நூலும்
 மறைநூலும் என இரு தூண் வயங்க நாட்டி,
விதியேறு மவற்றுணர்முப் பொருளே என்ன
 விட்டவளை யொடுபலகை கயிறு மாட்டிக்,
கதியேறு மும்மையுமற் றவையி லாய்ந்து,
 கண்டவர்நெஞ் செனக்கண்ட பீடம் ஏறித்,
துதியேறு விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்,
 சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல், (1)

தும்பைமுடித் துளதாதை திருக்கண் சாத்தத்,
 துரகமயில் வருகுமரன் துதிகள் சாற்ற,
அம்புவிஉண் டருள்மாயன் அடிகள் போற்ற,
 அயனுமா சாத்தனும் வந்(து) அன்பின் ஏத்தச்,
சிம்புள்வடி வாய்வருவோன் கரங்கள் கூப்பச்
 செகமுழுது மானக்கஞ் சிறந்து தேங்கத்
தும்பிமுகம் படைத்தவரே! ஆடீர் ஊஞ்சல்
 சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல் (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைஉமைத் தாயர்மகிழ்ந்(து) அன்பு கூர
கமலவனி தையரும்அருள் கண்டு சாரப்.
பங்கயவே தாவேத கீதம் பாடப்.
பழுதில்நா ரதமுனியாழ் பண்பின் நாடப்.
புங்கவர்கள் எங்குமலர் மழையே தூவப்.
பூரணா னந்தமுடன் அடியேன் வாழத்.
துங்ககண நாயகரே! ஆடீர் ஊஞ்சல்.
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (3)

வெள்ளைவா ரணமகவான் கவரி புல்ல,
விரிகனலோன் விரியும்ஒளி விளக்கங் கொள்ளத்.
துள்ளிபடு பனிமழைநல் வருணன் தெள்ளச்.
சுரர்களா தியபதினெண் கணங்கள் துள்ள.
விள்ளரிய வேதமறை யோர்கள் விள்ள.
வெறுத்தடியேன் உலகாசை முழுதுந் தள்ளத்.
துள்ளுநதிச் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்.
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (4)

கந்தருவர் பாடவர மகளிர் ஆடக்.
கவிகைகவித்(து) இரவிமதி யோர்கள் நீட,
முந்துசதா கதிஆல வட்டம் போட,
முதியநான் மறைமுழக்கம் விண்மண் மூட.
வந்துகண நாதர்புடை மகிழ்ந்து கூட,
வறுமையெனும் பாவி எனை மருவா(து) ஓடச்.
சுந்தரமா முகத்தவரே! ஆடீர் ஊஞ்சல்.
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (5)

வல்லவையாம் வல்லவையும் சித்தி புத்தி
வல்லியர்க ளுங்கூட மகிழ்ந்து கூடும்
வல்லவனே! துப்புமலை வண்ணத் தானே!
வரதனே! வரனே! என்(று) அழுது நெஞ்சம்
சொல்லி அடி பரவுமடித் தொண்டனாகிச்,
சுகம்பெறீஇ வறுமைஎலாம் தொலைந்து வாழச்.
சொல்லரிய பூரணரே! ஆடீர் ஊஞ்சல்.
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவார் கலிஉலகிற் தலைமை ஆகத்
தலைநாணின் றதுவென்னத் தரணி எங்கும்
புக்கபுக ழிந்நாடே நந்நா டாகிப்
பொலியஉம(து) அடிமலரின் பொற்பி னாலே
பக்கமெலா முற்றவய னாவ லாறு
பாயுநிலம் போல்விளையும் பண்பின் ஓங்கத்
துக்கவடி வற்றவரே! ஆடீர் ஊஞ்சல்.
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (7)

எப்பொழுதும் அடிபணியும் அடியார் வாழ,
இலங்குதிரு விழாச்செய்யும் எழிலோர் வாழத்
தப்பில்திருக் கோயின்மதில் தந்தோர் வாழத்
தடாகமொடு நந்தவனஞ் சமைத்தோர் வாழச்,
செப்பியஉன் தளிபுதுக்கிப் பிரதிட்டை செய்த
செல்வர்களும் அல்லலெலாந் தீர்ந்து வாழத்,
துப்புமணி வண்ணத்தீர்! ஆடீர் ஊஞ்சல்.
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (8)

சடைமதியும் முக்கண்ணுந் தனிநூன் மார்புந்,
தவளமதிக் குழவியெனத் தயங்கு கோடும்,
இடைஅரவக் கச்சுமங்கை எழிலுஞ், சென்னி
இலங்குமுடி யுங்கவரி இசைத்த காதும்,
புடைபெயர ஒளிவீசு நுதலின் ஓடைப்
பொற்பும்அடி யேன்காணப் புரிந்து கொன்றைத்
தொடைபுனையுஞ் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (9)

திருப்பெறும் ஓர்கோடுடையீர்! ஆடீர் ஊஞ்சல்:
சேரார்தங் கோடுடையீர்! ஆடீர் ஊஞ்சல்:
அருப்புவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்:
அரியவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்:
விருப்பொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்:
வில்லொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்:
சுருப்புமுதன் மதலையரே! ஆடீர் ஊஞ்சல்:
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி

தரைவாழி, வாழிதவ மறையோர் வாழி,
தனவசியர் பூவசியர் தழைத்து வாழி,
நிரைவாழி, மகளிர்பதி விரதம் வாழி,
நிலமன்னர் வாழி, மறை முகில்கள் வாழி,
புரைதீர்மு ஷிகம்வாழி, சித்தி புத்தி
புனிதைகளும் வாழி, அருட் பொலிவினோடும்
மறைநேர்சே அடிவாழி, கணேசன் ஊஞ்சல்,
வாழி, சுன் னாகநகர் வாழி, வாழி.

எச்சரீக்கை

சுன்னாக நன் னகர்மேவிய தூயா! எச்சரீக்கை:
துணையாய்இருந் தருள்வாழ்வருள் துரியா! எச்சரீக்கை:
பொன்னாகவிற் பிடித்தான் அருள் புதல்வா! எச்சரீக்கை:
புவிமீதில்என் இடர்தீர்த்தருள் புனிதா! எச்சரீக்கை:

திறலார்கய முகவீரனைச் செகுத்தாய்! எச்சரீக்கை:
தினந்தோறும் மெய் அடியார்க்(கு) அருள் செய்வாய்! எச்சரீக்கை:
விறலார்வினை தீர்த்தாண்டருள் விமலா! எச்சரீக்கை:
வேண்டும்வரம் தந்தாளுமை பாலா! எச்சரிக்கை:

கல்லார்மனம் நில்லாஅருட் கடலே! எச்சரீக்கை:
கண்டார்தினம் கொண்டசெங் கதிரே! எச்சரீக்கை:
சொல்லார்பிர ணவமாயொளிர் தூயா! எச்சரீக்கை:
சுர ராதியர் தினமேதுதி சுடரே! எச்சரீக்கை:

பராக்கு

எண்திசையு மண்டுபுகழ் இறையே! பராக்கு:
என்னுயிருக்(கு) உயிரான இனியாய்! பராக்கு:
தொண்டுசெயும் அடியருளச் சோதீ! பராக்கு:
சுகநிதியை அருளமுதச் சுவையே பராக்கு:

சித்திபுத்தி மகிழின்பச் சீலா! பராக்கு:
சிறியேன்தன் பிழைபொறுக்குந் தேவா! பராக்கு:
பத்திசெயும் அன்பருளப் பதியே! பராக்கு:
பங்கயனுங் காணரிய பரனே! பராக்கு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவுமருள் உமையீன்ற குமரா! பராக்கு:
குஞ்சர முகத்தரிய கோலா! பராக்கு:
நிலவுவிரி சடையாளர் நேயா! பராக்கு:
நேடரிய பதமருளும் நீதா! பராக்கு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்
சிவபூதராயர் ஊஞ்சல்

காப்பு

தென்சுன்னை வாழுஞ் சிவபூத ராயர்தமக்(கு)
இன்சொன் மணிஊஞ்சல் ஈரைந்து - தேன்சொல்லாற்
சொல்லத் துணையாய்ச் சுவைக்குங் கரிமுகவன்
செல்வக் கமலவடித் தேன்.

நூல்

பொன்னாரும் பவளமணித் தூண்க ளாலும்,
பொற்புமிகும் வைரத்தின் வளையி னாலும்,
மின்னாருந் தரளமணி வடத்தி னாலும்,
விலைமதியா மாணிக்கப் பலகை யாலும்,
சுன்னாகந் தெற்குவாழ் வுறவே செய்த
சுடருமணி ஊஞ்சலின்பீ டத்தில் ஏறி
என்னாகங் குடிகொள்வீர்! ஆடீர் ஊஞ்சல்,
இறைசிவபூ தராயரே! ஆடீர் ஊஞ்சல். (1)

பக்கமெலா மிக்கமலர் மாலை யாலும்,
பந்தரெலாந் தொங்குமணி முத்தி னாலும்,
செக்கரெலாந் திரண்டனசெம் பட்டி னாலும்,
செய்துபல வாழைதோ ரணங்கள் நாட்டிச்
சொர்க்கமெனச் செய்தமணி மண்ட பத்தே
சுன்னாகந் தென்பதியோர் வாழ வாழ்ந்து
திக்கிறைவர் தொழுகழலீர்! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (2)

வையமெலாங் காக்கின்ற வரதன் என்றும்,
மலர்கமலந் துலக்கமுறும் வரனா ரென்றும்,
மெய்யெலாம் நீறுபுனை விமல னென்றும்,
வேறுபல சொல்லி அவர் அடியின் மேவிச்
செய்திடுமத் துதியெல்லாஞ் செய்யும் அன்பர்
சித்திபெறச் சுன்னைநகர் தெற்கில் வாழும்
தெய்வமெலாந் தொழுகழலீர்! ஆடீர் ஊஞ்சல்.
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திபுரி பத்தர்பலர் பாதம் போற்றப்,
    பழமறைச்செந் தமிழ்வேதம் பலபேர் சாற்றச்
சுத்தமன முற்றவர்கள் மலர்கள் தூற்றத்,
    துய்யபனி நீர்சிவிறி கொண்டே ஊற்ற,
சித்தமலர் மலர்ந்தருளின் தேவ னாகித்
    தென்சுன்னை வாழுமன்பர் சிறந்து வாழச்
சித்திபல செய்பவரே! ஆடீர் ஊஞ்சல்
    சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (4)

கற்றுணர்நா ரதமுனிவ னென்னுங் காட்சிக்
    கைவீணை வல்லவர்கள் கனிந்த பாடல்
சுற்றியளத் திசையிலுறும் அவர்கட் கெல்லாம்
    சுகானந்தம் விளைத்திடரின் தொடரைக் கீற
திற்றியமாம் பழம்வாழைப் பழங்கள் கொண்டு
    சேவிக்குந் தென்சுன்னை சிறந்து வாழச்
சிற்றுணர்வில் லாதவரே! ஆடீர் ஊஞ்சல்
    சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (5)

அண்டமெலாங் கைகுவிக்க அண்ட மீதே
    ஆழிவரு மதியமென அநேக கோடி
தண்டரளஞ் சொரியும்வலம் புரிகள் ஆர்ப்பத்,
    தவளமதிக் குடைகள்பல தயங்கிச் சூழத்
தெண்டிரை போற் கவரிபல இருபால் வீசத்,
    தென்சுன்னை நன்னகரஞ் சிறந்து வாழத்,
தெண்டுகமண் டலக்கையீர்! ஆடீர் ஊஞ்சல்
    சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (6)

பூவடிக்குள் உலகளந்த மாயன் என்னப்,
    பொழியுமழை நெடுமுகில்கள் பொலிந்து மின்ன,
மாவடிக்கண் மகளிரென மயில்கள் வன்ன,
    வாசம்விரித் தாடுமெழின் மலிந்து மன்ன,
நாவடிக்கு மிசைகள்பல வண்டு பன்ன,
    நந்தவன மோங்கியதென் சுன்னை வாழச்
சேவடிப்பா துகையுடையீர்! ஆடீர் ஊஞ்சல்
    சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கமறு சம்பாவின் அமுதும், நெய்யும்,
பால்தயிரும், முக்கனியும், பழமுந், தேனும்,
தெங்கிளநீர் வெற்றிலைபாக் காதி யான
செய்யநிவே தனங்களொடு சேவை செய்து,
தாங்கள் மன தாரஉம தடியில் தாழுந்
தன்மையினர் நன்மைபெறீஇத் தழைக்கு மாறு
செங்கமல மணிதொடையீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (8)

மூத்ததாய், இளையதாய் என்னுந் தாய்மார்
முறையினிரு பால்வைக, முளரி கேள்வர்
பார்த்தென வார்காதுதனிற்கு ழைகள் தூங்கப்,
பனிமதியின் வதனஒளி பண்பின் ஓங்க,
ஏத்துமடி யார்கவலை யாவும் நீங்க,
எனைஉமது திருவடிக ளென்றுந் தாங்கச்
சேர்த்திடுமுப் புரிநூலீர் ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (9)

அன்பர்தமக் கினியாரே! ஆடீர் ஊஞ்சல்,
அகங்குழையார்க் கினியாரே! ஆடீர் ஊஞ்சல்,
பொன்புனைகா தணியாரே! ஆடீர் ஊஞ்சல்,
பொருளெனக்குத் தணியாரே! ஆடீர் ஊஞ்சல்,
வன்பரைக்காத் தளியாரே! ஆடீர் ஊஞ்சல்,
மதிநிகர்தண் அளியாரே! ஆடீர் ஊஞ்சல்,
தென்சுன்னை வாழ்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (10)

வாழி

வாழிபூ தலத்தோர்கள் மழையும் வாழி,
மறையவர்கா ராளரொடு வணிகர் வாழி,
வாழிபசு நிரைமகளிர் கற்பு வாழி,
செங்கோன் முறைமை மறையும் வாழி,
வாழி நாள் தோறும்அடி பணியுந் தொண்டர்,
திருப்பணி செய்துவைத்த மேலோர் வாழி,
வாழிதென் சுன்னைநகர்ப் பூத ராயன்,
வரதனரு ளாலவ்வூர் வாழி, வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்
மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல்

காப்பு

திருவேறு மணிமார்பன் முதலோர் போற்றுஞ்
செய்யமயி லணிவாழு முருகன் மீது
பொருளேறும் ஊஞ்சலிசை இனிது பாடப்
புகழேறும் அடியவர்கள் தழைக்க நாளும்
அருளேறு மும்மதமா மாரி பெய்யும்
அத்திமுகத் துத்தமனென் றரனார் தந்த
திருவேறு விநாயகமுக் கண்ணன் பாதஞ்
சென்னிமிசை கொண்டுபவந் தீர்த்து வாழ்வாம்.

நூல்

திரைவளர்செம் பவளமணித் தூண்கள் நாட்டி
செங்கனகப் பைம்பொன்வளை விட்டம் ஓட்டி,
நிரைவளருந் தரளமணிக் கயிறு மூட்டி
நிறைகிரணம் வீசுரத்னப் பலகை மாட்டி
புரைவளரா வகையமைத்த பீட மீதிற்
புவிவளரும் உயிர்வளர இனிது வைகி
வரை நடஞ்செய் காலவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (1)

கண்ணனும்எண் கண்ணனும்கண் களித்துப் பாட,
கனலிமதி ஓர்கரத்திற் கவிகை நீட,
அண்ணன்மக வானெழிற்பூங் கவரி போட,
அமரர்துந் துபிமுழக்கம் விண்மண் மூட,
திண்ணமுறு கூற்றடப்பை கொண்டுள் நாடத்,
திகழால வட்டமொடு பவனன் கூட,
வண்ணமணிக் கடம்பினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (2)

கங்கைமுடித் துளதாதைத் திருக்கண் சாத்தக்,
கணபதியா கியமுன்னோன் களித்து நோக்க,
செங்கையிற்சித் திரபானு தீபந் தூக்கத்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்வருணன் பனிமழையே எங்கும் ஆக்க,
அங்கைமலர் தூவிமுனி வோர்கள் வாழ்த்த,
அரகரஎன்(று) அமரர்மறை யோர்கள் போற்ற,
மங்கைஉமை பாலகரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (3)

அந்தரிஅம் பிகைத்தாயுள் அன்பிற் பார்க்க,
அமரரா தியபதினெண் கணங்கள் ஆர்க்க,
கந்தருவர் இசைநறவஞ் செவியில் வார்க்க,
ககனநட மகளிரடி சதியிற் பேர்க்க,
முந்தியவாச் சியங்கள்கடல் ஒலியைத் தூர்க்க,
முருக!சர வணபவ! என்(று) அடியர் போற்ற,
வந்தவினை தீர்ப்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (4)

பன்னிருசெங் கதிர் ஆறாய் வந்த தென்னப்,
பலமணிகள் மிளிருமுடி சிரமேல் துன்ன,
மின்னுகுலி சாதிமலர்க் கரமேல் மன்ன,
விரிகடகக் கரங்கள் ஈராறும் துன்ன,
துன்னுமணித் தண்டைசதங் கைஎன்(று) இன்ன
சுடர்க்காலிற் கலின்கலினென்(று) ஒலித்துமின்ன,
வன்னமயில் வாகனரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (5)

தன்னனைய பின்னவர்கள் எண்ம ரோடு
தாழ்விலடல் வாகுவெனுந் தகையோர் போற்ற
மன்னும் எழிற் சேவல்கொடி மேல்நின்(று) ஆட,
மரகதஒள் நிறத்தூவி மயூரம் ஆட,
இந்நிலத்தின் மிசைஎங்கும் மகிழ்வே ஆட,
இருமருங்கில் நின்றுஇருசத் திகளும் ஆட,
வன்னமணிக் கடம்பினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (6)

அந்திசந்தி வந்துநின்சந் நிதியில் நின்றே
அடிவணங்கி அடிமைசெயும் அடியார் வாழ,
நந்தலிலா வகைபூசை நடக்கு மாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பொருள்ஈட்(டு) உத்தமரும் நயந்து வாழ,
சிந்தைமகிழ் வுறக்கேணி மதில்நின் கோயில்
திருப்பணிசெய் தொண்டர்களும் சிறந்து வாழ,
மந்திரதந் திரப்பொருளே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (7)

சொலஅரிதாங் கருணைபொழி முகம்ஈ ராறும்,
துய்யமலர்க் கடம்புபுனை புயம்ஈ ராறும்,
குலஅயிலுங் குலிசாதி படையுந் தோன்றக்,
குறமகள்தெய் வதயானை அம்மையோடு
கலபமர கதமயில்மேல் காட்சி ஆடுங்
காலம்எது வோ அறியாக் கடையேன் வாழ,
மலரகித பூரணரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (8)

அந்தமுதல் இல்லவரே! ஆடீர் ஊஞ்சல்,
ஆரணநல் லில்லவரே! ஆடீர் ஊஞ்சல்,
செந்தியில்வாழ்(வு) உகந்தவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபரனார்க்(கு) உகந்தவரே! ஆடீர் ஊஞ்சல்,
தந்திமுகர்க்(கு) இளையவரே! ஆடீர் ஊஞ்சல்,
தகுவரமர்க்(கு) இளையாரே! ஆடீர் ஊஞ்சல்,
வந்தெனையாள் கொள்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (9)

வாழி

மறைவாழி, வாழிமறை யோரும் வாழி,
வணிகர்வே ளாளர்குலந் தழைத்து வாழி,
சிறைவீசு மயிலயில்செஞ் சேவல் வாழி,
திருப்புயத்தின் விருப்பமர் சத்திகளும் வாழி,
நிறைவாழி மகளிரிடை, முகில்கள் வாழி,
நெடுஞ்சுரபி இனம்வாழி, நீலமீ தென்றும்
நறைவீசுஞ் சோலைமயி லணிவாழ் கந்தர்
நல்லருள்பெற்(று) அத்தலம்எந் நாளும் வாழி.

எச்சரீக்கை

திருவார்மயி லணிவாழருட் செல்வா! எச்சரீக்கை:
சிறியேனிடர் தீர்த்தாண்டருள் தேவே! எச்சரீக்கை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவாயரு உருவாய் வரும் அரசே! எச்சரீக்கை:
அடியாருளம் அகலாதுறை அமுதே! எச்சரீக்கை:

வானோர்சிறை மீட்டாண்டஎன் வாழ்வே! எச்சரீக்கை:
மதியார்புரம் எரித்தானருள் வரதா! எச்சரீக்கை:
தேனார்மொழி உமையாள்தரு சிறுவா! எச்சரீக்கை:
தினந்தோறும்என் உளம்மேவிய தேனே! எச்சரீக்கை:

நினைவாருளம் பிரியாவரு நிமலா! எச்சரீக்கை:
நெடியோன்மரு மகனாகிய நேயா! எச்சரீக்கை:
முனையார்வடி வேலேந்திய முதல்வா! எச்சரீக்கை:
முதல்வார்க்கரு மறைபேசிய முருகா! எச்சரீக்கை:

பராக்கு

நீலமயில் ஏறியருள் நித்தா! பராக்கு:
நேடுமடி யாரிடர்தீர் நிமலா! பராக்கு:
சீலமுறு வள்ளிமகிழ் தேவா! பராக்கு:
சிவனருளும் ஆறுமுகச் செல்வா! பராக்கு:

துய்யமயி லணியில்வளர் துணைவா! பராக்கு:
சூரனைவதைத் தருள்செய் துரியா! பராக்கு:
வையமிசை எனையாள வருவாய்! பராக்கு:
வானுலகர் வாழ்வுபெற வைத்தாய்! பராக்கு:

பந்தவினை தீர்க்கும்உமை பாலா! பராக்கு:
பகரரிய மெய்ஞ்ஞான பதியே! பராக்கு:
கந்தனென வந்தஅருட் கடலே! பராக்கு:
கருணைமழை பொழிபனிரு கண்ணா! பராக்கு:

லாலி

ஈசலாலிசெக தீச! லாலி:
பூசுரர் துதிக்குமுரு கேச! லாலி:
மங்கைதெய்வ யானைவள்ளி மதன! லாலி:
மன தினொடு உரைதொடர அரியை! லாலி:
துங்கமயில் ஏறிவரு சோதி! லாலி:
சூரனை வதைத்தசுப் பிரமண்ய! லாலி:
சாற்றுபெரு வாழ்வருளும் சாமி! லாலி:
சதுர்மறைப் பொருளுரைத்த சதுர! லாலி:
போற்றுநவ வீரர்புகழ் புனித! லாலி:
புங்கவற்கு வாழ்வளித்த புண்ய! லாலி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்
மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல்

காப்பு

சீர்கொண்ட ஈழவள நாட்டின் ஓர்பால்
சிறப்பமரும் யாழ்ப்பாண தேசந் தன்னில்
பேர்கொண்ட சுன்னாக நகர மீது
பிறங்குமயி லணிப்பதியில் வாசஞ் செய்யும்
மார்கொண்ட சீதரனாய் உலகங் காத்து
மன்னுமகா விட்டுணுமேல் ஊஞ்சல் பாட
கார்கொண்ட யானைமுக முடைய தேவன்
கமலமலர் அடியிணைகள் காப்ப தாமே.

நூல்

பேசரிய மேருவெனத் தூண்கள் நாட்டி,
பிறங்குமர கதப்பெரிய விட்டம் மூட்டி,
தேசுலவும் தரளமணிக் கயிறு பூட்டி,
செங்கனகத் தாலியலும் பலகை மாட்டி,
நேசமுடன் அமைத்தருளும் ஊஞ்சல் ஏறி,
நிலஉலக உயிர்கள்எல்லாம் தழைத்து வாழ,
வாசமுறுந் துளவினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல். (1)

சந்திரனுஞ் சூரியனுங் கவிகை தாங்க,
சசிபதிசெங் கரதலத்திற் கவரி ஓங்க,
அந்தணர்கள் இருமலரின் மாரி தேங்க,
அன்புமிகும் அடியர்குழாம் இடரின் நீங்க,
நந்தலிலா வாச்சியங்கள் பலவும் ஆர்ப்ப,
நமநாரா யணஒலியே விண்மண் தூர்ப்ப,
வந்தனைசெய் வார்நிதியே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல். (2)

மருவமருந் துளவமணி மாலை ஆட,
மன்னுதிருக் கரத்துளசக் கரமும் ஆட,
உருவமரும் முழக்கமுறு சங்கும் ஆட,
உயர்வுபெறு வில்லொடுவாள் தண்டம் ஆட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருவரிய கனகமணித் துகிலும் ஆட,
பொன்னினியல் மணிமவுலி தானும் ஆட,
வரைகவித்த குடையினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல். (3)

கிளர்பவள நிறத்தினரே! ஆடீர் ஊஞ்சல்:
கிரியின்மழை காத்தவரே! ஆடீர் ஊஞ்சல்:
துளை அமைவே இசையினரே! ஆடீர் ஊஞ்சல்:
தொல்லுலகம் உண்டவரே! ஆடீர் ஊஞ்சல்:
வனை அமரும் கரத்தினரே! ஆடீர் ஊஞ்சல்:
வராகவடி வத்தினரே! ஆடீர் ஊஞ்சல்:
வளர்கருட வாகனரே! ஆடீர் ஊஞ்சல்:
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல்: (4)

மீக்குலவு மறைவாழி, மறையோர் வாழி,
வேந்தரொடு வணிகர்வே ளாளர் வாழி,
ஆக்களினம் வாழி, முகில் நிரைகள் வாழி,
அன்புமிகும் மகளிர்பதி விரதம் வாழி,
வாக்குலவும் துதிபேசும் அடியர் வாழி,
மன்னுதிருப் பணிசெய்வோர் நாளும் வாழி
மாக்கமல நங்கைதிரு நோக்கம் வாழி,
மயிலணிவாழ் திருமாலின் அருளும் வாழி. (5)

குறிப்பு: குறித்த ஆலயம் முன்னர் தனி ஆலயமாக அமைந்திருந்தது. தற்போது மயிலணி சுப்பிரமணியர் ஆலயத்தின் பரிவார மூர்த்தியாக உள்ளது. அத்துடன் மகாவிஷ்ணுவுக்கு அலங்கார உற்சவம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலணிச் சிலேடை வெண்பா

காப்பு

வெற்றிவடி வேல்முருகன் மேவு மயிலணியைப்
பற்றிச் சிலேடைவெண் பாநூறு - சொற்றிடவே
கம்பொருகை யானனத்தன் காணா னருளுநன்மே
கம்பொருகை யானனத்தன் காப்பு.

நூல்

பூவிரத நீத்தமுனி புங்கவரு மாவணமும்
மாவிரதஞ் சேரு மயிலணியே - மேவிருவர்
மாதனத்து வந்தார் மகிழ்ந்து வரைக்கந்த
மாதனத்து வந்தார் மனை. (1)

சேயவிளங் காளையரும் செய்தவரு மோதனத்து
வாயச மூட்டு மயிலணியே - பாயத்
தகரை நயந்துகைத்தான் தானவர்க ளாம்பா
தகரை நயந்துகைத்தான் சார்பு. (2)

பூங்குழலார் கண்ணும் புரவதன்றி யார்முகமும்
வாங்கலை நோக்கா மயிலணியே - மாங்கனியைக்
கண்ணிமையிற் சேவலார் கைக்கொளப்பூச் சூழ்கடம்பின்
கண்ணிமையிற் சேவலார் காப்பு. (3)

கோகனகப் பூமேலும் கோவேந்தர் வீதியிலும்
வாகனங்க ளேறு மயிலணியே - ஆகவத்தில்
வந்துகைக்குந் தேரார் மடிந்தருளப் பாகனென
வந்துகைக்குந் தேரார் மனை. (4)

விண்ட மலர்போல் விரும்பிவர மெஞ்ஞான்றும்
வண்டிசை பாடு மயிலணியே - தொண்டர்கள்போய்
ஆறக் கரத்தா னமைத்தங் கவர்க்கருளும்
ஆறக் கரத்தா னகம். (5)

போய்க்கழனி வித்துநரும் போரரச ருஞ்செவியின்
வாய்க்கவிதை நாடு மயிலணியே - சீர்க்கனற்கு
மாரனெனத் தோன்றினான் வள்ளிக்கு மையல்செய்
மாரனெனத் தோன்றினான் வாழ்வு. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றார் புனற்றடமு மூர்ப்புறஞ்சே ருங்கடமும்
வாற்றா மரைசேர் மயிலணியே - போற்றா
தவருக் கினியான் றமிழ்முனிவ னாதியமா
தவருக் கினியான் றவம். (7)

மாணிக்க மேடையினும் வண்புலவோர் நாவினுமே
வாணிவந் தோங்கு மயிலணியே - வேணுவைக்கொண்
டாக்குவித்தார் மெய்ய ரபத்தரெனக் கண்ணிடவன்
பாக்குவித்தார் மெய்ய ரகம். (8)

காரிகை யார்வதனங் கண்டமிவை கண்டுதட
வாரிசங் கோடு மயிலணியே - சேரமரர்
வேந்தைக்கேட் டுக்களித்தார் மெய்மையைப் பொனென்னுமொரு
வேந்தைக்கேட் டுக்களித்தார் வீடு. (9)

பேறுபெற்றார் தம்மனமும் பேணிநக ரப்புறமும்
மாறுருக்கங் காட்டு மயிலணியே - சீறியபின்
வேட்டுவரை மேவினார் மெல்லியலாம் வள்ளிதனை
வேட்டுவரை மேவினார் வீடு. (10)

மாயாத வன்பினரும் வாள்வீரர் தூணிகளும்
வாயாரப் பாடு மயிலணியே - போயாத
வந்தருங்கா னங்கடந்தார் வண்டணி யின் வாழ்ந்து
வந்தருங்கா னங்கடந்தார் வாழ்வு. (11)

தப்பா மொழிப்புலவர் தாமுந் துவசமுங்கோ
வைப்பாடல் செய்யு மயிலணியே - இப்பாரில்
ஊரு மொருவினா ணோதுருகா திப்பெயரோ
டூரு மொருவினா னூர். (12)

வாதையின்மா மாத்திரரும் வண்டு மெழும்பித்த
வாதசுர மாற்று மயிலணியே - ஓதும்
வியாகத் துதித்திடுவார் வேடிச்சி யைத்தே
வியாகத் துதித்திடுவார் வீடு. (13)

அஞ்சநடை யாரடியு மம்பகமுஞ் செவ்விய
மஞ்சரியை மானு மயிலணியே - நஞ்சஞ்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தானை வேலினான் மல்குசுரந் தண்ணெனச் செய்
வைத்தானை வேலினான் வாழ்வு. (14)

தண்டலையும் பொன்னின் றளியும் தவமதுவார்
வண்டுறக்கங் காட்டு மயிலணியே - தொண்டிலரா
கத்தினிறை வாகநத்தார் காங்கேயர் மேலையுல
கத்தினிறை வாகநத்தார் காப்பு. (15)

விண்டலஞ்சேர் கோபுரமு மெய்யோ கருமேக
மண்டலந் தாங்கு மயிலணியே - வண்டரைத்துன்
பத்துக் களித்திடுவான் பாவைவள்ளி நாயகியின்
பத்துக் களித்திடுவான் பற்று. (16)

மாசுதவிர் தங்குழலின் மானார்கண் மேனிலையில்
வாசம் புரியு மயிலணியே - மாசுறுசூர்
அங்கங் கெடுத்தா ரரிவைவள்ளி காணவுரு
அங்கங் கெடுத்தா ரகம். (17)

புஞ்சநிதி யெட்டியரும் போர்வீர ருங்கட்டா
மஞ்சிகையுள் வைக்கு மயிலணியே - தஞ்சமென
வேதனைமுன் னிட்டார் வினைகெடுத்தார் வெஞ்சிறையில்
வேதனைமுன் னிட்டார் வீடு. (18)

ஓசைபெறும் வண்டினமு மும்பரொடு நாடோறும்
வாசவரும் பாடு மயிலணியே - பாசிழையாம்
அட்ட கலாபத்தா ராலடியேற் கெய்துவினை
அட்ட கலாபத்தா ரகம். (19)

பத்தர் மனமும் பதியோரு முன்னுபர
வத்து வரையா மயிலணியே - முத்தப்
பழனி மலையார் பயந்தருளும் வேற்கைப்
பழனி மலையார் பதி. (20)

கிள்ளைமொழி யார்விழியுங் கேள்கிளரும் வார்காதும்
வள்ளையிலை மானு மயிலணியே - கொள்ளானி
உத்தரத்திற் சாற்றினார் உண்மையைக்கும் பற்கிருக்கின்
உத்தரத்திற் சாற்றினா ரூர். (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலணி
விசாலாட்சி அம்மை பதிகம்

விநாயக வணக்கம்

உலகெலா மொன்றா வொன்றா யொன்றியு நிற்ப தொன்றாய்
இலகுவ தெதுவோ வன்ன தெமக்கிறை யதற்கு லீலை
பலவுள வவற்று ளொன்றாய்ப் பணிந்தவர்க் கின்பம் பூக்குந்
திலகமா யானை யான செய்தியைச் சிந்தை செய்வாம்.

நூல்

பூமேவு கொன்றையொடு திங்களணி மகுடமும்,
புதியதள வனையமூரற்
பொற்புமிரு விற்புருவ வழகுமுக் கண்களின்
பொலிவுமதி நுதலினெழிலுந்
தூமேவு கொவ்வையங் கனியை நிக ரிதரெளித்
தொன்மையும். நுதலிலிட்ட
சுந்தர மிகுத்தகுங் குமதிலக சேர்வையுந்,
தோன்றிய முகக்கருணையும்,
மாமேவு பசியமர கதநீல வண்ணமென
வாய்த்ததிரு வடிவுமாயென்
மனமலரும் விழிமலரு மிகமலர வெதிராகி
வந்துநற் காட்சிதருவாய்!
ஏமேவு கண்ணியே! உலகெலாம் ஈன்றருளும்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (1)

அந்திமதி புனைவேணி யமலனோ டபேதமாய்
அமருவாய் அகிலநடவ!
ஆரருளி னவனையா ணாகவும் நின்னையவன்
அன்புடன் மகிழ்ந்து வேட்கும்
பைந்தொடி ஒருத்தியென் றாகவுஞ் செய்தவன்
பாகத் தமர்ந்துவைகிப்
பாராதி அண்டப் பரப்பெலா நொடியினிற்
பண்புட னமைத்தருளுவாய்
இந்தவித மாகநீ தந்தருளும் விளையாடல்
எத்தனை யெனப்படுபவோ?
ஏகாந்த நின்றுணரு வாருணர்வ தன்றியிதை
என்போலு வாருணர்வரோ?
இந்தனைய நுதலியே! வந்ததனைசெய் வார்க்கருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (2)

திக்குமுக மாயினோன் மாதர்மூ வரைமணஞ்,
செய்துவாழ் கின்றசீருஞ்
செந்திருவை அம்புவி மடந்தையை மணந்தரி
திரைக்கடல் படுக்கும் வாழ்வும்,
மைக்கறை மிடற்றினோ னைந்தொழி னடாத்தியவ்
வானோர்கண் மகுடசூடா
மணியாகி அணியாய கயிலாச பதியாகி
வாழ்வுபெறு மப்பெருமையும்,
கைக்கிளி தரித்தன்ன மூர்ந்துவரு கண்ணிநின்
கண்ணினரு ளில்லையென்னிற்
கணமெனினு நிற்குமோ? இவ்வுலகெ லாநினது
கருணைவடி வென்றுகாண்,
இக்கனைய சொல்லியே நற்பெருமை தந்தருள்க,
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (3)

தந்தையொடு தாயென்ன வந்தவிவர் தந்ததென்
சகசரென வந்துதித்தோர்
தாமெனக் குதவியதென் மகவினொடு தாரமுஞ்
சஞ்சலந் தந்தவன்றி
வந்தவோ ரின்பமெட் டுணையும்யா னறிகிலேன்
மற்றவர் தமக்கின்பமாய்
வந்திடுவ தேதுலக மிந்தவித மாய்மாய
வைத்திடுவ தன்றியொன்றைச்
சிந்தைசெய விடுவதிலை முந்தைவினை யாலீது
தீர்வகையு மேதுமில்லை,
திருகா திருந்துமன முருகா நினைந்துனைச்
சேவிப்ப தெந்தவிதமோ?
எந்தவடி வும்உனது வடிவமெனு நினைவருள்க
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (4)

கைப்பொருளி லாசையோ ரெட்டுணையு மறிகிலேன்
காணியிஃ தெனதிடமெனுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையுங் காண்கிலேன், அவலமாய் மகளிரைக்
காண்டொறும் நெஞ்சமென்னும்
பொய்ப்பிசா சஞ்சுழன் றொழியாம லவர்தமது
பூரித்த கும்பமுலையிற்
புரணவை வேல்விழியி னிற்கிரண முகமதிப்
பொலிவினிற் சொல்லினல்குன்
மைப்படியும் வேலையிற் கைப்பதும வீச்சின்மேல்
மருவுமொரு துரிதநடையின்
மயலுறா வுலையுமிஃ தியல்பென்ப தமையுமோ?
வரைவுசெய் தாரிருக்க
எப்படியு மிதுதொலைய நீயருள வருகுவாய்!
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (5)

கண்ணாகி நின்றுருவு காண்பதுவு நீ; உடற்
கற்பிதம தாயிருந்து
கடுகுமூ றாதிகளை உணர்வதுந் நீ; மணிற்
கந்தமறி நாசியுநீ;
பண்ணாதி ஓசையைக் கவர்செவியு நீ; இரச
பக்குவம் பார்ப்பதுவும் நீ;
பற்றியிவ் வைந்தின்வழி உற்றுநின் றுழன்மனப்
படிவமுந் நீகொலென்றாற்
பண்ணாதி மூன்றின்வரு பயனுமறி வன்கொலோ?
பெற்றியிவ் வாறிருக்கப்
பிழைகள்செய் தனனென்று துயர்வதுந் நன்மையிற்
பெரியனெனு மகிழ்வுமருவி
எண்ணாத எண்ணங்கள் எண்ணாமல் அருளுவாய்!
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (6)

நன்றுதீ தென்றுலகி லெண்ணியே மையலுறு
நாடகமென் யானறிகிலேன்,
நம்மைவை தாலுமவ் வைவிலுறு பயன்யாது?
நண்ணிப் புகழ்ந்தாலுமென்?
துன்றுசுவை நாவன்றி மட்கலமு மறியுமோ?
தோகை நீ யலதுமனுடத்
தொகுதிகளு மறியுமோ? ஒருவனுள் ளத்தினுள்
தொக்கவப் பக்குவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்றையுண ராமலே வைதாரை நொந்துமிசை
பேசினரின் மகிழ்வாகியும்
பேதிலுலை வன்கொலோ? வீதிவந் தென்னுளம்
பேதைநீ குடியிருக்க
என்றுவெவ் விடமுமெய் பொருள்வரினு மெனதெனேன்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (7)

ஆரெனக் கென்செய்வ ரஃதன்றி அவர்தமக்(கு)
அடியேனும் என்னசெய்வேன்?
அறமென்ப தார்வழிய! தல்லாமை யார்வழிய?
தாயினின் வழியவன்றோ?
சீரெனக் கண்டறஞ் செய்தே னியானென்று
செப்புவா ரலதுதீமை
செய்தே னியானென்று சொல்லுவா ரலதுபிறர்
செய்ததென வவர்கள்யாவர்?
நீரெனக் கடலெனப் பிறிதாகு மோவிந்த
நிலைமையை நுனித்துநோக்கி
நின்றநிலை தவறாமல் நின்றபடி யாகியே
நின்றுருக நீயருளுவாய்!
ஏரெனக் கண்டதொன் றேனுமிப் புவியில்லை
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (8)

இச்சித்த படிநன்மை தீமைகள் புரிந்திடற்(கு)
எய்துமோ? அஃதில்லையே!
இல்லையெனில் வல்லபங் கொண்டவை களைத்தள்ள
ஏலுமோ? அதுவுமில்லை.
இச்சையிஃ திவ்வா றிருத்தலிற் றீமைகளை
விட்டுவிட வேண்டுமென்னும்
விதிருநன் மைகள்செய்ய வேண்டுமெனு மாசையு
மேவிலேன் வந்தவெல்லாம்
அச்சமகிழ் வின்றியே நினதருளை மறவாமல்
அனுபவித் தேதொலைப்பேன்
அறிவின்மை கொண்டுபலர் குறைநிறைகள் பேசலுக்
கசைவனோ? உலகுயிரெலாம்
எச்சமென அருள்கின்ற தாயாகி வந்திடுமோர்
இறைவியே! மயிலணியில்வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (9)

ஊழின்வழி வருபவரு முறுவோரும் இதனைவெலல்
ஒல்லுமோ கல்வியில்லார்
ஒருவனிடர் உயர்வுகளின் இகழ்புகழ் புரீஇப்பிறப்
பொன்றிலே பயனாய்குவார்
காழின்வழி மரமுமதன் வழியினிற் கனியுமே
காணுமல் லாதுபிறழா
கன்மம் புசிக்குநாட் சென்மமிஃ திற்செயல்
கலப்பதிலை போகமாகப்
பாழினெழு நயமீது முனிவர்சின மகிழ்வினிற்
பார்த்திலே மென்னினாங்கும்
பார்க்கலா முன்பினா யினமோக மொழியீது
பண்பிதிவ் வாறிருக்க
ஏழினெழு மிவ்வுடற் கஞ்சுகோ? தஞ்சநீ
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (10)

வாழி

செம்மையா மறைமுடிவின் துணிபு வாழி,
திரிசயந்தீர்ந் தொன்றாமெய்ச் செல்வம் வாழி,
தம்மையறிந் தவருயர்ந்தோர் சங்கம் வாழி,
சார்ந்தவரை ஒழுகுபவர் தாமும் வாழி,
நம்மையா ரெனவறிய நமக்கு நன்மை
நல்கிமயி லணிப்பதிவாழ் நம்பன் பாங்கர்
அம்மைவிசா லாட்சியுமை யருளா னாளும்
அத்தலமும் மறையவரும் வாழி, வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடை
வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல்

சீர் பூத்த முடிமீது நிலவு பூத்த
நிமலனார் திருவருளின் நிறைவு பூத்த
ஏர்பூத்த யானைமுகத் தெழிலே பூத்த
இறைவனடித் தாமரைகள் இறைஞ்சி ஏத்திக்
கார்பூத்த மலர்ச்சோலை கவினப் பூத்த
கந்தநகர் செறிவத்தாக் கையில் வாழும்
பேர்பூத்த விசாலாட்சி அம்மை மீது
பெயர்பூத்த ஊஞ்சலிசை பேச லாமே. (1)

துதிமேவு ஞானநடந் தூண்க ளாக,
துணையாகு மூனநடங் கயிற தாக,
விதிமேவு மவற்றிடைதான் விட்ட மாக,
விளங்கியஓங் காரமது பீட மாக,
கதிமேவும் ஐந்தெழுத்தின் தோற்ற மாக,
கண்டமணி ஊஞ்சலிடைக் கவின ஏறி,
மதிமேவு முகத்தணங்கே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (2)

பூவகையா மீசருமுச் சீவர் தாமும்
முத்தேகந் தொறுமொருமை பன்மையாக,
மேவியவா பாசஅபி மானம் எல்லாம்
விளிந்ததுநீ நீயதுவே யானாய் என்னும்
பாவகமாய் அகண்டிதபூ ரணமே யாகிப்,
பாவியேன் வாழஅருட் பார்வை நல்கி,
மாவிலிளங் குயிலனையீர்! ! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (3)

தடமருவுங் குவளையென விழிகள் மின்ன,
சலதியெனக் கருணையவைக் கிடையே துன்ன,
நடமருவு மீசர் வலப் பாகமன்ன,
நாயகியே என்றடியார் துதிகள் பன்ன,
கடமருவு கரியுரியே காயஞ் சொன்னக்
கடமருவி மார்பினிடைக் கவின வன்ன
மடமருவு மலைமகளே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருவென விளங்குமிகு தூண்க ணாட்டி,
விரவுமண்ட கோளகையின் விட்ட மோட்டி,
சீரியவன் பினரன்பிற் கயிறு பூட்டி,
செப்பியவிப் புவியைநிகர் பலகை மாட்டி,
தேரியநல் லறிஞர்கள்கைத் திறமை காட்டி,
செய்தமணிப் பீடமிசை திகழ வைகி,
வாரியரங் கணையானாய் ! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (5)

கொண்டபர னார்புடையின் முறுவல் கொள்ள,
கும்பிமுக னோடிளைய குமரன் மெல்ல,
மண்டியபே ரன்பினொடு மடியின் வைக,
மறைகளெலாம் வேதமுனி வோர்கள் விள்ள,
தொண்டர்கட முளத்திலா னந்த மெள்ளத்,
தோன்றாம னுழைந்திருளின் துயரைத் தள்ள
வண்டுறுகை மலரணங்கே ! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (6)

கங்கைகளங் கிருபாலும் கவரி வீசக்,
காளிகள்கைக் குடைமதிகள் கொண்டு கூடப்,
பங்கையமென் பாவையர்கள் துதிகள் பேசப்,
பலபணிகள் குலவிமொழி யிருளை மூச,
மங்கைஅயி ராணிசசி மடவி லாச,
மாதரொடும் வெள்ளடப்பை கொண்டு லாவ,
மங்கலபூ ரணவாழ்வே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (7)

இந்துமுக விடைஅசைய அயில்மே னாட்டத்(து)
அரமகளிர் சதிமுறையில் நடனங் காட்டத்,
தொந்தமென முரசுகண நாதர் மாட்ட,
தும்புருநா ரதர்யாழின் சுருதி கூட்ட,
கந்தருவ மகளிரிசை நாவால் மூட்ட,
கமலினியும், அனுந்திதையும் வடந்தொட் டாட்ட,
வந்தனைசெய் வார்மருந்தே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயோனுக்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்,
மகிடமுகற்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்,
தீயவருக்(கு) இனியாளே! ஆடீர் ஊஞ்சல்,
செய்தவருக்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்,
தூயமறை முடியாளே! ஆடீர் ஊஞ்சல்
சுடருமதி உடையாளே! ஆடீர் ஊஞ்சல்,
வாயமுத மொழியாளே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (9)

தன்னனைய கோபுரமும் மதிலு மேரு
தானென்ன விளங்கவொரு தளியுந் தந்து
நின்னை அதில் தாபனஞ்செய் தேத்து மாறு
நினைதருமிக் கந்தநகர்ப் பதியின் ஓங்கிப்
பொன்னுலக மெனவாழ்வு பொருந்து மாறு
பொற்புறு மற்றவை விரைவிற் பொலியுமாறு
மன்னுயிருக் கொருதாயே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (10)

வாழி

வாழிபுவி, அதிலுறுநான் மரபு வாழி,
மறையினொடா கமங்களுமவ் வழியே வாழி,
வாழிமுகில், மகளிர்பதி விரதம் வாழி,
வாழிபசு நிரையொடுநல் வாய்மை வாழி,
வாழிமுக மதிகருணை வாழி, வாழி,
வாழிமல ரடியுநாற் கரமும் வாழி,
வாழியவத் தாக்கைவிசா லாட்சி யம்மை
மனத்தருளால் அன்னகரம் வாழி வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடந்தை வெண்பா

ஆசிரிய வணக்கம்

அகவல்

ஆகம வேத மனைத்தையு மளித்த
ஏகனே யிவ்வுரு வென்னத் தோன்றிய
சங்கர பண்டிதன் தாள்மலர் தமியேற்(கு)
எங்குமாய் நிற்கு மிலை பிறவெனவே.
உடுப்பை நகரா னுயர்கவி வாணன்
அடுத்தவென் பொய்ந்நிலைக் காயிரங் கதிரோன்
சிவசம்புப் புலவன் சேவடி
என்னையுந் தனக்கா ளென்ன இருத்துமே.

அவையடக்கம்

கட்டளைக்கலித்துறை

கல்லார் பிழையறி யாரிந்த நூலிற் கலையின்மிக
வல்லார் பிழையுரை யாரிருந் தாலு மதியிலென்போ
லல்லா தவருரைப் பாருரைத் தாவதெ னம்புவியி
லெல்லாம் வல்லாருமொன் றேனும்வல் லாரு மிருப்பதின்றே.

தலவிநாயக வணக்கம்

கூர வுவந்தடிமை கொண்டு குடந்தைவெண்பா
சாரவொரு நூறெனக்குத் தந்தருள்வார் - மேருவெனுஞ்
சோதி வினாயகனார் தோன்றலெனத் தோன்றுமரு
ளாதி விநாயகனா ரன்பு.

நூல்

பூவும் பணியும் புனையு மகளிரெதிர்
கூவு மெயில்சூழ் குடந்தையே - தாவுமொரு
செச்சையா னத்தன் றிகழும் பகன்புனையும்
செச்சையா னத்தன் செனிப்பு. (1)

மையாடு சோலைதொறும் வந்தமரர் பூசைசெயக்
கொய்யா மலர்கொள் குடந்தையே - செய்யாள்சேர்
ஐயான னத்த அடியார்க் கருள்புரியும்
ஐயான னத்த னகம். (2)

காரிகையார் போயொளித்துக் காணுகெனா முன்னவர்போற்
கோரகைகூய்க் காட்டுங் குடந்தையே - ஓரிளையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய்ந்தவரங் கத்தான் மகிழத் துளவளித்தான்
மாய்ந்தவரங் கத்தான் மனை. (3)

செங்கரும்பு வேலியெனச் சேரத் திலகமொடு
குங்குமமு மோங்குங் குடந்தையே - கொங்கையிற்செய்
கல்லாட னூற்றினார் கந்துளக்கிக் கேட்டவொரு
கல்லாட நூற்றினார் காப்பு. (4)

மாதகலத் தானாதி வானவர்கன் மாமகநீர்
கோதகலத் தோயுங் குடந்தையே - தாதுபொலி
கள்ளருக்குத் தாரார் கதியறிவு மேன்மைதிரு
கள்ளருக்குத் தாரார் கலப்பு. (5)

வெள்ள முறுகலசம் வெங்கணையி னாற்சிதைவு
கொள்ளமிர்த நீர்சேர் குடந்தையே - வெள்ளொளிசேர்
நந்தரத்த ரந்தரத்தர் நாளும் பணியவருள்
நந்தரத்த ரந்தரத்தர் நாடு. (6)

அண்டமதி போய்க்கதலி யாடுங் குருத்துமதன்
கொண்டகுடைக் காம்பாங் குடந்தையே - எண்டகுசீர்
ஆசை யுடையா ரருளுடையா ரம்பிகைபால்
ஆசை யுடையா ரகம். (7)

அண்ட ருலகிற் கமைத்தவழி போற்புரிசை
குண்டலத்தி னீடுங் குடந்தையே - கொண்டுவலை
வாங்கு திரையார் மயிலைபடுத் தார்மறையாம்
வாங்கு திரையார் மனை. (8)

உற்றமகப் பேற்றி னுவந்துமக நீர்படிந்தோர்
கொற்றவ னேத்துங் குடந்தையே - முற்றெவையுங்
கட்டங்கங் கைப்படையார் கட்டுமர னார்சுடருங்
கட்டங்கங் கைப்படையார் காப்பு. (9)

வாகனமாய் வேதன் வரங்கிடத்தல் போற்பலசெங்
கோகனக மேறுங் குடந்தையே - தேகநிலை
மாலத் திரியார் மனத்திரியார் வண்டுளவ
மாலத் திரியார் மனை. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியொடு கூடி மகிழ்ந்து மனைதோறுங்
கோமி யுறையுங் குடந்தையே - ஏமுனையில்
தாரணித் தேரார் தமையெரித்தார் பூமகனூர்
தாரணித் தேரார் தலம். (11)

தீதின் முனிமகளாய்ச் செந்திருபொற் றாமரைநீர்க்
கோதின் மலர்சேர் குடந்தையே - போதனயன்
காணாக வக்கரத்தார் கண்ணெனவிக் காசினிக்காக்
காணாத வக்கரத்தார் காப்பு. (12)

தாவா வருபொன்னித் தண்கரையில் வந்தவெண்பு
கோவா ரிசமாங் குடந்தையே - சாவாது
செய்யவளை மாற்றினான் சேர்துயர்நஞ் சுண்டுமுன்னாட்
செய்யவளை மாற்றினான் சேர்பு. (13)

சந்தமலை வந்துதமிழ் தந்தமுனி சிந்தையணு
குந்தொடரின் வந்தேய் குடந்தையே - தந்திரமென்
றாயவடி வாக்கினா னாடிநிழ லைத்தொண்ட
ராயவடி வாக்கினா னார்வு. (14)

பொள்ளா வகண்டப் பொருள்போற் பலபொருளும்
கொள்ளா வணஞ்சூழ் குடந்தையே - தள்ளாடும்
வைதிகக் கோலத்தார் வன்றொண்ட ரோலைகிழீஇ
வைதிகக் கோலத்தார் வாழ்வு. (15)

காசியி னீங்காக் கடும்பவமுங் கண்டளவிற்
கூசி நடுங்குங் குடந்தையே - நேசமுள
பத்தரைக் கையான் பரசுமுதற் கொண்டவிரு
பத்தரைக் கையான் பதி. (16)

நீடு மமிர்தரும்ப நின்றுவிழுங் காயின்முளை
கூடியொரு தெங்காங் குடந்தையே - பாடுமொழித்
தேவாரப் பாட்டினார் செல்லப்பல் லக்குதவு
தேவாரப் பாட்டினார் சேர்பு. (17)

ஆபத்தின் வந்துதொழு மாதித்தன் றன்மாமன்
கோபத்தி னீங்குங் குடந்தையே - வீபத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யகோ டீரத்தர் மேதினியைக் காய்ந்தமுந்தூள்
வெய்யகோ டீரத்தர் வீடு. (18)

தாவு மமிர்தகடஞ் சஞ்சலிக்க வாங்குவிழுங்
கூவிளைநின் றோங்குங் குடந்தையே - மேவுநுதற்
கண்ணக் கினியார் கனிந்துதொழு வார்கருத்திற்
கண்ணக் கினியார் கலப்பு. (19)

உண்டதிகங் காசியினென் றோர்விரலி னாற்பகவர்
கொண்டு குறிக்குங் குடந்தையே - விண்டலருந்
தாமத் தொடையார் தயங்குசடை யார்மதியத்
தாமத் தொடையார் தலம். (20)

பட்டிமணி மண்டபத்துப் பாமழைபெய் பாவாணர்
கொட்டி முழங்குங் குடந்தையே - எட்டியர்கள்
செங்கைத்தி னத்தினார் சிற்சபையிற் காட்சிதரு
செங்கைத்தி னத்தினார் சேர்பு. (21)

சொக்கியதொண் டர்க்குதவச் சொன்னமொடு நின்றார்போற்
கொக்குப் பழுக்குங் குடந்தையே - கட்கமலப்
பூதி வணத்தர் புரியத் திகிரியருள்
பூதி வணத்தர் புரம். (22)

துன்று மெழுநிலைய சோதிமணி மாடங்கள்
குன்று நிகருங் குடந்தையே - அன்றொருபொய்
ஆவணங் காட்டினா ரன்பின் வழுதிபணி
யாவணங் காட்டினா ரார்வு. (23)

நாவிருக் கோதிவலம் நாளுமறை யோர்புரியோர்
கோவிருக்க மோங்குங் குடந்தையே - பூவிருக்கு
மாலூர வஞ்சடையார் வாழ்த்தவருள் சத்திமய
மாலூர வஞ்சடையார் வாழ்வு. (24)

சந்திரனுக் காரருளைத் தந்துகுரு நிந்தையைத்தீர்க்
குந்தடஞ் சேருங் குடந்தையே - கந்தரஞ்சேர்
ஆல வனத்த ரகங்குறையக் காளியொடா
டால வனத்த ரகம். (25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரெனினுஞ் செய்தபவ மத்தனையு நீக்கவொரு
கோரவா ளொக்குங் குடந்தையே - தாரமெனுங்
கங்கா தரனார் கனன்றுசம ணுந்தியநா
கங்கா தரனார் கலப்பு. (26)

ஆதிகும்ப சூத்திரத்தி னாதரித்த நாதரைநற்
கோதம னேத்துங் குடந்தையே - ஏதுமின்றிக்
கற்பத் திருப்பார் கயவர்செயு நூல்களையான்
கற்பத் திருப்பார் கலப்பு. (27)

செந்திரு வந்துமுனி செல்வியாய் வைகிடவை
குந்தனு மேவுங் குடந்தையே - ஐந்துபெருந்
தானவரைக் கொன்றார் தமையளவு கண்டிடவெண்
டானவரைக் கொன்றார் தலம். (28)

பற்றறுத்த காசிபனைப் பற்று மலிவடிவக்
குற்ற மகற்றுங் குடந்தையே - நிற்றலுநல்
காப்பணி யாரணியார் காணநடிக் கும்பணியாங்
காப்பணி யாரணியார் காப்பு. (29)

தொக்கபலி யுண்டுவலஞ் சூழ்ந்திறக்க முத்திதனைக்
குக்குரனுக் கீயுங் குடந்தையே - பிக்கையெடாப்
பாரவல மோட்டினார் பண்டுமழைக் கோளையுண்ட
பாரவல மோட்டினார் பற்று. (30)

தெள்ளமிர்த கும்பச் சிமிலிசிக்க நாதரெனக்
கொள்ள விழுஞ்சீர்க் குடந்தையே - பள்ளநெடு
வாரிதிநஞ் சார்ந்தார் மதுரையெனக் கூடரவின்
வாரிதினஞ் சார்ந்தார் மனை. (31)

பாப்பரசன் வந்துவினை பாறப் பணிந்திருகை
கூப்பி வணாங்குங் குடந்தையே - சேப்பிலைநீர்
ஆநிலை யாரகந்த ரைந்து நிலையகத்தர்
ஆநிலை யாரகந்த ரார்வு. (32)

மாட்டி வணிகனையோர் வண்கரும்புக் காயிரங்கொள்
கோட்டு முகன்வாழ் குடந்தையே - வீட்டியெழுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனைத் தாக்கினார் கான்மலராற் காய்ந்தசினக்
காலனைத் தாக்கினார் காப்பு. (33)

போய்நிலை யாவும் புகநீ ரரியரியாக்
கூநிலையத் தாங்குங் குடந்தையே - நானிலையென்
றாய விருந்தானோ ரன்மாற னார்மனையி
லாய விருந்தா னகம். (34)

ஞாலமெலா மேத்துமக நாளதனி லீராறு
கோலநெடுந் தேரூர் குடந்தையே - ஆலமுதீ
ரந்தரிக்கா ரந்தரித்தா ரார்ந்து மதுரையில்வந்
தந்தரிக்கா ரந்தரித்தா ரார்வு. (35)

ஆடரங்கு மாளிகையு மாடெழிலா ராடுதொறுங்
கோடரங்க ளாடுங் குடந்தையே - நீடரங்கச்
சேக்கைபற் றாக்கையார் தீயவெரித் தார்முழுதுஞ்
சேக்கைபற் றாக்கையார் சேர்பு. (36)

ஆடி யெனமதிய மம்பொனெழிற் கோபுரத்திற்
கூடியெழில் காட்டுங் குடந்தையே - நீடுதலைப்
பாத்திரக் கையார் படர்ந்திருடி மார்வனத்திற்
பாத்திரக் கையார் பதி. (37)

பாயரியி னீள்குரத்தாற் பாயநெய்த்தோர் பார்த்தசென்னி
கோயி லமைக்குங் குடந்தையே - போயிலங்கை
காவலனா ரைக்கடுத்தான் கைதொழுவான் கண்ணருணல்
காவலநா ரைக்கடுத்தான் காப்பு. (38)

அம்பிற் சிதைந்தமிர்த மைந்துகுரோ சத்தவதி
கும்பம் பெருகுங் குடந்தையே - வெம்பிவருந்
தந்தமலை யாரிடத்தார் தாழவுரித் தாரிடையாந்
தந்தமலை யாரிடத்தார் சார்பு. (39)

அம்புலிநல் லாடுதொறு மாதித்தன் றன்கரத்தாற்
கும்பிடுவா னெய்துங் குடந்தையே - தும்பைமுடித்
தாரக மாயினார் சாரா தவர்முருகாற்
றாரக மாயினார் சார்பு. (40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலு மமிர்தகட மெய்யக் கணையொடுவிற்
கோலு மிடஞ்சேர் குடந்தையே - நாலுமறைப்
பாயம் பரியார் படிவயத்தார் பால்வேலைப்
பாயம் பரியார் பதி. (41)

பாடன்மறை வேதன் பணிந்துபடைக் குந்தொழிலைக்
கோடல் புரியுங் குடந்தையே - ஆடலைச்சித்
அம்பரத்திற் கண்டா ரறியினுல கெங்கணுமாய்
அம்பரத்திற் கண்டா ரகம். (42)

மாற்றி யபிமுகமாய் வந்தருள வந்தொன்பான்
கோற்றொடியா ரேத்துங் குடந்தையே - சேற்றெழும்பூ
வைத்தகங்கை யாற்றினான் வண்பலுகுத் தான்சடையில்
வைத்தகங்கை யாற்றினான் வாழ்வு. (43)

என் றுஞ்சூதாடியன மிட்டுநன் மூர்க்கர்மலங்
கொன்றுமுத்தி சேருங் குடந்தையே - மன்றினொரு
நாடவா தாடினார் நக்கீரர் நற்பொருளை
நாடவா தாடினார் நாடு. (44)

நாட்டியமேற் கோட்டமுத னற்பன் னிருகோட்டக்
கூட்ட மருவுங் குடந்தையே - வேட்டுவனாய்
வல்லுளி யெய்தார் வயங்கு விடங்கரென
வல்லுளி யெய்தார் மனை. (45)

முன்னிருவர் கங்கையிடை மூழ்கிமக நீரெழுந்து
குன்னந் தெரிக்குங் குடந்தையே - தந்நிலையைக்
கல்லானை யுண்பித்தார் காணார் கரும்புதவிக்
கல்லானை யுண்பித்தார் காப்பு. (46)

ஆசரித்த கும்பத் தமைத்த சகபீசங்
கோசரித் தோங்குங் குடந்தையே - நேசரன்பின்
வட்டரங்கத் தாடினார் மாதுமையா ளோடிருந்து
வட்டரங்கத் தாடினார் வாழ்வு. (47)

அம்புயன் கும்பத் தமைத்தசமி வீழ்ந்துமுளைக்
கும்பரி செய்துங் குடந்தையே - அம்பர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளவிட மார்ந்தான் கடவுளரைக் காக்கவெழு
காளவிட மார்ந்தான் கலப்பு. (48)

ஆட்டாலை வெம்புகைகண் டாடமயி லங்குயில்கள்
கோட்டாலை யெய்துங் குடந்தையே - தாட்டானை
நீடுவசனந்த னிகமா கமமெனச்சொ
னீடுவச னந்த னிலம். (49)

பூருவமாய்ப் பொன்னி புரண்டிருபா லும்பெருகிக்
கூர வருள்செய் குடந்தையே - சூரியனைக்
கண்ணிடந் தோட்டினார் காரணிபா லாய்க்காதின்
கண்ணிடந் தோட்டினார் காப்பு. (50)

சாரம் பரத்தகந்தி தாவிவிளை யாடுமரி
கோரம்ப ரொக்குங் குடந்தையே - ஆரின்சீர்
மாலை முடித்தார் மதிமுடித்தார் வல்வினையேன்
மாலை முடிந்தார் மனை. (51)

அஞ்சத்தன் வாழ்வு மரிவாழ்வும் வாழ்வார்க்குக்
குஞ்சத் துணையாம் குடந்தையே - நெஞ்சத்தில்
வாரம் படைத்தார் மதுரையினில் வந்துவையை
வாரம் படைத்தார் மனை. (52)

வேறு தலத்துவினை வீப்பதன்றித் தன்வினையுங்
கூறு படுத்துங் குடந்தையே - நீறுபுனை
காயம் பவளத்தர் கண்ணெனக்கண் ணாருயிரைக்
காயம் பவளத்தர் காப்பு. (53)

அஞ்சு தொழிலு மமையக்கீழ்க் கோட்டத்திற்
குஞ்சிதத்தா ளோங்குங் குடந்தையே - வஞ்சியெனக்
கட்டா மரையர் கலக்கவையற் றந்தவராக்
கட்டா மரையர் கலப்பு. (54)

பூவி லிருக்கும் புனிதற்கும் பொற்புடனோர்
கோவி லிருக்குங் குடந்தையே - தாவிலிருக்
காலு மறியா ரளவறியா ரங்கையிருந்
தாலு மறியா ரகம். (55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தமணிக் கோயிலின்முத் தேவரைவைத் தேயுலகங்
கொய்தளித்துக் காக்குங் குடந்தையே - கைதவர்கள்
கண்டுபணி யக்கிட்டார் கையரைதோள் சென்னியருள்
கண்டுபணி யக்கிட்டார் காப்பு. (56)

ஏலா வரிகரிதே ரெய்திமறு கொன்றொடொன்று
கோலா கலஞ்செய் குடந்தையே - மேலாகுந்
தங்கநக வில்லினார் தண்கயிலை யாதியெனத்
தங்கநக வில்லினார் சார்பு. (57)

பாடுமறை பூவைகிளி பார்த்திருந்து பொன்னியின் பைங்
கோடி ருபா லுஞ்சொல் குடந்தையே - ஓடுமுளம்
நாட்டியஞ் செய்தார் நயக்கவனஞ் சென்றுபின்னோர்
நாட்டியஞ் செய்தார் நகர். (58)

சாபந் தவித்தம்மை சந்நிதியிற் சந்திரர்க்காங்
கூபமொன்றோங்குங் குடந்தையே - தாபரநற்
சங்க மங்கணூறினான் றந்துவருந் தத்தேவ
சங்க மங்கணூறினான் சார்பு. (59)

தேடி யனமுதவுஞ் செல்வர்மனை வீதிதொறுங்
கோடியினு மல்குங் குடந்தையே - நாடவொணார்
பாத கமலத்தார் பார்த்து மறைச்சிலம்பூர்
பாதகமலத்தார் பற்று. (60)

கைத்தொழிலைக் கண்டகில கம்மியனு நாணமனைக்
கொத்து நெருங்குங் குடந்தையே - துய்ப்பதின்றி
ஆவிநைந் தாடினா ராரூரர்க் கேற்றளித்தார்
ஆவிநைந்தாடினா ரார்வு. (61)

பாளை யுயர்கமுகிற் பைங்கழைகண் மேலண்ட
கோளகையி னீடுங் குடந்தையே - மாளிகைப்பொற்
கோகனகனந்தன் குலவிருபா கத்தனெண்சீர்க்
கோகனகனந்தன் குடி. (62)

கேசவற்கு மாசை கிளரப்பொ னூலமைத்துக்
கோசிகங்க ணெய்யுங் குடந்தையே - வாசியொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதவூ ரர்க்கு வந்தார் வைதுமனப் பத்தியொரு
வாதவூ ரர்க்கு வந்தார் வாழ்வு. (63)

சாமளவும் பொன்னி தனிலாடி நோயின்றித்
கோமளம்யா ருஞ்சேர் குடந்தையே- மாமதுரை
அங்கயற் கேதனத்தா னாயினா னஞ்சலிக்கும்
அங்கயர்க் கேதனத்தா னார்வு. (64)

தீமுகரு மின்பச் செருக்கிலழுந் தித்தேவர்
கோமகனாய் வாழுங் குடந்தையே - வீமளவில்
வெம்பசிய வித்தான் விழைந்துபன்றிக் குட்டிகட்கு
வெம்பசிய வித்தான் விருப்பு. (65)

சீமானோ வென்றுபிச்சை செய்வோர் மகிழ்ந்தியக்கர்
கோமானை யேசுங் குடந்தையே - தேமாவின்
கச்சிநக ரத்தன் கனிந்துபூச லார்புரியா
கச்சினக ரத்தன் கலப்பு. (66)

ஏலக்கா யின்கனியை யிச்சித் தமரர்வரக்
கோலக்கா வான்போங் குடந்தையே - ஞாலக்கா
பத்துமடங் கற்படுத்தான் பத்திபுரி தொண்டருக்கோ
பத்துமடங் கற்படுத்தான் பற்று. (67)

ஆட்படு தொண்டருளத் தானந்த வாரியெனக்
கோட்பலவு தேன்சோர் குடந்தையே - சேட்படுத்துக்
கோவணங் கேட்டார் குலவுதிரு நாவலூர்க்
கோவணங் கேட்டார் குடி. (68)

பச்சைத்தே ரான்பரிமா பார்த்துயர்ந்த பைங்கதலிக்
குச்சத்தி னாணுங் குடந்தையே - இச்சகமுற்
றாங்கார மாட்டினா ரன்றுமகம் போய்த்தக்க
னாங்கார மாட்டினா ரார்வு. (69)

நாளவதி வந்துமிடர் நல்கவெரீஇ நின்றுநவக்
கோளவதி யெய்துங் குடந்தையே - மாளவதி
போகத் துணையார் புகனாவ லூரர்வழி
போகத் துணையார் புரம். (70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்முழுது நீக்கியநற் பண்ணவர்க ளைந்தவித்துக்
கூர்மமென வைகுங் குடந்தையே - நீர்முறையின்
ஆறுமத மானா ரடைந்து தம்மைக் கண்டளவில்
ஆறுமத மானா ரகம். (71)

ஆபுரத்த வென்ன வநேக விடிவிளக்குக்
கோபுரத்தி னீடுங் குடந்தையே - தீபுரத்தில்
வைத்த வருளினார் மாயா மலங்களைய
வைத்த வருளினார் வைப்பு. (72)

பாற்புணரி நாற்புறமும் பாய்ந்ததென வெண்ணீற்றிற்
கூர்த்தமெய்யர் சூழுங் குடந்தையே - கார்க்கடலின்
மீனாக வென்றான் விடைமுகனைக் கண்ணாகு
மீநாக வென்றான் விருப்பு. (73)

அல்லிமலர்க் கொன்றைபொரு ளாகவடி யார்களெனக்
கொல்லியளி பாடுங் குடந்தையே - புல்லடியார்
நாட்டச் செவிமுனியார் நாடநடித் தார்புரந்தீ
நாட்டச் செவிமுனியார் நாடு. (74)

தாரா சுரன்வணங்குந் தாரா சுரமுமெழில்
கூரா விளங்குங் குடந்தையே - நேராகப்
பாதியுருப் பச்சென்றார் பற்றறக்கா சிக்கரசு
பாதியுருப் பச்சென்றார் பற்று. (75)

சண்டனுக்கு நல்லருளைத் தந்தசண்ட தீர்த்தநிலை
கொண்டு விளக்குங் குடந்தையே - விண்டமது
மத்தச் சடையார் வழிபடுவார் தங்களைக்கா
மத்தச் சடையார் மனை. (76)

நாலு மறைப்பொருளு நன்றாய் விளங்கவநு
கூலியா யோங்குங் குடந்தையே - வாலரியாய்
அப்பரையார் வத்திரத்தா ராக்கிமறைத் தட்டருள்செய்
அப்பரையார் வத்திரத்தா ரார்வு. (77)

நோற்றவரிற் றீமைபுரி நொய்யவரு மையமொரீஇக்
கூற்றுவனை யஞ்சாக் குடந்தையே - மூற்றையுவ்விச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்த ரத்தியத்தர் சங்கரியைப் பொங்கியவற்
சத்தியத்த ரத்தியத்தர் சார்பு. (78)

மாதண்டர் கொள்ள வதைக்க வளைத்தநெடுங்
கோதண்ட னும்வாழ் குடந்தையே - தீதண்ட
என்னைப் படையா னிறந்துசிலர் போற்பிறந்தான்
என்னைப் படையா னிடம். (79)

தஞ்சமென யாமுமுன்னோர் தந்தியிற்றாழ் வேமெனல்போற்
குஞ்சரங்கள் சூழுங் குடந்தையே - நெஞ்சமுற
வெள்ளத்தை யாற்றினார் மேவுநந்தி நீராதி
வெள்ளத்தை யாற்றினார் வீடு. (80)

சாத்திரத்தார் பஞ்சமுக சன்மத்தா ராதிசைவ
கோத்திரத்தா ரேத்துங் குடந்தையே - ஏத்திக்
கலியாண நாட்டினார் கைதொழநஞ் சுண்டு
கலியாண நாட்டினார் காப்பு. (81)

கண்டுமதின் மேலமைத்த காரிடப மேலிடஞ்செல்
குண்டை வெருவுங் குடந்தையே - கண்டமுறும்
அஞ்செவிய மையா னடியார்சொ லன்றியொன்றை
அஞ்செவிய மையா னகம். (82)

அற்றமிலா மேனிலைமே லாயிழையார் கற்பகப்பூக்
குற்றுவந்து சூடுங் குடந்தையே - உற்றாங்
கொலிக்கு முடுக்கையா ரோர்தொண் டரைக்கொண்
டொலிக்கு முடுக்கையா ருர். (83)

பாணம் படச்சிதைகும் பத்துகுமூக் கிற்கும்ப
கோணமென வோங்குங் குடந்தையே - ஆணவப்பேய்
ஆடலை வீட்டினா ரைவகையொன் றில்வழிசேர்த்
தாடலை வீட்டினா ரார்வு. (84)

நீள்கோ புரத்தலையி னீடுமரி யோரையதிற்
கோளரிவைத் தொக்குங் குடந்தையே - வேளெரியக்
கண்டநய னந்தர் கவின்றோ டெனக்காதிற்
கண்டநய நத்தர் கலப்பு. (85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலுநிறை யென்றிப்பர் தன்னையர்மா டத்துவிண்சொல்
கோலினிற்கைந் நீட்டுங் குடந்தையே - நாலுமறை
கட்டுமொழி யாவிருப்பார் கைதொழுமூ வர்க்குமெயில்
கட்டுமொழி யாவிருப்பார் காப்பு. (86)

பாடவதி மேனிலையார் பற்றிவிண்ணிற் சென்மிதுனங்
கோடவதி யாகுங் குடந்தையே - நாடவதி
ஒன்றுமிலான் வல்லா னுகைப்பான் மறையெனப்பேர்
ஒன்றுமிலான் வல்லா னுவப்பு. (87)

கும்பமொன்பான் பத்தென்னக் கோபுரத்தின் மீதுவிண்செல்
கும்பமுங் கூடுங் குடந்தையே - உம்பருடன்
காராமை யோட்டினான் கைதொழநன் மார்பணிந்த
காராமை யோட்டினான் காப்பு. (88)

அண்டரைக் கூவிமறை யந்தணர்கள் வேள்விபுரி
குண்டநிரை சூழுங் குடந்தையே - தொண்டரெறி
கல்லா லமர்ந்தார் கதியளித்தார் நால்வருக்காக்
கல்லா லமர்ந்தார் கலப்பு. (89)

கோதாட்டி னாருமுத்தி கூடலா மென்றுநிதங்
கோதாட்டி வாழுங் குடந்தையே - சூதாட்டில்
அந்தரிக்குத் தோற்றா ரதுவிதுவோ வென்றுளஞ்செய்
அந்தரிக்குத் தோற்றா ரகம். (90)

பாடார் கலியுலகு பாய்ந்துறினும் பல்லுயிர்க்குங்
கோடா வளமாங் குடந்தையே - கோடாதி
கோலங்க ளைந்தார் குலவுசிவ மாதியவாங்
கோலங்க ளைந்தார் குடி. (91)

நாடிக்கை யாற்புனைவோர் நண்ணி நவநவமாய்க்
கோடிக்க வோங்குங் குடந்தையே - சூடிப்பாம்
பம்புலிப்போர் வையா ரமைத்தா ரரைக்கசைத்த
வம்புலிப்போர் வையா ரகம். (92)

காட்டிய வெத்தலமுங் காணா வதிசயங்கள்
கூட்டி யுணருங் குடந்தையே - தேட்டமின்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியடி பட்டார் தமக்கெளியார் பாண்டியன்கைச்
சாதியடி பட்டார் தலம். (93)

நற்றவ மன்புகொடை நல்லறிவு மேன்மையொடு
கொற்றநிலை கொள்ளுங் குடந்தையே - பற்றுநரை
யோக வனத்தா ருவப்ப ருளந்தெளியார்
யோகவ நத்தா ருவப்பு. (94)

கண்டபடி கண்டுறினுங் காணாக் கதிமறையிற்
கொண்டபடி யுண்டாங் குடந்தையே - குண்டமென
வாயுதரற் கூட்டினான் வையைதனை யூமையுரு
வாயுதரற் கூட்டினான் வாழ்வு. (95)

எல்லா மறைக்கு மிலக்கியமா யெவ்வுயிருங்
கொல்லாமை போலுங் குடந்தையே - இல்லாமே
தற்போதங் கெட்டார் தமக்கெளியார் யுத்தியினாய்
தற்போதங் கெட்டார் தலம். (96)

வீமுகனு மாறா விதியாற் றனதகம்போய்க்
கோமுகனுந் தேறுங் குடந்தையே - காமுகராய்ச்
செய்யவத்தி ரத்தினார் சேரார் திசையொடுச்சிச்
செய்யவத்தி ரத்தினார் சேர்பு. (97)

காண வினவக் கலைதெரியக் கண்டுணரக்
கோணடை யெய்தாக் குடந்தையே - காணுலகம்
நாட்டி நொடித்தா னயந்துபொரு ளுரன்மாறன்
நாட்டி நொடித்தா னகர். (98)

ஓடாத நுண்மதியு மோடித் தன துவளக்
கோடாய்ந் தறியாக் குடந்தையே - நீடானைக்
காப்புக் குறைந்திடுவார் கைதொழார் தங்களிடங்
காப்புக் குறைந்திடுவார் காப்பு. (99)

தேவ வடிவாய்த் திருவடிவாய்த் தேவருக்கோர்
கோவில் வடிவாங் குடந்தையே - மூவடிவம்
ஆய்வடி வானா னறியவரு ளிவ்வடிவுக்
காய்வடிவானா னகம். (100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி

தந்திரமும் வாழி சதுர்மறையுந் தான்வாழி
அந்தணரும் வாழி யறம்வாழி – பைந்தமிழிற்
றந்தகுடந் தைவெண்பாத் தன்னையுணர் வோர்களெல்லாம்
சந்ததமும் வாழி தக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதார்த்ததீபிகை

விநாயக வணக்கம்

தந்திமாமுகத் தெந்தைதாளிணைச்
சிந்தையாலருந் தொந்தநீங்குமே.

ஆக்குவித்தோன் பெயர்

தென்னாக நேர்சிவ சம்புப் புலவனைத் தெய்வமறை
தன்னாக நேர்சிவ சங்கர பண்டிதன் றன்னைமலர்ப்
பொன்னாக நீடு புனித பதங்களிற் போற்றி செய்யும்
சுன்னாக நாடன் முருகேச பண்டிதன் சொல்லிதுவே.

ஆக்குவித்தோன் பெயர்

காப்போல் வளருங் கவிகையன் செந்தமிழ்க் காவலரைக்
காப்பானற் சேலத் துயர்திருப் பத்தூர்க் கடிநகரான்
யாப்பா லிசைக்க கலியாண சுந்தர னீதெனலால்
யாழ்ப்பாணச் சுன்னை முருகேச பண்டிதன் யாத்தனனே.

அவையடக்கம்

பெற்றமுன் பெற்ற பெரியவன் வாரி பெயர்ந்திலங்கை
முற்றிய முற்றென முற்ற வெறும்பு முயன்றதுபோல்
சற்றுமோர் வட்குணர் வில்லா வெளியனுந் தட்கலின் றிக்
கற்றவன் போலப் பதப்பொருட் டீபிகை காட்டினனே.

நூல் செய்த கால முதலியன

தர்க்க சங்கிர கப்பொரு டான்மிகத்
தொக்க சொற்பொருட் டீபிகை சொற்றனன்
மிக்கொ ரொன்றினை விட்டவை யாயிரந்
தக்க வாண்டு தழையுங் கலியினே.

நூல்

பதார்த்தோத்தேசம்

பொருள்பண்பு கன்மம் பொதுமை விசேடம் பொருந்துகின்ற
ஒருசம வாய மபாவ மெனப்பதத் துப்பொருள்கள்
உரைதரி னேழவை யெல்லா முறைமுறை யோதிடுவன்
வரைவள ருந்தமி ழைப்பயி லுந்திரு மாமயிலே. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவிய குணங்களின் வகை

மண்புன நீவளி வான்போழ்து திக்காத்து மாமனமென்
றொன்பது முற்பொருள் மூவெண் குணங்க ளுருவஞ்சுவை
பின்பகர் நாற்ற முறலெண் ணளவு பிறிதியைபு
கண்பெறு நீக்கம் பரத்துவம் பின்மை கடுந்திண்மையே (2)

காணு நெகிழ்ச்சி சிநேக மொலிபுத்தி கண்டசுகங்
கோணும் பருவர லிச்சை வெறுப்புக் கொளுமுயற்சி
பேணும் தரும மதன்மம் பழக்கம் பிறங்குமிவை
மாணும் பொருள்வயி னுள்ளன வென்று மதித்தனரே. (3)

வினைமுதலிய நான்கின் வகை

மீயெழல் வீழ்தல் வளைத னிமிர்தல் வினைநடத்தல்
றாய்வுழி யைவகை யென்பர்சா மானிய மாமிரண்டே
ஏயும் பராபர மென்ன விசேடமெண் ணில்லனவாய்
வாய் தரு நித்தப் பொருளி னிடைச்சம வாயமொன்றே. (4)

இன்மை வகை

முன்னின்மை பின்னின்மை யொன்றினொன் றின்மை முழுது மின்மை
பன்னும பாவப் பகுப்பொரு நான்கு பதார்த்தமெனச்
சொன்னவை யேழுக்கு முள்ளவகையிவை தோகை நல்லாய்
இன்னினிச் சொல்வன் பிருதிவி யாதி யெடுத்துவந்தே (5)

பிருதிவி முதலிய நான்கின் விவரணம்

தரைமுத னான்குந் தனித்தனி நித்த மநித்தமெனப்
பிரிதரு நித்த மணுக்கா ரியங்கள் பெயரநித்தம்
வரையுமந் நாற்பொரு ளுக்கும் பகுப்பு வகுப்பர்பின்னும்
உரைதரு மாக்கை பொறிபுல னாமென வொண்டொடியே. (6)

செப்பிய நாற்பொருட் டேயத் திருப்பது தேகம்பொறி
வைப்பென நாசி நுனிநா விழிமுழு மையுடல்கொண்
டப்பெரு நாற்றஞ் சுவையொலி யூறுற லாயுமவைக்
கொப்புங் கிராண மிரசனாங் கண்டுவக் குப்பெயரே. (7)

விடயங்க ளாவன மண்கன் முதலிய மேதினிக்குப்
படரு நதிகட லாதிய நீர்க்குப் படிவிசும்பு
தொடரும் பிலன்வயி னுள்ளன தீக்குத் துளக்கமுற
அடரு மரமு னலைக்கு மருத்தங் கருங்கலிக்கே. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி முதலிய பாரி லிருப்பன வானிலுள்ள
மின்னன் முதலிய நீரை விராயென மேவுவதீன்
அன்னஞ் சமைக்கு மணல்வயிற் றெய்துவ தாகரசம்
பொன்னை முதலிய நாற்றீ விடயங்கள் போந்தனவே. (9)

உள்ளுடல் வாயுப் பிராணனென் றாம துபாதிதனாற்
றள்ளும் பிராண னபானாதி பேர்பெறுந் தன்னுருவின்
றுள்ளும் பரிசத் ததுகா லெரிவெம்மை யூற்றதுநீர்
சிள்ளென் றொடற்றுப் பிருதிவி நாற்றஞ்செய் சீரியதே. (10)

ஆகாய முதலிய மூன்றின் விவரணம்

பின்னைந்துள் வானொலி யுள்ளது காலம் பெறுங்குணமோ
முன்னது வாத லிறப்பாதி மூன்றிற்கு மூளுந்திசைக்
குன்னுங் கிழக்கு முதல வழக்கிற் கொருமுதன்மை
மன்னழி யாமை நிறைவே கமும்பொது மற்றிவைக்கே. (11)

ஆன்மாவின் விவரணம்

அறிவுக் கிருப்பிட மான்மா விருதிற னாவனெல்லாம்
அறிபவ னீச னொருவன் சுகதுக்க மற்றவன்காண்
பிறிது பிறிதுமெய் தோறும் வெவ்வேறு பிரிந்துநித்தம்
உறையும் வியாபகன் சீவாத்து மாவென உன்னுதியே. (12)

மனத்தின் விவரணம்

இன்பதுன் பம்முத லெய்துங் கருவி யெழின்மனமாம்
மன்பதை தோறும் பிரியாம னிற்கும் வழக்குண்மையின்
என்ப தனந்தம் பரமாணு ரூபமெப் போதுமுள்ள
தொன்பது நீயறி சொற்றே னினிக்குண மோதுவனே. (13)

உருவ விவரணம்

திருக்குவின் மாத்திரங் கொள்ளுங் குணமொழி சித்திரமுன்
உரைக்கு மெழுவகை பார்முதன் மூன்றி லுறுநிலத்தே
புரைக்கு மெழுமையு நீரின் மறைவெண்மை பொற்றழலின்
இருக்கும் வெனிப்பட வெண்மையென் றாய்ந்தறி யேந்திழையே. (14)

இரச விவரணம்

ஆயு மிரச மிரசனங் கொள்குண மன்மதுகாண்
தோயு மதுரமுன் னாக வறுவகை தொல்புவியும்
பாயும் புனலு மிருப்பது பாரிற் படருமெல்லாம்
தூய மதுரமொன் றேகாணு நீரிற் றுகளறவே. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தஸ்பரிசங்களின் விவரணம்

நாற்றங் கிராணங் கவருங் குணங்கிதி நண்ணுவது
சாற்று மிருவகை நன்றெனத் தீதெனச் சாருந்துவக்
கூற்றள வோர்குண மன்னது மூவகை யூதையந்தம்
தோற்றுங் குளிர்சுட நீர்நீ ரவைபிற தோற்றமின்றே. (16)

உருவ முதலிய நான்கிற்குமுள்ள நித்தா நித்தங்களின் விவரணம்

உருவமு னான்கும் புவியினிற் பாகத் துதிப்பனவாய்
மருவு மநித்தம் பிறவற்றி னித்தமு மாறுதலும்
விரவுமப் பாக விதிதமக் கின்றி விளங்குநித்தப்
பொருளிடை நித்த மநித்தத் தநித்தம் பொருந்திடுமே. (17)

சங்கியா விவரணம்

ஒருமை முதல வழக்கினுக் கேதுவெண் ணொன்பதுமாம்
ஒருமை முதலிப் பரார்த்த பரியந்த முள்ளதன்ன
தொருமை யநித்திய நித்தியஞ் சேரினவ் வுண்மையுறும்
ஒருமை யலாதன வெங்கு மநித்திய மொண்பொருட்கே. (18)

பரிமாண விவரணம்

அளப்ப வருஞ்சிறப் பாகிய காரண மாமிதனைக்
கிளத்திடு வார்பரி மாணமென் றேயணுக் கேடின் மகத்
துளப்பி லிரச்சுவந் தீர்க்கமு நால்வகை யுள்ளதுமேற்
கொளப்படு மொன்ப தெனும்பொருள் யாவுங் கொளப்படுமே. (19)

பிருதத்துவ சையோகங்களின் விவரணம்

வேறா மெனற்குச் சிறப்புக் கருவியை வேற்றுமையாக்
கூறா கிடப்பர் பொருள்யாவுங் கூடிடுங் கூடியதென்
மாறா வழக்கினுக் கேதுசை யோகமன் மற்றதுதான்
ஏறா வருபொரு ளொன்பது மேறு மிது சிறப்பே. (20)

விபாகபரத் துவாபரத்துவங்களின் விவரணம்

கூடிய கூட்டக் கெடுதி புரியுங் குணம்பிரிவு
பாடிய வெப்பொரு டோறு மிருக்கும் பராபரமென்
றாடிய முன்மையும் பின்மையுங் காரண மக்குணங்கள்
தேடும் புவிமுத னான்கு மனத்துந் திகழுமன்றே. (21)

திக்கிற் பரத்துவந் திக்கப ரத்துவஞ் சேணணிமை
யொக்க விரண்டினுங் காண்பன காலத்தி னோரினவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதம் முன்னினும் பின்னோ னினுமுறுஞ் சாரிரண்டு
மிக்கபராபர மென்னும் வழக்கின் விகற்பறியே. (22)

குருத்துவ திரவத்துவ ஸ்நேகங்களின் விவரணம்

நீரும் புவியு மிருக்குங் குருத்துவ நின்றுயர்விற்
றீருமுன் வீழ்ச்சிக் கசமாயி யென்ப திரவத்துவஞ்
சாரு முதலி லொழுகற்கக் காரணந் தானியல்பு
பேருநை மித்திக மென்றிரு பாங்குறும் பேசிடினே (23)

நாரத் தியல்பு நெருப்பிற் புவியினை மித்திகமாம்
பாரிற் கனற்றொட ரானெய்ந் நெகிழ்ச்சிநற் பைம்பொனெகிழ்ந்
தூரு நெகிழ்ச்சி கனலிடைக் கண்ட துறுந்துகண்முன்
சேரத் திரட்டுஞ் சிநேகம் புனன்மட்டுஞ் சேருமன்றே. (24)

சத்த விவரணம்

வழுத்திய காது கவர்குண மோசைவிண் வைப்பிரண்டே
எழுத்தின் வடிவுந் தொனியின் வடிவு மெனவகைமுன்
எழுத்து முதலிய முன்னது பின்ன தெறிபறையின்
எழுப்பு மொலியை முதலிய புத்தி யினிச்சொல்வனே. (25)

புத்தியின் விவரணம்

புத்தி யறிவெவ் வழக்கிற்கு மேது புகன்மிருது
வைத்த வநுபவ மென்னு மிருவகை மற்றதுமுன்
ஒத்த பழக்கத்தின் மாத்திரங் காண்ப துதற்கன்னியம்
மெத்து மநுபவ மன்ன திருவகை மெய்பொயென்றே. (26)

தன்னை யுடையதிற் றானடை யாகந் தருதன்மெய்யே
என்னை யிதுவெள்ளி வெள்ளியென் றோர்த லிதுபிரமை
தன்னை யிலாததிற் றானடையாகத் தருதல் பின்னே
என்னை யிதுவெள்ளி யிப்பி யெனலப் பிரமையிதே. (27)

புத்தியின் மெய்யநுபவ விவரணம்

பிரத்தியக் கம்மநு மித்தி யுபமிதி பேசுமுயர்
தரத்தியல் சாத்த மெனநால் வகைப்படுஞ் சாருமெய்ம்மை
யுரைத்திடுங் காண்டல் கருத லுவமை யுரையெனவே
வரைத்த கரணமு நால்வகைத் தாகு மயிலதற்கே. (28)

அதிற்கரண விவரணம்

மிக்க தொழிலுடை முக்கிய காரண மேற்கரணந்
தக்கவக் காரணங் காரியங் காணத் தகுநியதந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொக்குமுன் னிற்பது வேறு வழியினிற் சூழ்வதின்றி
புக்கமுன் னின்மைக் கெதிர்மறை காரியம் பொற்றொடியே. (29)

நேர்சம வாயி யசமாயி யோடு நிமித்தமெனக்
காரண மூவகை யொற்றுமை யாயெதிற் காரியந்தான்
சாரு மதுசம வாயி யுதாரணந் தந்துமடிக்
காரு மடியுந் தனது நிறத்தினுக் காமதுவே. (30)

காரியத் தோடெனுங் காரணத் தோடெனுங் கண்டபொருள்
ஓரிடத் தொற்றுமை யாயுறுங் காரண முற்றவிடை
பாரிடைத் தந்துசை யோகம் படத்திற்கப் பாநிறமுஞ்
சாரும் படத்தி னிறத்துக் குதாரணந் தாழ்குழலே. (31)

அன்ன விரண்டிற்கும் பின்ன நீமித்த மதுதறிபா
மன்னுங் குழலை முதலிய வென்ப மடிதனக்கே
இன்ன வியலுறுங் காரண மூன்று ளெதுசிறந்த
தன்னது முன்சொல் கரண மநுபவத் தாய்ந்தறியே. (32)

பிரத்தியக்ஷப் பிரமாண விவரணம்

காட்சி யறிவின் கரணநற் காண்டலக் காட்சியது
மாட்சி நிதியுட னிந்தியங் கூடி மன்னறிவு
காட்சி விகற்பம் விகற்பிலி யென்றிரு காட்சியதா
மாட்சியிற் காண்ப லறிவே விகற்பிலி வாள்விழியே. (33)

மற்றது சாத்த னிவன்மறை யோனிவன் மாநிறத்தன்
மற்றிவ னென்னப் பெயராதி கொண்டு வகுத்தறிதல்
உற்ற வறிவிதற் கேது வறுவகை யுய்த்துணரத்
தெற்ற வுரைக்குவன் சையோக மாதி தெரிந்துகொள்ளே. (34)

பிரத்தியக்ஷத்தில் அறுவகைக் காட்சிக்கும் விவரணம்

கண்ணிற் பொருளு முருவமுஞ் சாதியுங் காணறிவே
எண்ணிற்சை யோகத் தொடர்முதன் மூன்றி னியலுவன
வண்ணச் செவித்துளை வானொலி சாதி மயங்கறிவே
விண்ணப் பெறுஞ்சம வாய முடன்சம வேதறிவே. (35)

கொண்ட விசேட விசேடிய பாவங் குடமில்லதிம்
மண்டலமென்று மருவுறக் காணுதன் மானுவசீர்க்
கண்டலங் காது கரண மறுவகைக் காட்சிகட்கும்
விண்ட பொறிகள் பிரமாண மென்பது மேவியதே. (36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுமானப் பிரமாண விவரணம்

கருத்துக் கரண மநுமிதி காணவக் காணுகையே
பொருத்தும் விமரிச ஜன்னிய ஞானம் புகன்றவிது
அருத்த வியாத்திய பக்க தருமதை யாமறிவு
நெருப்பு வியாப்பிய தூமி யெனலது நெஞ்சுணரே. (37)

அடுக்க லதிலன லுள்ளதென் றோர்த லநுமிதியாம்
எடுத்த வியாத்தி யெவண்புகை புண்டவ் விடத்திலனல்
அடுக்குமென் ஞானம் வியாப்பியம் வெற்பினை யாதிதம்மில்.
தடுத்தங் கிருக்கும் விருத்தித் துவம்பக்க தன்மதையே. (38)

தன்னநு மானம் பிறரநு மான மெனவிரண்டு
முன்னநு மான மடுக்களை யாதியின் முன்னிவைத்துப்
பின்னை மலையிடை யன்ன வியாத்தியைப் பேணறிவே
தன்னநு மான மிலங்க பராமரி சம்பதுவே. (39)

பிரதிஞ்ஞை யாதிய வைந்துறுப் போதிப் பிறர்தமக்கவ்
வுரனை யுதிப்பிப் பதுபின் னதுமலை யுள்ள துதீ
பிரதிஞ்ஞை யேது புகையா லெனல்சுள்ளை போலெனக்காட்
டுரவுற மாட்டி முடிப்பன வேனைய வொண்ணுதலே. (40)

இன்னது மன்ன தெனலு மிற்றே யிதனாலெனலும்
சொன்ன விரண்டின் சொரூபங் குறிக்கொண்டு சூழுவதே
முன்னநு மான மிரண்டின் கரண மொழியிதனால்
பின்ன வருமலை தீயுடைத் தென்று பெறுகுவரே. (41)

உடம்பா டுடன்மறை கூடிப் பிரிந்திங் குறுவதினாற்
றிடம்பா டிலிங்க மொருமூ வகைப்படுஞ் செப்புமுன்ன
திடம்பா டிரண்டினுங் கொள்ளும் வியாத்தித் தெரித்துணிவில்
புடம்பாடு தூம முடைமை யிதற்குப் பொருந்துவதே. (42)

என்னை யெனிற்புகை யுண்டவ ணங்ங னெரியட்டில்போற்
றுன்னு மெனுமுடன் பாட்டு வியாத்தியுஞ் சூழுமெரி
மன்னுவ தின்றெவண் மன்னா தவண்புகை மாமடுப்போல்
என்னு மறையின் வியாத்தியுங் காண விருக்குமதே. (43)

அன்வய மட்டின் வியாத்தி யதுகேவ லான்வயிபார்
துன்னபி தேயம் பிரமேயத் தன்மையிற் சூழ்கடல்போல்
என்னு மதுவெதி ரேக வியாத்திக் கியைவதின்றி
மன்னு மெவையு மவையாக வந்திடு வாய்மையினே. (44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெதிரேக மட்டின் வியாத்திய னேவெதி ரேகியென்ப
கிதிவேறு வேறு வகையின் மணமுறு கேண்மையினென்
றெதிரேது காண்பின்றி யெங்குந்தன் பக்க மெனவிருக்கு
மதிமா னிவனை மறுப்புரை யான்மதி மாமயிலே. (45)

பக்கஞ் சபக்கம் விபக்கவிம் மூன்றிற் பருப்பதமே
பக்கஞ் சபக்க மடுக்களை தொக்கவி பக்கமடு
தொக்கவிம் மூன்றும் புகையா லனலைத் துணியத்தொகு
மிக்க விரண்டு மிரண்டிற் றுணிந்திட மேவிடுமே. (46)

இரட்டுற நோக்கித் துணியும் பொருட்கிட மேபக்கமாம்
மருட்கை யிலாமற் றுணிந்த பொருட்கிட மற்றதுபின்
பொருட்பட லின்றித் துணியாப் பொருட்கிடம் போந்திவற்றால்
தெருட்பட லிங்க மொருமூன் றையுமறி தேன்மொழியே. (47)

போலியேதுக்கள்

உள்ள பிறழ்ச்சித் துளபதி பக்கத் தொடு விருத்தந்
தள்ளு மசித்தந் தனடயெனப் போலிக டாமைந்துள
கொள்ளு மனைகாந் திகமூ வகைப்படுங் கூறிற்பொது
விள்ளுஞ் சிறப்பொ ரநுபசங் காரி விதமெனவே. (48)

வேண்டுஞ் சபக்க விபக்க மிரண்டினு மேவுவது
தூண்டுஞ்சா தாரண மங்கியின் மாமலை தூமத்ததென்
றீண்டு முதாரண மாண்டு வியாத்தி யெடுப்பதற்குத்
தேண்டும் பொழுது தடைவந்து நேருந் திறனியதே. (49)

மிக்க சபக்க விபக்கத்தி லின்றி விரும்புகின்ற
பக்கத்தின் மாத்திரந் தங்கல் சிறப்புப் பகருமொலி
திக்கென நித்திய மத்தன்மை யாலெனச் செப்புவது
புக்கமை காட்டி தருமிதி ஞானத்தைப் போக்கிடுமே. (50)

காட்டினைக் காணுத லின்றிரு பக்கமுங் கையறவை
நீட்டு மநுபசங் காரி வியாத்திக்கு நேர்தடையாம்
நாட்டத் துணியும் பொருளி னபாவத்தி னண்ணிநின்று
வேட்ட வநுமிதி ஞான விரோதி விருத்தமதே. (51)

நித்த மலபொருள் யாவு மழிந்திடு நீளளவை
யுய்த்தங் களக்கப் படுதலி னென்று மொலிநித்தியம்
அத்தகு காரியப் பாட்டா லெனவு மறியிரண்டின்
மெத்து முதாரண மாரண மாமிடை மெல்லியலே. (52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திய வின்மையைச் சாதிக்கும் வெறொரு சாதகமாம்
ஏத்துவை யேற்றது வேசற் பதிபக்க மில்லதுயிர்
பாத்திரம் போலுரை யின்மையிற் புள்ளுடல் பாருமென்னா
வாய்த்துரை யாட லநுமிதிக் கீதொரு வன்பகையே. (53)

சார்பங் கசித்த முருவங் கசித்தந் தனைநிகர
ஏலும வியாப்பியத் தன்மை யசித்த மெனவசித்தம்
ஓரின் வகையொரு மூவித மாகு முரைக்குமிது
சாரும் பராமரி சத்தடை யாமிது தானறியே. (54)

பக்க தயினவச் சேதகத் தின்மையைப் பற்றிக்கொண்ட
பக்க முடைய தேசார் பசித்தப் பராமரிசம்
உக்கு நிலைய துதாரணம் வான்மலர்க் குண்டுமடுப்
புக்க மலரென நன்மண மென்று புகலுவதே. (55)

தன்னியல் பின்மையிற் சாத்திய மாமெனச் சார்பிலதே
இன்னய மான வுருவ வசித்த மிதுவுமதே
என்னப் பராமரி சத்தடை சத்த மெழிற்குணங்கட்
கன்னது கானப் படுதலி னென்பதை யாய்ந்தறியே. (56)

சாத்தியந் தன்னில் வியாத்தி தழைந்துயர் சாதனத்திற்
போய்ப்பர வாம லிருப்ப துபாதி புகலுமிதை
யார்ப்பது தன்னை வியாப்பியத் தன்மை யசித்தமெனச்
சேர்ப்பர் புகைத்தன லான்மலை யென்பதிற் றேர்ந்துகொள்ளே. (57)

பாதித மற்றொ ரளவையிற் சாத்தியப் பாடுதனைச்
சாதனை செய்திடத் தானிட மீந்துபின் சார்பலத்தை
மோதலை நீரெனத் தட்கு மனலென முட்டுறுத்தும்
ஏதுவின் போலிக ளைந்து மிவைமுறை யிட்டனனே. (58)

உபமானப்பிரமாண விவரணம்

கரண முபமிதிக் கேயுப மானங் கருதுபெயர்
பொருளுடன் கூடு மறிவே யுயமிதி போலுமறி
வுரைசெய் கரண மதிதேச வாக்கியத் துள்ளபொருண்
மரண மவாந்தரச் செய்கையென் றாய்குதி மாமயிலே. (59)

ஆமான் மொழியின் பொருளறி யாம லரணியம்வாழ்
பூமான் மொழிந்த பொருளா லரணியம் போய்க்கவயம்
ஆமானு மின்ன ததனா லதன்பொரு ளாமென்றுன்னிச்
சீமா னொருவன் றெளிதலி னன்னது தேருதியே. (60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தப்பிரமாண விவரணம்

ஆத்த னுரைத்த வுரைத் தொடர் சத்தமவ் வாத்தனுண்மை
பார்த்துரை செய்பவன் வாக்கிய மென்ப பதசமுகம்
ஆத்தனை யுய்க்கென லாதி யதுபத மாற்றலது
தீர்த்தன் கருதுசங் கேதநற் சத்திசொற் றேர்பொருட்கே. (61)

அண்மை தகுதி யவாய்நிலை யேதவ் வரும்பொருட்கே
எண்ணிற் பொருள்பெற மற்றொர் பதத்தினை யெண்ணலவா
கண்ணும் பதப்பொருளொன்றுட னொன்று கலகமின்றி
நண்ண றகுதி யொழிபின்றிச் சோறன்முன் னாட்டியதே. (62)

வாக்கியம் வைதிகந் தன்னொ டிலௌகிக மற்றிரண்டே
ஆக்கிய வீசன் பிரமாணம் யாவு மதுவைதிகம்
தேக்கிய வாத்த னுரைத்தவு மன்ன திடத்துறினும்
போக்கிய மெய்ம்மை யுடையன வேனைய போக்கிலவே (63)

ஆத்தரு மீசனு மாக்கிய வாக்கிய வத்தமதி
சாத்தமெய்ஞ் ஞான மெனவுரை யாடுவர் தற்கரணங்
கோத்துரை சத்தப் பிரமாண மாகுங் குறுகினவே
பாத்திய நால்வகை பெய்ம்மை யநுபவம் பார்த்தறியே. (64)

பொய்யனுபவ விவரணம்

ஐயந் திரிவு தருக்க மெனப்பொய் யநுபவந்தான்
செய்யும் வகை யொருமூவித மையந் தெரியுமிது
மொய்ய தறிகொல் புமானொரு வன்கொன் மொழியினென்று
நைய விரட்டுற நோக்கி மலைவுறு ஞானமதே. (65)

சுத்தியிடையிது வெள்ளி யெனமதி தோன்றறிவு
மித்தை திரிவு வியாப்பியத் தீர்வின் வியாபகத்தை
பொத்தென றர்க்க நெருப்பில்லை யாயிற் புகையுமில்லை
உய்த்த வுதாரண மென்க வளவைக் குதவியிதே. (66)

மிருதிசுகங்களின் விவரணம்

உண்மையும் பொய்மையு மென்று மிருதியு மோரிரண்டு
வண்மை யுறும்பிர மாஜன் னியமுதன் மற்றையது
பெண்மை யிலேயப் பிரமையிற் றோன்றும் பெறுஞ்சுகந்தான்
தண்மையில் யார்க்கு மநுகூல மாயுணர் தன்மையதே. (67)

துக்கமுதலிய ஆறின் விவரணம்

துக்க மெவர்க்கும் பதிகூல மாயுணர் தோற்றத்தது
புக்க விருப்பிச்சை கோதம் வெறுப்புப் புகன்முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க கிருதி விகிதகன் மப்பிளை தன்மங் கண்டாய்
ஒக்க விலக்கிய கன்மத்திற் பாப முறுவதுவே. (68)

மீட்டும் புத்திமுதலிய எட்டின் விவரணம்

புத்திமு னெட்டுமவ் வாத்துமத் தேயுறும் பொற்குணங்கள்
புத்தி விருப்பு முயற்சி யிருவகை பொன்றுவதும்
நித்திய மாவது மென்ன வநித்திய நீளுயிர்க்கண்
நித்திய மீச னிடத்திலம் மூன்று நிலாவகையே. (69)

சமஸ்கார விவரணம்

ஒருசமற் கார மொருமூ வகையுறு முய்த்துணர்ந்தாற்
பரவிய வேக நிலைபெறப் பண்ணுகை பாவனையென்
றுரவிய வேகம் புவிமுத னான்கு முளத்து முறு
மருவி நிலைபெறப் பண்ணுகை பாய்முதன் மண்ணுறுமே. (70)

முன்ன பநுபவத் தன்னயை யாகி மொழிமிருதிக்
கன்னை யெனவரும் பாவனை யாத்துமத் தல்கியுறும்
இன்ன வறிகுதி மூவெண் குணங்க ளெனமயிலே
பின்னை வினைமுத லைந்தையு மின்னினிப் பேசுவனே. (71)

கன்மசாமானிய விசேஷங்களின் விவரணம்

உலவு சலன வடிவுடைத் தேவினை யுன்ன தங்கீழ்
கலவுசை யோகந் தமக்கேது மீயெழல் காண்விழுதல்
குலவு சரீரங் குனிந்து நிமிர்ந்துகை கூடுதற்கு
நிலவுறு கூட்ட மவைக்கேது கூன னிமிருதலே. (72)

ஏனைய யாவு நடத்த லெனப்படு மிவ்வனைத்து
மானளை யாய்மகி யாதிய நான்கு மனத்துமுறும்
ஆன பொதுமை யழிவின் றநேக மடைத்தவொன்றாய்
மேன பராபர மென்ன விருவகை மேவியதே. (73)

அத்தமுன் மூன்றினு மெய்தும் பொருட்டன்மை யாதியகீழ்
மெத்திய மேலுண்மைத் தன்மை விசேடம் வெளிமுனைந்தும்
இத்தரை முன்னொரு நான்கி னணுவு மெனவிசைக்கு
நித்தியஞ் சேர்ந்தவை வெவ்வே றெனச் சொல்வ நீயறியே. (74)

சமவாய விவரணம்

சாதி வியத்தி யுறுப்பி யுறுப்புத் தலைவன்வினை
போதுங் குணகுணி யோடு விசேடம் பொருணித்தியந்
தீதின் றிரண்டிரண் டாய்வரு மிவ்விடைச் சேருந்தொடர்
ஓது மொருசம வாய மழிவிலி யோருகவே. (75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்மை பின்னின்மைகளின் விவரணம்

இன்மைகணான் கனுண் முன்னின்மை தோன்றுத லின்றிக்கெடுந்
தன்மையின தநுகாரியக்காட்சி முன்றா னுளது
பின்னின் மையென்ப துகாரியத் தோற்றத்தின் பின்னுளதாய்த்
தன்னின்மை யென்ப தொருபோதுந் தீர்வி றகையதுவே. (76)

முழுதும் பாவவிவரணம்

முந்துமுக் காலத் துளதாய சஞ்சர்க்க மொய்த் தொடரால்
வந்து வரைந்து கொளப்ப டெதிர்மறை வண்மையது
பந்தமிலாத முழுது மபாவம் பகருவதற்
கெந்த நிலத்துங் குடமில்லை யென்ப தெடுத்துரையே. (77)

அந்நியோந்நியா பாவவிவரணமும் முடிந்தது முடித்தலும்

ஒன்றினொன் றின்மையதன்வடி வான்வரைத் துள்பொருளை
என்று மெதிர்மறையாக வுடையதொ ரின்மையதாம்
அன்று மடிகுட மென்பதுதாரண மாய்ந்தவற்றுள்
மன்ற வடங்கலிற் சொற்பொரு ளேழென மன்னியதே. (78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நூறு

ஆசிரிய வணக்கம்

மறைமுடிபு மந்த வழியும்பன் மார்க்கத்
துறைமுடிபுந் தன்னுட் டுணிந்து - பிறைமுடியான்
றன்னடிக்கீழ் நின்றானற் சங்கர பண்டிதனே
யென்னையறி வால்வளர்த்த யாய்.

செந்தமிழில் வல்ல சிவசம்பு வென்றுரைக்கு
மந்தண் மதுரகவி யல்லாமற் - கந்தனடி
கைதொழூஉ மன்புநிலை காட்டிக் கலைதெருட்டி
மெய்யிலெனை வைத்தவரார் வேறு.

அவையடக்கம்

முன்னூல் பலவான் மொழிவதே னென் றுசில்லோர்
சொன்னார்கள் பேய்மதியாற் சொன்னேன்கா - ணென்னினு
மாய்ந்தறிந்தார் கொள்ளா ரதனைப் புடைநூலென்
றேய்ந்துபல நூலிருக்கு மென்று.

தாழ்ந்தேன் பெரியோர் தமது திருவடியைத்
தாழ்ந்தேன்சொன் னூலிதனைத் தள்ளாமற் - றாழ்ந்த
குருவிந்த மென்னினுங் கொள்ளுவார் கொண்டால்
ஒருநிந்தை யில்லை யுலகு.

நூல் செய்த காலம் முதலியன

செய்யசக னாண்டு திகழ்பதினெண் ணூற்றேழில்
வையம்புகழ் குடந்தைமாநகரில் - துய்யதொரு
யாழ்ப்பாணச்சுன்னை நகரெய்துமுருகேசனியான்
நூற்பாடினே னீதி நூறு.

நூல்

எழுத்துப் பலவகர மெய்தினாற் போல
வழுத்து மொருதனைப்பன் மார்க்க - விழுத்தகையர்
கொண்டிறைஞ்ச நிற்பான் குலவு திருப்பாதங்
கண்டிறைஞ்சி னாகுங் கதி. (1)

வேதத் துறையறிந்த வித்தகருங் கண்டறியா
நீதிக்கு ணின்ற நெறியென்ப - சோதிக்குட்
சோதியா யன்பிற் றொழுவா ருளக்கருத்திற்
சோதிக்கு மோர்மெய்ச் சுடர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லைபய னில்செயன்மற் றென்னி னரகொடுமேல்
இல்லையென லாகு மிஃதுணரார் - எல்லவருந்
தீமை புரிவதெனை தீர்ந்துஞ் செகதீசற்
காமுறை நிற்பதன்றோ வாம். (3)

கள்ளொடு காமங் களவு பெருங்கொலை
தள்ளாது நாளுந் தருகுவார் - வள்ளல்
ஒருவனிலை யென்ன வுரைத்தானை வைது
பொருதுநிற்ப தென்ன பொருள். (4)

நீக்கமிலா வன்பா னெறிதொறுஞ்செய் செய்கையின்றி
யாக்கா தருளை யயலொன்றுங் - கூக்குரலிட்
டாடுவா ரொக்கு மகில சமயிகளும்
தேடுவ தென்று தெருள். (5)

வேடம் பலவானால் வீடும் பலவாமோ
நாடுமதஞ் சாதியினி னன்னுவதென் - கூடுமுண்மைச்
சாக்கியர்நன் னந்தனார் சான்றுமெய் யன்பொன்றே
யாக்குமுயர் முத்தியதை. (6)

ஆடு குதிரை அனைத்திற்குஞ் சாதிவகை
நாடுங்கா லுண்டென்று நாட்டலாம் - கூடுமோ
மானுடருக் கீது மரமொன்றே பல்கிளைகள்
ஈனுமோ வெவ்வே றென. (7)

தோன்றுமிட மொன்றேனுந் தொல்லுலகிற் சாதிவகை
ஆன்றதொழி லால்வெவ்வே றாகுமால் - ஊன்றவிது
சாதியென்று கொள்ளுவார் சக்கிரி மட்கலம்போல்
ஆதலை யாய்ந்தறியா தார். (8)

பாவிப்பார்க் கந்தந்தப் பாவனையாய் நிற்குமிறை
பூவொப்ப நிற்கும் புனலொப்ப - சேவிப்பார்
ஆசை யொழிந்தங் கறிவு வருந்துணையும்
பேசுமத நீத்தல் பிழை. (9)

தம்மத நீத்துத் தவறுவார்த் தேற்றலலால்
எம்மத மேனு மிகழற்க - அம்மவொரு
கல்லூரி யன்றோ கருது பலசமயம்
புல்லிய விந்தப் புவி. (10)

உலகிலுறு மூன்றினடு வுற்றதனான் மற்ற
இலகுமெனி னுங்கல்வி யின்றேல் - நலமிசைமற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெப்பொருளு மெய்தா விதனினூஉங் குற்றதுணை
மக்களுயிர்க் கில்லை மகி. (11)

ஈவ பெரிதலமற் றீவோ னெவனெனினும்
தேவனென வெண்ணிச் செவிவாயா - ஆவலுடன்
கேட்டுணர்ந்து நாளுமது கேடுபடா தோம்புவனேல்
வாட்டமிலை கல்வி வர. (12)

தன்மொழியை முன்மொழிந்து தக்கதெனக் கொண்மொழியும்
பின் மொழிந்து நிற்பிற் பிழையில்லை - தன்மனையாள்
மிக்க வறியளென விட்டயலிற் கற்பிறந்தாள்
தக்கவளென் றேக றகா. (13)

கல்வி யுடையர் பொருளுடைய ரென்பதெலாம்
இல்லையென்னா தீயு மியல்புடைமை - உள்ளதுகொல்
சேம நிதியுந் திகழாக் கலவிளக்கும்
போல விருந்தாற் பொருள். (14)

ஈதலை யஞ்சா ரிழவஞ்சா ரெவ்வழியும்
போதலை யஞ்சார் பொதுவஞ்சார் - சாதல்
வரினுஞ் சுகமாவர் வண்புலவர்க் கொப்போ
பொருளுடையா ரின்பிற் புறம். (15)

இன்பத்தை நாடி யெனினும் பொருளீட்டந்
துன்பத் தினுக்குமது தூதாகும் - துன்பந்
தருவதுபோற் றோன்றிடினும் தாவாத வின்பம்
புரியுமோ கல்வியைப் போல். (16)

அறிய வறிய வருங்கல்வி தன்னை
மறியு மறியாமை வஞ்சம் - அறியகிலேன்
பாலுண்டு நஞ்சுமிழும் பாம்பி னினம்போல
நூலுண்டு தீயுமிழ்வார் நோக்கு. (17)

மக்கட்குத் தந்தை வருந்திவைக்கு மாநிதியம்
விச்சைமற் றல்லாது வேறில்லை - துய்க்கநிதி
கோடியென வைத்தார் குலமக்க டம்முயிரைக்
கோடியென வைத்தாரோர் கூற்று. (18)

ஊரை யடைந்திடுத லொக்கு மிருவருக்குந்
தேரிற் குருடன் றெளிவதிலை - சீரெல்லாம்
கண்ணுடையான் போலெழுத்தெண் கல்லா தவர்நூலில்
எண்ணுடைய ரென்ப தெவன். (19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவனை மற்றவர்கள் காணா ரவர்தமக்கு
சொற்புலவன் பற்பல்கதை சொல்லுவான் - பொற்பழறான்
வாழை தனையுருக்க வல்லதோ செய்யசுடர்
மாழையொடு வெண்ணெயலான் மற்று. (20)

எந்நாளுங் கற்க விடும்பையி லாரிளமை
என்னினும் வாரா திருந்திடினே - என்னின்
அறிந்தவரோ பொன்னை யடைந்தா ரடையார்
பொருந்திலரோ கல்விப் பொருள். (21)

கற்பனவெல் லாங்கற்றுக் கற்றபினர்க் கற்றதிலை
மற்றிவன்பா லென்று வழங்குமவன் - பெற்றவனைத்
தந்தையலன் குண்டகியென் றார மெனச்சாற்று
நிந்தகனே யாவ னிலத்து. (22)

முற்ற முடியார் முடித்து மொருவேலை
பெற்றிலரா யுள்ளமது பேதுறுவார் - தெற்றெனமுன்
கற்றிருப்பிற் றங்கள் கலையைச் சிறிதேனு
மற்ற துதவாதோ வந்து. (23)

கள்ளொடு காமங் கடுங்கோபஞ் செய்தகுடி
தள்ளரிய துன்பந் தனில்வீழும் - பிள்ளைகளைப்
பெற்றாவ தென்ன பெரும்பழக்க மன்னவர்க்குக்
கற்பிப்ப தேயரிது காண். (24)

படியெடுத்துக் காணும் பயனிங் கறிவின்
அடியெடுத்து முத்தி யடைதல் - குடிகெடுத்து
வாழ்ந்தாரு மில்லை வறுமையினு நீதிநின்று
தாழ்ந்தாரு மில்லை தரை. (25)

பெற்றவரை விட்டுப் பெருந்தூரம் போய்கல்வி
கற்றுப் பொருள்செயலாற் காண்பதெனை - முத்தி
தருமொருவன் செய்ய தளிரடியைப் போற்றி
அறநெறியி னில்லா தவர். (26)

காலத்துக் கேற்பக் கலைபிறிது கற்றாலுஞ்
சீலத்தைக் கைவிடுதல் சீர்மைத்தோ - கோலித்தைத்
தள்ளுமோ யார்க்குஞ் சமமன்றோ நான்மறையோர்
எள்ளுவதென் றங்க ளியல். (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மதநோய் தமரெனுநோய் தன்னீதிச்
சோதி விழியதனிற் றோன்றாமல் - ஓதுமிரு
பாலு நிறைகோற் பரிசிற் பயனளிக்கும்
கோலன்றோ மேவுங் குடி. (28)

சுத்தரையு மிக்கபழி சொல்லவைக்குங் கோலிரண்டும்
எத்தரையு மேலாக்கு மேர்க்கோலொன் - றித்தரையில்
ஏர்த்தொழிலின் மிக்கோ வெழில்வா ணிபமரசு
பார்த்தாலு மிக்க பழி. (29)

ஏர்த்தொழிலான் மிக்க வியல்புடைய ராயிருந்தும்
பார்த்திவர்கீழ் வேலையிலார் பார்த்தற்க - ஊழ்த்திறமோ
உள்ளது போதுமென் றுன்னா துடையவரும்
அன்னவர்கீழ் நிற்கு மவா. (30)

வல்லாரை வல்லுநரா வல்லுநரை வல்லாராச்
செல்லவைக்க வல்ல திருவறியாள் - கல்விதனை
கற்றா ரிவரென்றுங் கல்லா ருவரென்றும்
மற்றா ரறிவார் வரைந்து. (31)

ஈந்து கவரு மிறைமையா லெவ்வுலகும்
போந்து விளங்கும் பொதுமையால் - ஆய்ந்துகண்போற்
காட்டு முறையாலிக் காசினியி னன்னீதி
காட்டுமிறை யேபாஸ் கரன். (32)

நீச னெனினு நெறியி லரசாள்வோன்
ஈச னவனே யிருகண்ணாம் - பூசுரனே
என்னினுங் கீழ்ப்பட் டிருத்தன் முறையாகும்
தன்னெறியி னீங்காமற் றான். (33)

ஆய்ந்தின்புந் துன்பு மருங்குடிகட் கீதலால்
வேந்தனே கண்டதொரு மெய்க்கடவுள் - சார்ந்தகுடி
கள்ளொடு காமநெறி காணச் செலுத்திவரின்
கொள்ளார்க ணல்லதெனக் கோல். (34)

அந்தணர்க்கு வேத மரசர்க்குச் செங்கோன்மை
வந்த வசியர்க்கு வாய்மையுரை - முந்தும்
உழவர்க்கு மேழி யுறுதிமற் றீதே
பளகறுத்து வைக்கும் படி. (35)

கள்ளருந்தும் பார்ப்பானுங் கையேந்தும் பார்த்திவனும்
உள்ள நிறைகுறைக்கு மூருசனும் - வெள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையில் வித்தாக மண்மகனுந் துன்பம்
பெறுகையி லையமிலை பின். (36)

சாதிமுறை நீங்கித் தரணிபரைச் சேவித்து
வேதனத்திற் பொய்வழக்கை வெல்லவைப்பார் - போததனில்
வாழ்வதுபோற் றோன்றிடினும் வாய்க்கும் பொரியின்றி
வீழ்பவர்தஞ் சுற்றமொடு மேல். (37)

ஆசை யறாத வறிவிலிக டம்மைநமன்
ஆசையாய்ப் பெண்ணா யருமகவாய்க் - காசினியாய்
வந்து வடிவுகொளா மாய்க்கு மறினிவைகள்
அந்தமிலா வாரருளி னாம். (38)

பெறுவ சிறிதெனினும் பேதையதி காரம்
அரசனிலு மேலா மறிஞர் - வெறுவியனென்
நுண்ணகைத்து நீங்குவா ரூணர்கே சாகேசி
பண்ணிநிற்பா ருள்ளம் பரிந்து. (39)

கண்ட விடத்தினிமை காணா விடத்தின்னா
விண்டொழுகும் பேதையரை வேண்டற்க - மண்டும்
உடற்கரந்த நோயோ உடற்புறத்து நோயோ
அடற்கெழூஉங் காலத்தா லாங்கு. (40)

அச்சத்தா னட்புறினு மல்லோன் மறைந்துபழிச்
சொற்களையே சொல்லிமிகத் தூறுவான் - சிச்சீ
குரைமுக னொன்றோ குவலயத்தி னட்புப்
பெறவெவரா லீது முடிம் பேது. (41)

மிக்கன கொண்டு விடலு மருவுதலும்
தக்கதலா லோரொன்றாற் றக்கதன்று - குற்றம்
இலாதவரு மில்லை யேதேனு நன்றிற்
செலாதவரு மில்லை தெரின். (42)

வையம்பு நேரிதுயிர் மாய்க்கும் வளைவேனும்
செய்யு மினிமை திருந்தியாழ் - மெய்யிற்
குறைவுடைய ரேனுங் குணமாவர் நல்லோர்
பெறுதியரோ தீயோர் பிறர்க்கு. (43)

உற்றுழித் தேர்வதலா லொண்ணாது நட்டவரைத்
தெற்றெனத் தேரத் தெளியுங்கால் - உற்றபதர்
காற்றடிக்கும் போதல்லாற் கண்டு தெளிவதற்கு
வேற்றுமை யுண்டோ வெளி. (44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கமுங் கேடு மறியா ரறிந்தார்போல்
ஆக்கமிலை செய்யு மறத்தென்பர் - தூக்கினெலாம்
வித்தும் பழமும்போன் மேவலல்லா லெவ்வுயிர்க்கும்
இப்பிறப்ப திப்பிறப்பி லில். (45)

நீதி யுடையர் நெறியுடையர் நிந்தையிலாச்
சாதி யுடையர் தகையுடையர் - ஓதிமிகத்
தேர்ந்துடைய ரென்பதெலாந் தீதாம் பணமொன்று
சேர்ந்துடைய தானாற் சிலர்க்கு. (46)

எல்லா மறிந்தாரு மேதொன் றறியாரு
மில்லை யுலகத் திதுநிசமே - கொல்லரிமுன்
தாழ்ந்த சிறுமுயலாற் றாவியதன் றோகுழியில்
வீழ்ந்தெவனோ ஆங்காரம் வீண். (47)

வல்ல விதியவெனின் மாயுமோ மாய்த்தாலும்
இல்லையெனிற் போம்போ மெவர்காத்தும் - மல்லடுதோட்
பஞ்சவர் சேயான பரிச்சித்து நீருறைந்தும்
துஞ்சினான் பாம்பிற் சுழன்று. (48)

நன்மை செயலா னணுகுந் துயரினிதாம்
அன்மையா லின்பெனினு மாகாதே - வன்மைபெறு
நோய்க்களித்த நன்மருந்தோ நுங்கும் களிமதுவோ
ஆக்குந் துயர மதை. (49)

எக்குணமு மில்லெனினு மேது நிதியிருந்தாற்
றக்கவனென் றியாருந் தலைக்கொள்வர் - தொக்கநிதி
இல்லானைக் கற்றா னெனினுங் கொளாருலகில்
இல்லா ரிருந்தாவ தென். (50)

தன்னாக்கம் வேண்டிப் பிறர்க்குத் தகாவியற்றின்
முன்னாக்க மோடு முடிந்திடுமால் - மன்னாக்கம்
பூண்ட கிளையொடுமுன் பொன்றினான் கண்ணிலிசேய்
பாண்டவ ரோடு பகைத்து. (51)

தாழ்ந்து நடந்தாற் றலையாகுங் கீழெனினும்
தாழ்ந்துவிடு மேலெனினுந் தாழாக்கால் - போந்தபொருள்
தன்னா லறஞ்செய்து தக்கோ ரடிபரவி
முன்னாதல் யார்க்கு முறை. (52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறஞ் செய்தாரிந் நானிலத்து நற்புகழும்
எல்லையின் மேலுலகு மெய்துவார் - புல்லரோ
புல்லுருவி யாவர் பொருட்குங் கிளைக்கும்பின்
செல்லுவர் தீநரகுந் தீர்ந்து. (53)

நல்லோ ரிடரி னடுங்குவதல் லாலுலகம்
அல்லோ ரிடரி னசையாதே - அல்லோன்
அடங்கி னமுங்குவ தல்லா திருள்போய்
மடங்கி னமுங்குவரோ மற்று. (54)

கற்றாய்ந்த மேலோர் கடவனசெய் தற்கல்லால்
மற்றேதுஞ் செய்ய மதியாரே - புற்றினுமோ
வேங்கை யறப்பசித்தும் வெய்ய மிடிவரினுந்
தாங்கரிய நோய்வரினுந் தாம். (55)

ஆனா ரழிந்தா ரழிந்தார் பலரானார்
ஏனாருந் தேடி யிழக்கின் றீர் - நோலாதிங்
காகுமோ லாகு மளித்தார்க்கு வையன்மின்
போகுமேற் போகும் பொருள். (56)

வையம் புரக்கு மகிபால ரென்றாலும்
ஐயம் புசிக்கவுமா மையமிலை - செய்யுங்கள்
தேடி வைக்க வேண்டா திரவியத்தை நல்லறமேற்
றேடிவைப்ப தாகுந் திரு. (57)

செத்தார் பிழைத்தார் செறுநோ யிலாதவரார்
மற்றா ரிவைபிழைத்து வைகுவார் - பொத்திப்
பயன் யாதெனவே பயணந் தனக்கு
முயல்வா ரறிவுடையார் முன். (58)

பற்றித் தொலையும் படியுதித்தா ரல்லாம
லுற்றுத் தொலைவா ரொருவரிலை - சுற்றியனல்
பற்றும் பொழுதுதமைப் பற்றிப் புறப்படலாற்
சுற்றமெனுஞ் சந்தைத் தொகை. (59)

பெற்றன பெற்ற பெறாத பெறாதவென
உற்றுணர்ந் தாசை யொழியாமற் - கற்றவரும்
தேடிவைப்ப ரென்னிற் றெளியார் திரவியத்தை
நாடி வைப்ப தென்ன நகை. (60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவரு மில்லை பெறுதற்கு மேதுவிலை
பெற்றன யாவுந்தம் பின்னாட்கென் - றுற்றுவைப்பார்
மற்றவை துய்க்க வருந்துதவ முன்னில்லா
அற்றமறு பேய்க்கணமே யாம். (61)

ஊற்றாமன் மொண்டா லுறுமோ புனறருமம்
போற்றாமல் வைத்தாற் பொருளாமோ - ஏற்றம்
படைத்தாலும் பொன்வேறு பாத்திரநீர் போலத்
தடைத்தாகும் தான்கொள்ளத் தான். (62)

நிதிநல் வழியின்றி நேடிய துப்பாற்றித்
பொதியிருக்கப் போன துபோற் போகும் - விதியிழுந்த
பூதமெனக் காத்தோன் புலம்புந்தன் புத்திரரா
லேது மிலாம லெதிர். (63)

தன்னுயிர் போலப் பிறவுயிருந் தான்பேணி
லென்ன வறமு மிவன்பால - தன்னை
வருத்துவிர தாதியினான் மன்னிடுவ தென்சுக்
கரைத்தருந்திற் போமோ வயம். (64)

அன்னவருக் கன்னவரா யாடிப் பொருள்பறிப்பார்
இன்னியரோ செய்ந்நன்றி யெண்ணாரே - அன்னவரை
நம்பற்க வோர்துணையா நட்டாற்றில் விட்டகலும்
வம்பரவ ரற்றம் வரின். (65)

தீயன் செயும் வணக்கந் தீதாம் புலிப்பதுக்கம்
பாய்வதற்கன்றோ பகருங்கால் - தூயர்
பகைத்தாலு நன்று பகுத்தறிய மாட்டார்
நகைத்து வெகுள்வர் நனி. (66)

சாதிமுறையெண்ணார் தங்குடிமை தானெண்ணார்
பாதகமென் றெண்ணார் பழியெண்ணார் - மாதுமுன்னாள்
வந்துகுடி கொள்ள மதுவுண் பெரும்புலையர்
முந்தையரோ நீதி முறை. (67)

தன்கையிற் சாதந் தனக்குதவா தாகப்போய்ப்
பின்னொருவன் கைச்சாதம் பேணுவதென் - அன்னோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியிருந்த வாறிதுவோ மெல்லியலை விட்டுப்
பதியயலிற் செல்லப் பயந்து. (68)

கண்ணின்றித் தன்னயலான் காதலியைக் கள்ளத்தில்
நண்ணுவதோ ரின்பமென நாடுகின்ற - புண்ணியர்தன்
காதலியைக் கூடிக் களித்தா னெனக்கண்ட
ஏதிலனை நோவ தெவன். (69)

உண்டவெச்சி லுண்கை யுடனுண்கை யுண்ணவெனக்
கொண்டவுணா வுண்கை கொளா துண்கை - கண்டவெலாம்
நல்லவோ வன்ன துபோ னங்கையரை நீதிதப்பிப்
புல்லவெண லென்ன பொருள். (70)

ஆயிரங்கண் பெற்றா னரியிலங்கை காவலனும்
போயுயிரு நாடும் புறங்கொடுத்தான் - சாயகமற்
றொன்றா லுருண்டா னுயிர்வாலி யன்னியரிற்
சென்றாகுவ தென்ன சீர். (71)

காரிகையென் றேயுரைத்த காரணத்தை யேராமற்
பாரியையாக் கொள்ளப் பரிகின்ற - காரணவென்
செய்கருவி யாலுயிரைச் சேதியா தேகருமம்
செய்வதன்றோ நல்லோர் திறம். (72)

உண்டியிசைந் தீயா ளொளித்துநிதி சேமிப்பாள்
அண்டுமச்சத் தாற்பணிக ளாற்றுவாள் - கொண்டவனைத்
தன்னழ கின் பொருட்டுத் தாங்கநினை வாள்பொருட்பெண்
பின்னொருத்தி யென்கை பிழை. (73)

ஈகையே கஞ்சுகமா வெவ்வறமும் வெல்படையா
வாய்மைதவஞ் சீலமன்பு வாகினியா - நாயகனும்
இல்லாளு மொத்திங் கெதிர்ப்பரேற் பாவமெனும்
அல்லான் புறங்கொடுக்கு மாங்கு. (74)

காக்கை விழிமணிபோற் காதலனுங் காதலியும்
ஆக்கை யிரண்டிற்கோ ராருயிராய் - நீக்கமிலாப்
பத்தியு மெய்தப் பெறுவரேற் பாருலகோ
எத்தரையு மேத்து மெடுத்து. (75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டி மழித்து நெடுந்துறவி போல்வேடங்
காட்டிச்சாந் தானிகங் கைக்கொண்டார் - பூட்டை
யறுத்தவரு மல்ல றறுப்பவரு மல்லர்
பொறுத்தவரே கூடாப் பொறை. (76)

ஊர்தியும் பொன்னி னுடுக்கையு நல்லுணவும்
பாரரசர் போற்றூங்கும் பள்ளிகளும் - சீருறுமோ
உள்ளத் துறவில்லார்க் கோர்நாய் தவிசிருந்தால்
தள்ளுமோ பவ்வீயைத் தான். (77)

தேராத கொண்டு தெளிந்தார்போ னல்லறிவு
கூராதார் பேதையரைக் கோட்டிகொள்வர் -ஆராயின்
மூர்க்கரை மூர்க்கர் முகப்பரல்லாற் பால்விரும்பும்
காக்கையு முண்டோ கலந்து. (78)

கற்ற விடமுங் கலையின் றொகுதிகளும்
சொற்றாவ தென்ன சொலவறியார் - வெற்றிபெறும்
வாளு மனுவும் வயக்குமோ ஆண்டகைமை
ஆளு நெறியில் லவர்க்கு. (79)

யார்க்கும் பொதுவா விருங்கோ னடித்திடினும்
பார்த்தரசன் செய்கையெனப் பாரொழுகும் - கூர்த்தசொலிற்
காட்டு வலி துவளி காட்டுங் கருவியெறி
காற்றின் வழியதே காண். (80)

வையத்திற் செல்வம் வறுமை யென றபால
ஐயத்திற் றீர்நுண் ணறிவின்மை - சையொத்துஞ்
செய்வன செய்யார் சிலர் செல்வ மின்றிருந்துஞ்
செய்வன செய்வர் சிலர். (81)

முற்றா வலியான் முயன்றாரே மூதுலகிற்
பெற்றார் பெருமை பெருங்காதி - பெற்றான்
கரியிதனுக் கூழின் வழிக் காணலாமென்னுங்
கரிசார் சுமப்பார் கடை. (82)

நல்லவினையுந் தீவினையு நாதனுக்கென் றொப்பித்த
தொல்வினை யாளரெனச் சொல்லுவதோ - எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் செயலென் றிருவினை யாளர்
பெறுமா றறியாது பின். (83)

தன்னிலத்தைத் தன்மனையா டன்னகையைத் தான்விற்றுத்
தின்னிலத்தை நன்றென்று செப்பார்கள் - துன்னலரும்
பஞ்சம் வரினும் பழியி றொழில்புரிந்
துய்ஞ்சுயிர்காப் பியார்க்கு முறும். (84)

வாங்கியுண்ட வக்கடனான் மானங் கெடுமென்றும்
சோம்பலிலா வாழ்க்கை சுகமாகும் - தேம்பிச்
சிவிகை சுமந்தேனுஞ் செய்யாது பாவம்
அவிகை தருமான மது. (85)

ஒல்லுவ செய்வா ருரவோ ரறிவிலர்தா
மெல்லையின் மேற்செய் திடருறுவார் - நல்லறமும்
தன்னைமிஞ்சி யில்லை தனையுணரான் பட்டகடன்
என்ன விதமா விறும். (86)

நன்றறியார்ச் சேவித்து நானூறு வாங்கலினும்
ஒன்றுமின்றி நல்லோர்பா லுத்தமமாம் - நன்று
புரிவார் தமையும் புரியார் தமையும்
அறியார் நடத்துவ தால். (87)

ஒருவினையுஞ் செய்யா ருடையராவார் செய்தும்
ஒருபயனு மின்றி யுலைவார் - ஒரு வினையைச்
செய்யவே றொன்றுதாஞ் சேர்வர் பொருளிழப்பர்
ஐயன் செயலறிவா ரார். (88)

மண்ணியி ணெண்மடங்கு வந்தநீர்க் கொள்ளிடத்தி
னண்ணுபய னத்தனையா நண்ணாதே - என்னபயன்
நல்லவருக் கீயாம னாளு மவத்திறைக்கும்
புல்லரிடம் வந்த பொருள். (89)

சாதிக்குத் தக்க குணமென்று சான்றோர்கள்
போதித்துச் சொன்ன புறமாக - யாதிற்கு
மேலென்றார் கீழானார் மேலானார் கீழென்றார்
நாலிற்கு மெல்லையிலி நாள். (90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரை யும்வலிய ராக்கு மிரும்பொருளோ
கல்வியோ மிக்கதெனக் காணுங்கால் - கல்விதான்
வல்லாரை வல்லாராச் செய்யு மறிவொன்று
மில்லாரை யென்ன செயும். (91)

செல்லா விடத்திற் சினம்போலச் செல்லிடத்தும்
நல்லாடல் செய்வானே நற்கலைஞன் - எல்லாம்
அறிந்தோமென் றுன்னு மவரிவனிற் சற்றே
இரைந்திடுவர் நூலை எடுத்து. (92)

ஈச னடியை யிறைஞ்சுவார்க் கெய்து துயர்
மாசகலு மாறன்றி மற்றில்லை - பேசின்
மறந்தாருக் கெய்துவது மன்னு நரகன்றி
இகந்தன்னி லெய்த லிலை. (93)

கொண்ட சினத்தாற் கொடுஞ்சொ லுரைப்பானை
கண்டொன்று சொல்லார்கள் கற்றறிந்தோர் - மண்டமண்டக்
கூர்த்துக் குரைக்குங் குரைமுகனைக் கண்டாற்கோல்
நீத்திடுத லன்றோ நெறி. (94)

பொய்ப்புரை யாடும் பொறியிலிக ளோரொன்றின்
மெய்யுரை யாடினைய மேவுமே - பொய்யுரையார்
தங்களுக் கல்ல றலைப்படினுஞ் சாய்தறிரி
சங்குமகன் சொல்லுமே சான்று. (95)

காலத்தைச் சூதிற் கழிப்பார் பொருளைவிற்று
ஞாலத் தெவரு நகையாட - நூலத்தைப்
பெண்டீ ரிழக்கப் பிழைப்பேனென் றெண்ணியெண்ணிக்
கண்டவரே யின்மை கடை. (96)

வாதஞ்சுட் டுண்ணுதற்கு வாஞ்சிப்பார் சூதாடி
ஏதந் தவிர்ந்திருக்க வெண்ணுவார் - நீதந்தீர்
வம்பரை நம்பியுயிர் வாழநினை வாரிலவை
நம்பகிளி யாவர் நக. (97)

சூடுகுளி ராற்பிரியுஞ் சொற்றே முணவுடையும்
நீடு மதற்கதற்கு நேர்படவே - மூடர்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னநடை போன அரிட்டமெனத் தந்நடையுங்
கின்னமுற நிற்பதென்ன கேடு. (98)

தெரியாத தொன்றைத் தெரியுமெனச் சொல்லி
யருமை குலைவா ரறியார் - தெரியுமெனும்
ஒன்று முரையா ருரவோர்க ளுகமிலார்க்
கென்று மிடரே யெழும். (99)

ஈச னொருவ னுளனாகு மெவ்வுயிரும்
பாச மகலும் படியருகே - நேசமுடன்
செய்குவான் வன்கண்மை செய்யா னவனடியைக்
கைதொழுமி னுள்ளங் கனிந்து. (100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச் செய்யுட்கள்

நடுவெழுத்தலங்காரம்

மைந்தன்விரை மாமிகவர் வழிமீ னாரன்
மதனவேள் புறவிதழிவ் வேழின் மீது
வந்தநடு வெழுத்துமாற் கண்டற் காக்கி
மற்றைவரி பதினான்குந் தானே கொண்டான்
அந்தநாள் வளைத்துச்சி தரித்துத் தன்கண்
ணாக்கியமர்ந் திருத்தியென வங்கை யேந்தி
முந்தவதன் கீழிருந்து நடனஞ் செய்து
முனிந்துரித்தான் மயிலணிவாழ் முதல்வன் றாளே.

அலங்கார பஞ்சக சண்ட மாருதம்

அரும்பிரா மணத்தினிய கனியுதவு மருங்கொடி
பரிதியம் பரத்தி
இருந்தாரா சாத்திகழு மொருநீதி யிறைமகள்
இணையறு மறத்தி
பொருந்தவெஞ் ஞான்று ஞானசக் கிலிச்சி
புல்லனை அருள்கநன் குறத்தி
மருந்தெனப் புகழுமருத மடுவினில் வதிசெப
மாலைமா மரியே.

முருகேசபண்டிதர் புகழ்மாலை
சிறப்புப் பாயிரங்கள்

மயிலணி விசாலாட்சியம்மை பதிகம்

கங்காதரன் சுன்னை மேவும் மயிலணிக் கண்ணுதலோன்
பங்கா தரிக்கும் விசாலாட்சி யம்மை பதமலரிற்
தங்கார்வ மொடு பதிகம் புனைந்தனன் தாரிணியில்
மங்காத கீர்த்தி முருகேச பண்டித மாமணியே.

(அ. குமாரசுவாமிப்புலவர்)

வாவித் தடவயற் சுன்னாக மேவு மயிலணிவாழ்
தேவிக் கினிய பதிகத் தொடையினைச் சேர்த்தணிந்தான்
சேவற் கொடிய னடியே பணியுந் திறமுடையன்
பாவிற் சிறந்த முருகேச பண்டித பாஸ்கரனே.

(ஊரெழு. சு. சரவணமுத்துப்புலவர்)

ஒருகேச வன்றங்கை சுன்னை மயிலணி யுற்றநறை
வருகேச வம்மை விசாலாட்சி சீர்ச்செவி வாக்கினடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருகேச மன்பட ரேயன்பர்க் கோட்டுநஞ் சேந்தனைத்தாழ்
முருகேச பண்டிதன் வாய்வாய் பதிகமுதிர் நறவே.

(உடுப்பிட்டி, அ.சிவசம்புப்புலவர்)

பூவுலகம் புகழ்சுன்னைப் புரியமரும் விசாலாட்சி
புரிய வுண்மை
மேவியநல் லனுபவத்தான் விளம்பினனோர் பதிகமது
விருத்தப் பாவிற்
சேவலருந் தனிக்கொடியான் திருவடியே சரணமெனச்
சேர்ந்து வாழ்வோன்
பாவலர்கண் போற்றிசைக்கு முருகேச பண்டிதன்
பாவாண ரேறே.

(நல்லூர், அ.சபாபதிச்செட்டியார்.)

குடந்தை வெண்பா

பூமகட் குறையுளாகப் பொலிதரும் யாழ்ப்பாணத்து
ணாமகணாளு நண்ணி நயந்துறை சுன்னாகத்தில்
காமரு கதிர்வேற்கந்தன் கண்ணருள் பெற்றுப்போந்து
தோமறுதமிழ்ச் சொன்மாரி தொலைவின்றிப் பொழியுமேகம்.

திருமறு மார்பனாகுஞ் செங்கண்மால் பணிந்துபோற்றும்
பொருவறு குடந்தைமேய பூரணபுனிதன் றாளில்
மருவுபின் மடக்குவெண்பா மாலைவேய்ந் தணிந்தான் பாரில்
புரவலர் பணிந்து போற்றும் முருகேச பூபன்றானே.

(கும்பகோணம் வைத்தியநாததேசிகர்)

முத்திதருந் தலமேன்மை முன்னடக்கிப் பின்மடக்காய்
முறையே மேவிப்
பத்தழகுங் குதிகொள்ளக் குடந்தைவெண்பா வெனவொரு
நூல் பகன்றான்சைவ
வித்தகன்றொ இலக்கியமும் இலக்கணமும் கரைகண்
டவிதூரன் நாயேன்
பத்திபுரி யாசிரியன் முருகேச பண்டிதன்
பாவாண ரேறே

(சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர்)

தக்க புகழேந்தி தனக்குப் புகழேந்தி
மிக்கவெண்பா மிக்கபுகழ் மேவுமோ - அக்காற்
குடந்தை வெண்பாச் சுன்னைநகர்க் கோமுருகேச
மடங்க லுரைத்திருந்தால் வந்து.

(மானிப்பாய் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பெருகும் புவிமகளுக் கணியே போலத்
திகழ்தருயாழ்ப் பாணமதிற் சிறப்புற் றோங்கும்
ஏர்மலிசுன் னாகஞ்செய் தவத்தி னாலங்
கியங்குமுரு கேசனெனு மிபங்கும் பேச
வார்மலிசெஞ் சடைக்கடவு ளருட்க வாளம்
வண்மைபெற வருந்திமிக மனங்க ளித்துப்
பார்புகழுங் குடந்தைவெண்பாத் தானம் பெய்த
பண்புடைய கவிவாணர் பருகுந் தேனே.

(கும்பகோணம் சா. சபாபதிச்செட்டியார்)

தடங்கடல் சூழ்புவி விற்பன்ன ரென்னுந் தகுபயிர்சீர்
அடங்கலு மாமுரு கேசவிண் கல்வி யலையருந்தி
மடங்குபின் னையிரு பத்துவெண் பாக்கண் மருவத்திருக்
குடந்தை வெண்பா வெனுந்தேன்மாரி பெய்யக் குளிர்ந்தனவே.

(கும்பகோணம் இராகவஐயங்கார்)

உலகெலாம்பரவு மொருபெருந்தலைமைவாய்ந்
தலகிலா வொளிவள ரருங்கயிலாசத்
துறுமெழுநதிகளி லுயர்ந்துகும்பக்
குறுமுனிதிருக்கரக் குண்டிகைப்பட்டொரீஇ
யடல்விரிபார்முதி ரரவமாறாக்
கடல்விளிம்புடுத்த காசினிநிலையிஇய
பொன்னிலாவியசுகப் பொன்னியார்ந்தொழுகுறூஉஞ்
சென்னிமாநாட்டிடைச் சென்னியாயோங்கி
யாரணங்கதிரு மாகமமுதலவுள்
ளாரணங்கதிரநன் றதிர்திருமடமு
மற்பகலாதுலர்க் கறுசுவையுணாவகை
அற்பகலாதுத வன்னசத்திரமு
மாவணங்குறைதரு மலைநிகர்நிதிகெழூஉ
மாவணங்குறைபெறா மணிமுடிமனைகளு
மாசிரியங்கலைக் காதரமைந்தரோ
டாசிரியங்களி யறாதமர்கழகமுஞ்
சுந்தரமாந்தருந் தோளரும்பனுவல்பே
சுந்தரமாந்தருந் தொகுமணிமன்றமும்
வந்துவந்துலவுறு மலர்மண மளாச்சிறு
வந்துவந்துலவுறு மழைத்தண்டலையுந்
தவனந்தணித்தெருத் தலைதொ றுஞ்சாருநர்
தவனந்தணித்திடும் தண்ணீர்ப்பந்தருங்
கோட்டுக்கணந்தருங் குளிரலைபொரற்கெதிர்
கோட்டுக்கணந்தருங் குமுறனீட்டமுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடங்கணிதந்தபக் கொளப்பயநதிபெயுங்
குடங்கணிதந்தகக் குலவெழிற்கோட்டமும்
வரவானந்த வனநதிபோலுயிர்
வரவானந்த மசத்தருடீர்த்தமும்
மம்பரவளங்குல வலைப்புவிவளத்தொடெண்

ணம்பரவளங்களு மமைந்தவாவணமும்
பலவாமிக்குறப் பணைத்தெழுமரம்பைதென்
பலவாமிக்குயர் பணைக்கொக்கினமு
மாதவந்தகைதர வான்முதல்விடவிவீ
யாதவந்தகைநிழ லளித்திடும் வட்டையுங்

கடக்கருமலைவிறற் காய்சினத்தெழ்திறக்
கடக்கருமலைமாய் கதிர்க்குலக்கழனியு
மிரவியனந்தமா யெழுதருங்காட்சியி
னிரவியனந்த விலங்குநெய்ச்சுடர்களு
மேறுமகங்கழித் தின்பருள்பூசையுஞ்

சாறுமகங்களுந் தவாதியல் சிறப்பு
மிக்கமாலைத்தெறும் வெண்ணீற்றுடனணி
யக்கமாலைத்திரு வறாதொளிர் பெருமையுந்
தேரூர்வீதியுந் திருவநீள்செல்வச்
சீரூர்தெருவுமாந் திறம்பலதாங்கி

யெல்லாம்வல்லான் கல்லாம்வில்லா
னல்லார்பல்லார் சொல்லார் தொல்லா
னாரணப்பரியான் வாரணத்துரியா
னாரணற்கரியான் காரணப்பெரியான்
றிங்களங்கண்ணிதாழ் செய்யமத்தகத்தான்

பொங்கனலம்பகம் புனைந்தமத்தகத்தான்
கருமுகில்வெளுத்த கறைக்கந்தரத்தன்
மருளனேநெஞ்சினும் வாழ்கந்தரத்தன்
சகந்தனக்கியலுபா தானமூன்றா
னுகந்தவன் றிண்ணனா ருதவுமூன்றான்

சத்திகாரியமாந் தனித்திருமெய்யான்
பத்தியாம்வலையிடைப் பட்டருண்மெய்யான்
வாணுதலுமைமுலை வளைத்தழும்புடையான்
மாணுறுமன்பர்கள் வளைத்தழும்புடையான்
மாறெழுமறலிதன் மதமாற்றடியான்

வீறெழுமேனியில் வேண்டுமாற்றடியான்
வேள்வாய்ப்பான்முக மிடைவாசத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னீள்வான்றிசையென நிகழ்வாசத்தான்
வந்திதனாளாய் மண்டலையேற்றான்
மைந்துறுநரைநிற மண்டலையேற்றான்
சீலமாரைந்தொகைத் திருவானனத்தான்
கோலவார்குழையியற் குருவானனத்தான்
மனநெகிழாதவர் வருந்தலையோட்டான்
மனைதொறும்பலிகொள வருந்தலையோட்டான்
றரத்துலகெலாநிறைந் தவளக்காப்பான்
றரித்தமாமேத்திய தவளக்காப்பான்
மாயையின் மலவலி வாட்டுந்தகையான்
றீயுழைசூன்மழுத் திகழ்ந்தமர் தகையான்
பங்கநிசாசரர் படப்பொருந்திடத்தான்
மங்கலநாயகி மனம்பொருந்திடத்தான்
மாற்றிருந்தகையபொன் மணியணையும்பரின்
வீற்றிருந்தருளும் வியன் றலமாகி
நஞ்சனவஞ்சகர்க ணெஞ்செனவிஞ்சிரு
ளஞ்சனமஞ்சுக டுஞ்சியவிஞ்சிக
டுன்று புசூழ்ந்திடத் துங்கமார்கோபுரக்
குன்றொடுநின்ற குடந்தையம்பதிமே
லுயர்வடவேங்கட மொப்பிறென்குமரியா
நயனுறுதலைமைசா ணடவையெல்லையிற்
போக்கறுமுந்துநூற் பொருண்மொழிகூட்டுணு
நீக்கமிலறிஞர்க ணிறைவிருந்தயிலவுந்
தீர்த்தமூர்த்தி திருத்தலப்பெருமைநா
டார்த்தியினாருணார்ந் தாம்பயனடையவுஞ்
சுவைவளர்பனுவல்க டொடுக்கநின்றாரெலா
மவைவளர்காட்டிதென் றகங்களிதுளும்பவுஞ்
சங்கக்கவியினுந் தவறுரைத் தெழுமதித்
துங்கக்கவிஞர்க டுதித்துவியப்பவும்
விழுமியவண்ணமு மேதகுமடக்கும்
வழுவியலளையா வருணனைமாட்சியுங்
கிளர்தருநாளி கேரநற்கதலியாய்
வளர்தருபாக மதுரமுறிலவ
வொண்பாவகையினு ளோங்கியநேரிசை
வெண்பாநூறு விழைவொடுபுனைந்தனன்
பொன்னின் றிரிசொலாய்ப் போதருமீழமா
நன்னயக்காரண நண்ணியதேத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுணப்படுவளங்களு முரைக்கியல்வளங்களுந்
தணப்பறவிளைவுறூஉந் தலைநாடென்றுஞ்
சங்கமரீஇய தகையொடன்றோங்கிய
மங்கலப்பாண்டி வளநாடாதிய
வீவருநாணினில் விளியமேன்மேலெழூஉந்
தாவகறனிச்செந் தமிழ்நாடென்றுங்
கோளியறிரிந்துபைங் கொண்மூவறங்கூர்
நாளினுமிடிவிட நலிவறியாதுதான்
பிறநாடிரக்கப் பெரிதளித்தோம்பு
மறநாடென்று மனைவரும்புகல
மன்னியநெடுஞ்சீர் வாய்ந்தயாழ்ப்பாணமேற்
றுன்னியதொன்னிலைச் சுன்னைநன்னாடன்
வும்பவிழற்பல மலர்த்தொடைப்பூதத்
தம்பிநரபதி தவத்தினிலுதித்தோன்
குரவராங்கடலிடைக் குளித்துப்பொருண்மணி
மரபுளியுளக்கையால் வாரிவாரி
யன்புறுநல்லமா ணாக்கராந்தீனருக்
கின்புறவழங்கு மிருங்கொடைவள்ள
லூழ்படுதிறந்தலை யுறக்கலையெணைத்தையுங்
காழ்படுகடுமையிற் கற்றுநிறைந்தோன்
சைவசித்தாந்த சாத்திரப்பொருடெரீஇ
மெய்வளர்சபைதொறும் விரிக்குநற்போதகன்
மைச்சளமானிலை மலிந்தபரமத
கச்சளமுழுதையுங் காயுந்திவாகர
னக்கரமைந்தையு மாறையுமிரட்டும்
பக்குவமுதிர்ந்த பத்திநியமத்தோ
னிருத்தன் புகழையு நீலமயிலூர்
கருத்தன்புகழையுங் கனவிலும்பாடுவோன்
றீங்கடர்பவமயல் சிதைத்தழியாவளப்
பாங்கருணீற்றொளி பழுத்தமேனியோன்
றாழ்வறக்கலைபல தந்ததேசிகரை
வாழ்வருடெய்வமாய் வழுத்துமன்பன்
றெய்வப்புலவருந் தேனுறைதமிழென
வெவ்வெப்பனுவலு மினிதுடனிசைப்போன்
பாரறுநெடுந்தவப் பரசிவன்றொண்டர்கள்
சீரடியகத்தொடு சிரத்திலிருத்தினோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றலங்கிளர் பதிதொறும்தழீஇ
யிலங்கிசைவளர்முரு கேசபண்டிதனே.

(உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்)

புகழ்மாலை

வேறு

இறந்தகாலம்

ஆண்டு விகாரிவரு மாவணி மூவேழுசெவ்வாய்
மாண்ட முதற்பிரத மைத்திதிமார்த் - தாண்டனாள்
மூடுபெருங் கீர்த்தி முருகேச பண்டிதனார்
நாடுங் கதிக்குரிய நாள்.

கற்பித்த இடங்கள்

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்
துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

(சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர்)

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள்
பழுத்துள நாவினன் பாக்களொர் நான் கொடு பாவினங்கள்
வழுத்திடப் பாடு முருகேச பண்டிதன் வாதியெனத்
தொழுத்தகு விற்பனன் சென்று பரகதி துன்னினனே.

(வித்துவான் சி.கணேசையர்)

ஈழமண்டல சதகம்

பன்னாகத் தானங் குடந்தைவெண் பாமடக் காப்பகர்ந்த
வன்னாகத் தானபொதியத்த கத்திய மாமுனிநேர்
சுன்னாகத் தான்பண் டிதன்றிரு நீற்றினன் றோமிலொளி
மன்னாகத் தான்முரு கேசனு மீழநன் மண்ட லமே.

(அல்வாய் கணபதிப்பிள்ளைப் பண்டிதர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபந்தம்

ஆறுமுகநாவலர்

(முருகேசபண்டிதர் பாடியது)

ஆறுமுக நாவலனை யாருமுணராப் பொருளைத்
தேறுமுகங் கொண்டு தெளிந்தானை - ஆறுமுகம்
என்றிருக்க ஓர்முகமும் எங்களுக்குத் தோற்றாமற்
சென்றொளித்தான் அந்தோ சிவா.

காணுங்கண் ணின்னுமொன்று கண்டுகொண்டோ மென்றியாழ்ப்
பாணமகிழும் பருவத்தில் - தாணுவெனுஞ்
சங்கர பண்டிதன்முன் சாய்ந்தான்பின் ஆறுமுகப்
புங்கவநீ யும்மறைந்தாய் போய்.

ஆறுமுக நாவலலென் றாலெவரு மன்புகொண்டிங்(கு)
ஏறுமுக மாயெம்மை ஏற்றுவந்தார் - ஆறுமுக
நாவலனே இன்னினியே நம்மையொரு நாயென்றும்
பாவனையும் பண்ணார்கள் பார்.

திங்களணி செஞ்சடையான் தேவனென வந்துதவும்
அங்கவனூல் நூலாய் அமர்ந்ததுவும் - எங்குமிசை
கொண்டியாழ்ப் பாணங் குலாவியதும் ஆறுமுக
அண்டர்பிரான் வந்தபின்பே யாம்.

ஆரிருந்தென் ஆர்சிறந்தென் ஆறுமுக நாவலன்போல்
ஆரிருந்து போதிப்பார் ஐயையோ - வாரணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போலவரா.

எவ்விடமும் நின்புகழே எவ்விடமும் நின்பேரே
எவ்விடமும் நின்சொல்லே எய்தியபோல - எவ்விடமும்
எக்கா லமுமில்லை இன்னினியார் நின்புகழ்க்குத்
தக்கார்சொன் னாவலநீ தான்.

கந்தவேள் செய்தவம்போற் காணுந் தவமுமவன்
மைந்தனா நாவலன்போன் மைந்தர்களும் - செந்தமிழில்
வல்லவர்கள் அன்னவன்போல் வந்திடுவ தும்முலகில்
இல்லையில்லை இல்லை இனி.

கட்டளைக் கலித்துறை

மாமிக்குங் கொண்ட மருகிக்குஞ் சண்டையை மாற்றியிந்தப்
பூமிக்குட் கல்வியுஞ் செல்வமுஞ் சேரப் புலவரெவர்
தாமிக்க டைந்தவர் நின் றனைப் போலிந்தக் தன்மையினால்
நீமிக்க வனல்லை நாவல னேயிது நிச்சயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தாஸ்துதி விருத்தம்

வாணிதனை வசப்படுத்தி மலரயனை
நான்முகனாய் மயங்கச் செய்து.
பேணியவ ளடிபணிந்து பிரிவகற்றிப்
புணர்ந்தவனைப் பிரமந் தேர்ந்த
மாணியென்று நீதியுளா னென்றுஞ்சொல்
வகையெங்கே மாண்ட நின்னைக்
காணுவதோ இறப்பதுவிங் காறுமுக
நாவலனே கமிப்ப தன்றோ.

ஏழாலைச் சைவப்பாடசாலைத் தொடக்கம்

தாது வருடம் தனிலா வணிபத்தாந்
தேதி புகர்வாரந் தீபநாள் - ஓதுபுகழ்
தாமோ தரேந்திரனார் தர்மவித்தி யாசாலை
நாமாரம் பஞ்செய்த நாள்.

விரோதச் சிலேடை

நெட்டையிலை வைத்திருக்குஞ் செவ்வே ளல்ல
நெடிதோங்கித் தண்டேந்தும் வாளு மல்ல
கட்டுவர னாரளிக்கும் பிரம னல்ல
கனிவெட்டி யெடுத்தலாற் சுரங்க மல்ல
நட்டவரைத் தளபதியாய் இருக்கச் செய்யும்
நன்மையினா னாம்வணங்கு மீசனல்ல
சிட்டரெலாங் கொள்ளுமொரு பொருளே யாகும்
செகமறிய இப்பொருளைச் செப்பு வீரே.

விடுகவி

நாலுகால்ப டைத்திருக்கு நடப்பதில்லை
நம்மைப்போல் இருகையுண்டாம் பிடிப்ப தில்லை
ஏலவேபின் னலுண்டாமு டிப்ப தில்லை
இடையிடையே கண்களுண்டாம் பார்ப்பதில்லை.
கோலமுடி அரசருக்கும் எல்லோருக்கும்
கொடுத்திடுமுட் கருதலைத் தவிர்ப்ப தில்லை
சீலமிகு பொருன்விளங்க ஏங்கு மாகித்
திகழுதய பானுவே செப்பு வாயே.

கண்டனகாரருக்கு அறிவுறுத்தல்

எட்டுணை யேனும் இழிபுரை காண்பதின்
றியென் னயமொழி யிருக்க
மட்டிறந் திழிபின் வார்த்தைகள் உரைப்பார்
மறுமொழி வயத்தரே அல்லர்
தொட்டனைத் தூறும் எனுந்திருக் குறளிற்
தோற்றிய பொருண்மை அறிவரேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை பிறிதேன் எமதிழி புயர்பு
கண்டிடல் அறிஞர் தங்கடனே.

முருகேசபண்டிதர் வாழ்த்து

சுன்னாகம்
கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
இயற்றியது

சீரோங்கு புலவருறை சுன்னை வாசன்
சீரியன்பூ தத்தம்பி அருளும் பாலன்
ஏரோங்கு தமிழ்க்கடலின் கரைகண் டுள்ளோன்
இயற்றமிழ்ப்பா வன்மையினில் இணையி லாதோன்
பாரோங்கு புலவர்புது விருந்து கொள்ளப்
பண்புடனே ஆசுகவி பொழியு மேகம்
பேரோங்கு சைவநெறி தழைக்கச் செய்தோன்
பேசுபுகழ் முருகேசப் பெருமன் மாதோ.

ஆரியமும் செந்தமிழும் இனிதின் ஆய்ந்தே
அரியபல நூலுரைகள் ஆக்குந் தீரன்
சீரியநற் குணங்களெலாந் திகழ்ந்த செம்மல்
செகம்புகழும் சங்கரபண் டிதவேள் பாலும்
பார்புகழும் கவிஞனாய்க் கல்வி மானாம்
பண்புடைய சிவசம்புப் புலவன் பாலும்
கூரியநுண் மதியோடு கற்றுத் தேர்ந்தோன்
குறைவில்சீர் முருகேசக் குரிசில் மாதோ.

பன்னரிய தமிழ்நூல்கள் முற்று மோர்ந்தே
பாவலர்கள் நாவலர்கள் இயற்று நூலில்
துன்னுபிழை கண்டுசகி யாதே என்றும்
துகளறவே தமிழ்மொழியும் துலங்க வேண்டும்
என்னும்பெரு நோக்கினையே அகத்தி ருத்தி
எவருடனும் வாதாடும் இயல்பு மிக்கோன்
முன்னுபுகழ் சுன்னாக நகர வாசன்
மூதுணர்ந்த முருகேச விபுத ரேறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னுதமிழ்
சொன்ன மன்னாகத்தான்
சுன்னாகப் பண்டிதன் முருகேசன்

சி.ரமேஷ்

01

ஈழத்து தமிழிலக்கிய செல்நெறியில் பத்தொன்பதாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க தனித்துவமான காலப்பகுதி ஆகும். இருபதாம் நூற்றாண்டு நவீன இலக்கியத்துக்குக் கால் கோளிட்ட காலப் பகுதியாக பத்தொன்பதாம் நூற்றாண்டு கருதப்பட்டாலும் மரபு வழித் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்துக் கூடாக ஏராளமான செவ்விய தமிழ்நூல்கள் தோன்றுவதற்கும் வழிசமைத்த காலப்பகுதியாகவும் பத்தொன்பதாம் நூற்றாண்டு விளங்குகிறது. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சைமன் காசிச்செட்டி, உவைமன் கதிரவேற்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், அ.முத்துத்தம்பிப்பிள்ளை, சித்திலெப்பை, பொன்னம்பலப்பிள்ளை, ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை, கறல்விசுவநாதப்பிள்ளை, பதுறுத்தீன் எனக் கல்வி வல்லாளர்கள் பலர் தோன்றித் தமிழ் வளர்த்த இக்காலப் பகுதியில் சைவசித்தாந்த மெய்ஞானமும் தனித்துவமான புலமைத்திறனும் கைவல்லியம் பெற்ற தமிழறிஞராக சுன்னாகம் முருகேச பண்டிதர் விளங்கினார்.

"தோமறு தமிழ்ச் சொன்மாரி தொலைவின்றிப் பொழியு மேகம்" என வைத்தியநாத தேசிகரால் சிறப்பிக்கப்பட்டவரும் **"மங்காத கீர்த்தி முருகேச பண்டித மாமணியே"** என அ.குமாரசுவாமிப் புலவரால் விதந்துரைக்கப்பட்டவரும் "பாவிற் சிறந்த முருகேச பண்டித பாஸ்கரனே" என ஊரெழு க.சரவணமுத்துப் பிள்ளையால் போற்றப்பட்டவரும், **"பாவலர்க்கண் போற்றிசைக்கும் முருகேச பண்டிதன் பாவணரேறே"** என அ.சபாபதிச் செட்டியாரால் வாழ்த்தி உரைக்கப்பட்டவருமான முருகேச பண்டிதர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தில் சைவவேளாண் குடி மரபில் வந்துதித்த பூதப்பிள்ளை என்பவருக்கும் அவர் மனைவி உமைநாச்சி அம்மையாருக்கும் 1829 ஆம் ஆண்டு அருந்தவப் புதல்வராக அவதரித்தார். முருகேச பண்டிதருடன் உடன் பிறந்தார் சுப்பிரமணியர், கதிர்காமர், நன்னியம்மை என்னும் மூவராவார்.

தாய் தந்தை புலமைத்துவ மரபு வழி இவரை இயல்பாகவே தமிழ்க்கல்வியில் அதிபுலமைத்துவமுடையவராக்கியது. உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் பெற்ற தமிழறிவும் சிவசங்கரப் பண்டிதரிடம் கற்ற சித்தாந்த தருக்கமும் இவரைத் தமிழும் சமயமும் கைவரப்பெற்ற விற்பனராக்கியது. பாரதம், இராமாயணம், கந்தபுராணம், சேது புராணம் முதலிய இலக்கியங்களிலும் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள் முதலிய இலக்கணங்களிலும் தேர்ச்சியுடையவராக விளங்கினார். பண்டிதர் 'பஞ்ச இலக்கணவல்லாளர்' என்பதை கணேசையரின் கட்டளைக்கலித்துறை

"எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள்
பழுத்துள நாவினன் பாக்களொர் நான்கொடு பாவினங்கள்
வழுத்திடப் பாடு முருகேச பண்டிதன் வாதியெனத்
தொழுத்தகு விற்பனன் சென்னு பரகதி துன்னினனே"

என எடுத்துரைக்கிறது. இலக்கணத்தில் பாண்டியத்தியமுடையவர் என்பதாலும், இலக்கண வழுக்களற்ற வசனநடையைக் கையாளும் வழக்குடையவர் என்பதாலும் இவரை 'இலக்கணக் கொட்டர்' என்றும் அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் தமக்குக் கல்வி அறிவை நல்கிய சிவசங்கர பண்டிதரிடமும் சிவசம்பு புலவரிடத்தும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தார் என்பதை இவர் பாடிய "குடந்தை வெண்பா" "நீதிநூறு" ஆகிய நூல்களில் இடம்பெறும் "ஆசிரிய வணக்கம்" என்னும் பகுதியினூடாக அறியலாம். "ஆகம வேதமனைத்தையும் அளித்த ஏகனே" என சங்கரபண்டிதரைப் போற்றுமிவர் "என்னை அறிவால் வளர்த்த தாயென்றும்" இவரைக் குறிப்பிடுவார். இதேபோல் "தன் அக இருளை நீக்கிய ஆயிரங்கதிரோன்" என சிவசம்புப் புலவரைச் சிறப்பித்துக் கூறும் பண்டிதர் "இவரே தன்னைக் கலை தெருட்டி மெய்யிலெனை வைத்தார்" எனவும் கூறுகிறார்.

தான் கற்றுணர்ந்த தமிழறிவைப் பண்டிதர் சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், கோப்பாய் தெற்கு, சிறுப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம், கல்வளை ஆகிய இடங்களிலுள்ள மாணவர்களுக்கும் வழங்கினார் என்பதை சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவரின் தரவு கொச்சகம்

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்
துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

எனக் குறிப்பிடுகிறது. கோப்பாய் அம்பலவாணத்துரையவர்களால் தொடங்கப்பெற்ற வித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியதைப் போல், ஏழாலையில் சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களால் தொடங்கப்பெற்ற தமிழ் வித்தியாசாலையிலும் தலைமை யாசிரியராகக் கடமையாற்றினார். திறமையான புலமை உள்ளவர்களை அறிந்து அவர்களின் புலமை மக்களைச் சென்றடையும் வண்ணம் ஆற்றுப்படுத்துவதில் வல்லவரான முருகேச பண்டிதர் நாவலரின் பணிப்புக்கமைய இந்தியாவிலுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். இது மட்டுமின்றி தமிழ் நாட்டிலே காஞ்சிபுரம், சேலம், கும்பகோணம், திருப்பாற்றூர் முதலிய இடங்களிலும் மதிக்கத்தக்க தமிழாசிரியராகப் பணியாற்றி னார். கும்பகோணம் டவுண் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராய் விளங்கிய "முருகேச பண்டிதரிடம் சரவணமுத்துப்பிள்ளை கல்வி கற்ற காலத்திலேயே உடன் மாணாக்கராகச் சுன்னாகம் அ.குமார சாமிப் புலவரும் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையும் பாடங்கேட்டனர்" என்பார் க.கைலாசபதி. இவர்களே 1898 இல் யாழ்ப்பாணத்திலே தாபிக்கப்பெற்ற தமிழ்ச் சங்கத்து வித்துவ உறுப்பினர்கள் ஐவருள் மூவராவார்.

நாவலர் அவர்கள் தேகவியோகமடைந்த வேளையில் அவரை நோக்கி பண்டிதர் அவர்கள் பாடிய கையறுநிலைப்பாக்கள் கேட்போர் மனத்தை உருக்கும் வண்ணம் நீர்மையவாய் மிளிர்கின்றன. இலங்கை நேசன் பத்திரிகையில் 1880 ஆம் ஆண்டு மாசி மாதம் வெளிவந்த இப்பாக்கள் வெண்பா, கட்டளைக்கலித்துறை, நிந்தாஸ்துதி, விருத்தம் ஆகிய பாவகைகளால் பாடப்பட்டதாக அமைகின்றன.

"இறைவனை இறைவனாக யாழ்ப்பாணத்தவர் கண்டது நாவலரின் செந்தமிழ் நூல்களை அறிந்துதான். அச்செந்நாவலனின் புகழ் எவ்விடமும் நிலைபெற்று நிற்கிறது. அப்புகழின் முன்னால் இனி எவ்வினியாரும் நிலைத்து நிலை பெறமுடியாது. யாருமுணராப் பொருளை தேறுமுகம் கொண்டு தெளிந்த ஆறுமுகம், அன்புகொண்டு ஏறுமுகமாய் எம்மை ஏற்றுக்கொண்டான். ஆறுமுகம் என்றிருந்த ஓர் முகமும் எங்களுக்குத் தோன்றாமல் இன்று சென்று ஒளிந்தனவே" எனப் புலவர் நெஞ்சுருகிப் பாடும்வெண்பாக்கள் உள்ளத்தை வருத்திக் கலங்கச் செய்கின்றன.

இக்காலப்பகுதியில் கத்தோலிக்கர்கள் தம் சமயத்தைப் பரப்பும் பொருட்டுப் பாடசாலைகளை நிறுவி, உத்தியோகச் சலுகைகளை வழங்கியதுடன் நில்லாது, பிற சமயங்களுக்கெதிராகத் துண்டுப் பிரசுரங்களையும் பத்திரிகைகளையும் சமய நூல்களையும் வெளியிட்டுச் சமயப்பிரச்சாரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்து வந்தனர். இவ்வகையில் 1878 இல் கத்தோலிக்க மதப்பிரச்சாரத்துக்காக இந்தியா விலிருந்து இலங்கை வந்த கத்தோலிக்க வித்துவான் அருளப்ப முதலியார் சைவ சமயத்தவர்களை மத மாற்றம் செய்யும் பொருட்டும் நாவலரையும் பிறரையும் வெல்லக்கருதியும் தம் பத்திரிகையில் சைவ விரோதக் கருத்துக்கள் பிறவுமாகப் பல விடயங்களை எழுதினார். அத்துடன் சைவசமயத்தை நிந்தித்துக் கண்டனப் பிரசுரங்கள் பலவற்றையும் வெளியிட்டார். சஞ்சிகைகளிலே வாதவிஜயமாகப் பல கடிதங்களையும் வரைந்தார். முருகேசபண்டிதர் அவர்கள் இவற்றுக்கெதிராகக் கண்டனங் களைப் பத்திரிகைகளில் வெளியிட்டதுடன் நில்லாது அருளப்ப முதலியார் இயற்றிய நூல்களில் ஒன்றான "அலங்கார பஞ்சகத்திலுள்ள இலக்கண வழுக்களைத் திரட்டி "அலங்கார பஞ்சக சண்ட மாருதம்" என்னும் கண்டனப் பத்திரத்தையும் எழுதினார். இந்நூல் இவரது இலக்கண வித்தகத்துக் குத் தக்க சான்றாக அமைவதை குமாரசுவாமிப்புலவர் தன் தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் விரிவாக எடுத்துரைப்பார்.

வெள்ளிமலை இதழ் 03 சித்திரை 2008

02

ஆக்க இலக்கிய முயற்சிகள்

'தோடஞ்ஞர்' என்றும் 'இலக்கணக்கொட்டர்' என்றும் அழைக்கப்படும் முருகேச பண்டிதர் கல்வியில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாதவராகத் திகழ்ந்தார். சைவசமயியாகவும் ஒழுக்கசீலராகவும், பக்தியாளராகவும் விளங்கிய பண்டிதரின் ஆக்க இலக்கிய முயற்சிக்குத் தக்க சான்றாக சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், சிவபூதராயர் ஊஞ்சல், மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சல், மயிலணி சுப்பிரமணியர் ஊஞ்சல், வத்தாக்கை விசாலாட்சி அம்மை ஊஞ்சல், மயிலணி சிலேடை வெண்பா, குடந்தை வெண்பா, பதார்த்த தீபிகை, நீதிநூறு, விசாலாட்சிஅம்மை பதிகம் போன்ற நூல்கள் விளங்குகின்றன. முருகேச பண்டிதரின் ஆக்க இலக்கியப் படைப்புக்களை மூன்று அடிப்படையில் வகுத்து நோக்கலாம்.

1. பக்தி இலக்கியப் பனுவல்கள்
2. தருக்க நூல்
3. அறநூல்

பக்தி இலக்கியப் பனுவல்களை ஊஞ்சல், பதிகம், வெண்பாக்கள் என மேலும் பகுத்து நோக்கலாம்.

பக்தி இலக்கியப் பனுவல்கள்

ஊற்சற் பாடல்கள்

ஈழத்துப் புலவர்களால் பெரிதும் சிறப்பாகக் கையாளப்பட்ட பிரபந்தங்களில் ஒன்று ஊஞ்சலாகும். இது ஊசல், ஊஞ்சல், ஊசற் பாட்டு, பொன் ஊஞ்சல் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஊசல் என்பது

"ஒத்தமக்களைச் சுற்றம் பொலியச் சுகமொடுவாழ்க என உரைத்து,

ஆசிரிய விருத்தம் கலித்தாழிசை

என்னும் பாவகைகளில் 'ஆடீர் ஊஞ்சல்'

'ஆடாமோ ஊசல்'

என்னும் தொடர்கள் பாடலில் இடம்பெறும் வண்ணம் பத்துச் செய்யுட்களில் பாடப்படுவதாகும். ஆயினும் தொன்னூல் விளக்கம் ஊஞ்சலில் வண்ணகம் வரலாம் என முதற்கண் உரைத்தது. முத்து வீரியம் எனும் நூலே, "ஆடீர் ஊசல்", "ஆடாமோ ஊசல்" எனும் தொடர்களின் பயிற்சியை முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிய நூலாகும். பிற்காலத்தில் ஈழத்தில் எழுந்த ஊசல் செய்யுட்கள் பல இதனடிப்படையிலே அமைந்தன எனலாம்.

"ஆங்கவிருத் தத்தா லறைத்தகலித் தாழிசையால்
ஓங்கிய சுற் றத்தளவா யூசலாம்"

என்னும் வெண்பாப் பாட்டியல் இலக்கணத்துக்கமைய முருகேச பண்டிதரால் பாடப்பட்டு எமக்குக் கிடைக்கும் ஊஞ்சல் பிரபந்தங்கள் ஐந்தாகும். இவை முறையே பிள்ளையார், சிவபூதராயர், மகாவிஸ்ணு, சுப்பிரமணியர், விசாலாட்சிஅம்மை போன்ற தெய்வங்கள் மீது பாடப்பட்டன. எவ்வித சேதமுமின்றி எமக்கு முழுமையாகக் கிடைக்கும் முருகேச பண்டிதரின் ஊஞ்சல் பாடல்களாக சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல், கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல் முதலானவற்றைக் கூறலாம்.

சுன்னாகம் மயிலணி சுப்பிரமணியர் ஊஞ்சல், காப்பு, நூல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, லாலி என்னும் பகுதிகளைக் கொண்டமைந்தபோதிலும் "நூல்" எனும் பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெறுவதற்குப் பதிலாக ஒன்பது பாடல்களே எமக்குக் கிடைக்கின்றன. இதனைப் போன்றே சுன்னாகம் மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சலில் காப்புச் செய்யுள் நீங்கலாக நூல் எனும் பகுதியில் ஐந்து பாடல்களே இடம்பெறுகின்றன. கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையால் தொகுக்கப்பட்ட முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டில் இடம்பெறும் "கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சலும்" பத்துப் பாடல்களால் ஆனது. எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலியற்றப்பட்ட இவ்வூசலில் காப்புச் செய்யுளில் இணைந்தே பத்துப் பாடல்களாகக் காணப்படுகின்றன. எனவே காப்புச் செய்யுளும் இணையப் பத்துப் பாடல்களினால் ஊஞ்சல் பாடும் மரபொன்றும் ஈழத்தில் இடம்பெற்றிருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார், சிவபூதராயர் ஊஞ்சல்களின் காப்புச் செய்யுளில் பாடப் புகும் பாடல்களின் எண்ணிக்கையை வரையறுக்கும் முருகேச பண்டிதர் ஏனைய மூன்று ஊசல்களில் பாடப்புகும் பாடல்களில் எண்ணிக்கையை வரையறுக்கவில்லை. எனவே இலக்கண விதிக்கமையாது இம்மூன்று ஊசல்களையும் பண்டிதர் பாடியிருக்க வாய்ப்புண்டு எனக் கருதுவாரும்உளர். அவ்வாறில்லையாயின் பண்டிதரால் இவ்வூஞ்சல்கள் முழுமையாகப் பாடப்பட்டு தொகுக்கப்பட்ட காலப்பகுதியில் பாடல்கள் சிதைந்துபோய் பிரபந்தத் திரட்டு ஆசிரியருக்குக் கிடைக்கப்பெறாமல் போயிருக்கலாம்.

சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சலைப்போன்றே சுப்பிரமணியர் ஊஞ்சலும் காப்பு, நூல், வாழி, எச்சரிக்கை, பராக்கு என்னும் பகுதிகளைக் கொண்டமைந்தபோதிலும் இவ்வூஞ்சலில் சந்திர சேகரப்பிள்ளையார் ஊஞ்சலில் இடம்பெறாத "லாலி" என்னும் பகுதி பாடப்பட்டுள்ளது. இறைநாமம், இறை இயல்பு, இறைபராக்கிரமம் என்பன இசைய லாலி வரும் வண்ணம் இயைபொன்றத் தொடுத்து இதனைப் பாடியுள்ளார்.

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் ஊஞ்சல்

குமரர் துதிக்க, பிரமன் கரம் கூப்ப, தாயார் உமையார் அன்புகூர, வனிதையர் கீதம்பாட, தேவர்கள் மலர்தூவ, இந்திரன் கவரிபுல்ல, கணநாதர் புடைசூழ சித்திபுத்தியர் மகிழ்ந்து கூட மறைநூல், சைவநூல் என்ற தூணில் விநாயகர் பலகை கட்டி ஊஞ்சல் ஆடுவதாக அமையும் சந்திரசேகரப் பிள்ளையாருஞ்சல் அடியார்கள், விழாச்செய்வோர், மதில்தந்தோர், தளிபுதுக்கி பிரதிட்டை செய்த செல்வந்தர் வையத்தில் இன்னலின்றி வாழவேண்டுமெனவும் விநாயகரை வேண்டிப் பாடுகின்றது. கொன்றை மாலையைச் சூடிய விநாயகரின் தோற்றம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சடைமதியும் முக்கண்ணுந் தனிநூன் மார்பும்
தவளமதிக் குழவியெனத் தயங்கு கோடும்
இடைஅரவக் கச்சுமங்கை எழிலுஞ்சென்னி
இலங்குமுடி யங்கவரி இசைத்த காதும்
புடைபெயர ஒளிவீசு நுதலின் ஓடைப்பொற்பும்

எனச் சிறப்பித்துப் பாடப்படுகின்றது.

இவ்வூஞ்சலில் "வாழி" என்னும் பகுதியில் தரை, தவமறையோர், தனவசியர், பூவசியர், நிரை மகளிர் பதிவிரதம் நிலமன்னர், மறைமுகில்கள், மூஷிகம், சித்தி புத்தி புனிதையர், சுன்னைநகர் போன்றன சிறந்தோங்கி வாழவேண்டுமென வாழி கூறப்படுகிறது.

"எச்சரிக்கை" என்னும் பகுதியில் கழிவிரக்கம் பொங்க "தன் இடரைத் தீர்த்தருள வேண்டும்" எனப்பாடும் புலவர் அடியவருக்கு இறைவனே வந்திங்கு அருள் செய்ய வேண்டுமென்றும் விறலார் வினை தீர்த்து அவர்களையும் ஆட்கொண்டருள வேண்டும் எனவும் போற்றிப் பரவுகிறார்.

விநாயகரின் தோற்றம், புகழ் குணநலன்களை எடுத்துரைக்கும் விதமாக "பராக்கு" என்னும் பகுதியும் இவ்வூஞ்சலில் இடம்பெறுகிறது.

சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல்

சுன்னைநகர் தெற்கில் எழுந்தருளியுள்ள சிவபூதராயர் மீது பாடப்பட்ட இவ்வூஞ்சல் காப்பு, நூல், வாழி என மூன்று பகுதிகளை உடையது. காப்புச் செய்யுள் வெண்பாவால் அமைய "நூல்" ஆகிய பகுதிகள் எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலியன்றது.

விநாயகரைக் காப்புடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட இவ்வூஞ்சல் பாட்டுடைத் தலைவன் சிவபூதராயர் என்றும் பாடப்புகும் செய்யுட்களின் எண்ணிக்கை ஈரைந்தென்றும் வரையறுக்கிறது. "சிவபூதராயரே ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் செய்யுளின் ஈற்றடிதோறும் வரும் வண்ணம் பாடப்பட்ட இவ்வூஞ்சல் உருவகச் சிறப்பும் வருணனை நயமும் கொண்டு விளங்குகின்றது.

"பொன்னாரும் பவளமணித் தூண்க ளாலும்
பொற்புமிகும் வைரத்தின் வளையி னாலும்
மின்னாரும் தரளமணி வடத் தினாலும்
விலைமதியா மாணிக்கப் பலகை யாலும்
சுன்னாகந் தெற்குவாழ் வுறவே செய்த
சுடருமணி ஊஞ்சல்"

என ஊஞ்சலின் பகுதிகள் உருவகித்துக் கூறப்படுகின்றன. அக்கால மரபுக்கமைய வட்டுக்கோட்டைப் பிட்டியம்பதிப் பத்திரகாளியம்மை ஊஞ்சல் உட்பட பல ஊஞ்சல்கள் இத்தகைய உருவகப் பாணியிலேயே பாடப்பட்டுள்ளன.

பந்தரெலாம் மணிகள் தொங்க, பக்கமெல்லாம் மாலைகள் துலங்க, செம்பட்டால் வாழை தோரணங்கள் நாட்டி, சொர்க்கமெனச் செய் மணிமண்டபத்திலே சிவபூதராயர் ஊஞ்சல் ஆடும் காட்சி மிகத் தத்ரூபமாக எடுத்துரைக்கப்படுகிறது. தென் சுன்னை நகரின் இயற்கை வளத்தை பண்டிதர்

"பொழியுமழை நெடுமுகில்கள் பொலிந்து மின்ன
மாவடிக்கண் மகளிரென மயில்கள் வன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசம் விரித் தாடுமெழின் மலிந்து மன்ன

நாவடிக்கு மிசைகள்பல வண்டு பன்ன

நந்தவன மோங்கியதென் சுன்னை"

என்னும் வரிகளுக்கூடாக மிகநுட்பமாகக் காட்சிப்படுத்துகின்றார்.

பூதலத்தோர், மழை, மறையவர், வணிகர், பசுநிரை, மகளிர்கற்பு, மறை தொண்டர், திருப்பணி மேலோர் எனப் பலருக்கு வாழ்த்துக் கூறும் "வாழி" என்னும் பகுதியும் முருகேச பண்டிதரின் கவித்துவத்துக்குத் தக்கசான்று பகிர்கிறது.

சுன்னாகம் மயிலணிச்சுப்பிரமணியர் ஊஞ்சல்

பவளமணித் தூண்கள் நாட்டி, பைம்பொன்வளை விட்டம் ஓட்டி, தரளமணிக்கயிறு பூட்டி, அதில் ரத்னபலகை மாட்டி, அதன்மீது பாட்டுடைத்தலைவன் சுப்பிரமணியர் அமர்ந்திருந்து ஊஞ்சலாடுவதைச் சித்தரிக்கும் இவ்வூஞ்சல் விநாயகக் கடவுளைக் காப்புடைத் தலைவனாகக் கொண்டது.

"அத்திமுகத் துத்தமனென் றரனார் தந்த

திருவேறு விநாயமுக் கண்ணன் பாதஞ்

சென்னிமிசை கொண்டுபவந் தீர்த்து வாழ்வாம்"

எனக் காப்புக் கூறித் தொடங்கும் சுன்னாகம் மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சலில், "மயிலணி வாழ் வேலவரே ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் செய்யுளின் ஈற்றடிதோறும் வரும்.

முருகப்பெருமான் திருவூஞ்சலாட, தேவர்கள் சேவகம் செய்யும் காட்சி நூற்றோறும் சிறப்பாகவும் நயக்கும் விதமாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. கண்ணன் கண்களித்துப்பாட, கனலிமதி கவிகை நீட, தேவர்கள் துந்துபி முழங்க, பவனன் (காற்று) ஆலவட்டம் எடுக்க, பானு தீபம் தூக்க, அங்கைமலர் தூவி முனிவோர்களும், அமரர்களும் மறையோரும் வாழ்த்த கந்தருவர் இசைநறவஞ் செவியில் வார்க்க, மயிலணி வேலவர் ஊஞ்சலாடுவதாகப் பாடப்படும் ஒவ்வொரு செய்யுளும் சொல்நயமிக்கதாகவும் கவித்துவமுடையதாகவும் காணப்படுகிறது. முருகப்பெருமானின் திருவுருவக்காட்சி,

"பன்னிருசெங் கதிர் ஆறாய் வந்த தென்னப்

பலமணிகள் மிளிருமுடி சிரமேல் துன்ன

மின்னுகுவி சாதிமலர்க் கரமேல் மன்ன

விரிகடகக் கரங்கள் ஈராறும் துன்ன

துன்னுமணித் தண்டைசதங் கை என்(று) இன்ன

சுடர்க்காலிற் கலின்கலினென்(று) ஒலித்து மின்ன"

என்னும் வரிகளுக்கூடாக கற்றோரும் துதிப்போரும் உள்ளுணரும் வண்ணம் மிகத்தத்ரூபமாக காட்சிப்படுத்தப்படுகிறது. நூலின் செய்யுள்தோறும் மயிலணிவாழ் வேலவர், "வரைநடஞ்செய் காவலரே" என்றும், "வண்ணமணிக்கடம்பினரே" என்றும், "மங்கை உமைபாலகரே" என்றும் "வந்தவினை தீர்ப்பவர்" என்றும், "வன்னமயில் வாகனர்" என்றும், "வன்னமணிக்கடம்பினர்" என்றும், "மலரகிதபூரணர்" என்றும், "மந்திரதந்திரப் பொருளே" என்றும் சிறப்பித்துப் போற்றப்படுகிறார்.

நூலில் சந்நிதியின் நின்று நின்னடி சேவிக்கும் அடியவர்கள் வாழவும், நந்தலிலா வகை பூசை நடக்குமாறும் நற்பொருளீட்டும் உத்தமர் நயந்து வாழவும் கோயில் திருப்பணித் தொண்டர் சிறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவும் நற்கருணை வேண்டிப் பாடும் செய்யுட்களும் இடம்பெறுகின்றன.

"வாழி" என்னும் பகுதி "மறை, மறையோர், வணிகர், வேளாளர், மயில், சேவல், வள்ளியம்மை தெய்வானையம்மை ஆகிய சக்திகள், நிறைவாழி மகளீர், முகில்கள், நெடுஞ்சுரபி, இனம், நிலம், பாட்டுடைத் தலைவன் வீற்றிருக்கும் தலம் என்பன சிறப்புற வாழவேண்டுமென எண்ணி வாழி கூறிப் பாடப்பட்ட பகுதியாகக் காணப்படுகிறது.

அளவடியாக அமையும் "எச்சரிக்கை, பராக்கு, லாலி" என்னும் பகுதிகள் இறைநாமங்களுக்கூடாக இறைபெருமையையும் சிறப்பையும் எடுத்துரைக்கின்றன. "எச்சரிக்கை" என்னும் பகுதியிலிடம் பெறும் "தீர்த்தாண்டருள் தேவே" "வானோர் சிறை மீட்டாண்ட என் வாழ்வே" என்னும் தொடர்களுக் கூடாக இறையோன் புலவர் துயர் களைந்த செய்தியும் துதி செய்து பாடிப்பரவுவாருக்கு எடுத்துரைக் கப்படுகிறது.

சுன்னாகம் மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சல்

விநாயகரைக் காப்புடைத்தலைவனாகவும், மகாவிஸ்ணுவைப் பாட்டுடைத் தலைவனாகவும் கொண்டு பாடப்பட்ட மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சல் எண்சீர் ஆசிரிய விருத்தப்பாக்கள் ஆறினைக்கொண்டு விளங்குகின்றது. அவற்றுள் முதல் விருத்தம் காப்புச் செய்யுளாகவும் இறுதி விருத்தம் வாழி கூறும் செய்யுளாக அமைய ஏனைய நான்கு செய்யுட்களின் ஈற்றடிகள் தோறும் "மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் வரும் வண்ணம் மகாவிஸ்ணுவின் புகழ் கூறி ஊஞ்சலாட்டுவனவாக அமைந்துள்ளன.

காப்புச் செய்யுளிலிடம்பெறும் முந்நான்கு அடிகளும் தலமமையப்பெற்ற இடத்தையும் பின்னிரு அடிகள் காத்தற் கடவுள் மகாவிஸ்ணுவையுதம் ஈற்றடிகள் இரண்டும் காப்புடைத்தலைவர் விநாயகரையும் சுட்டி நிற்பதாக அமைகின்றன. மயிலணி வாழ் திருமால் ஏறி ஆடும் ஊஞ்சல்

"பேசரிய மேருவெனத் தூண்கள் நாட்டி
பிறங்குமர கதப்பெரிய விட்டம் மூட்டி
தேசுலவும் தரளமணிக்கயிறு பூட்டி
செங்கனகத் தாலியலும் பலகை மாட்டி"

என்னும் வரிகளுக்கூடாக சிறப்புற எடுத்துக் காட்டப்படுகிறது.

சந்திரனும் சூரியனும் கவிகை தாங்க சசிபதி செங்கர தலத்திற் கவரி ஓங்க, அந்தணர்கள் மலர்தூவ, அடியவர்கள் இடர்நீங்க, விஸ்ணு ஊஞ்சலாடுவதைக் கூறும் புலவர் அவ்வாறு ஆடும்போது அவருடலில் மருவி நிற்கும் மணிமாலைகளும், சக்கரமும், சங்கும், வில், வாள், தண்டமும் கனகமணித்துகிலும் சேர்ந்து ஆடுவதையும் குறிப்பிடுகிறார். அடிமோனைத்தொடை ஒன்றிடத்தொடுக்கும் பண்டிதரின் ஊஞ்சல் பாடல்களில் "மகாவிஸ்ணு ஊஞ்சலும்" குறிப்பிட்டுக் கூறத்தக்க ஊஞ்சல்களில் ஒன்றாகும். இவ்வூஞ்சலிலிடம்பெறும் நான்காவது செய்யுளில் "ஆட" என்னும் சொல்லொன்று அடிதோறும் இறுதிக்கண் ஒன்றி அடியியைபத் தொடையாய் வரும் வண்ணம் பண்டிதர் பாடியிருப்பதுவும் ஊஞ்சலுக்குச் சிறப்புடையதாய் அமைகிறது.

கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல்

"ஏர்பூத்த யானைமுகத் தெழிலே பூத்த
இறைவனடித் தாமரைகள் இறைஞ்சி ஏத்தி"

என விநாயகருக்குக் காப்புக்கூறித் தொடங்கும் கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் வாழி உள்ளிட்டு பதினொரு ஆசிரியவிருத்தச் செய்யுட்களாலானது.

முருகேச பண்டிதரின் ஏனைய ஊஞ்சல் பிரபந்தங்களைப் போலன்றி இவ்வூஞ்சல் பதிகத்தில், ஊஞ்சலின் தோற்றப் பொலிவு கற்றோர் இயைந்து பொருள் கொள்ளும் வண்ணம், இரு செய்யுட்களில் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகிறது.

"துதிமேவு ஞானமே தூண்களாக, துணையாகும் மூன்றும் நடங்கயிறாக, விதிமேவி அவற்றிடை விட்டமாக நிற்க, விளங்கும் ஓங்காரமே பீடமாக அமைய அதன்மீது வத்தாக்கை மாதுமையாள் ஏறி ஊஞ்சலாடுவதாகக் கூறும் புலவர் அவ்வூஞ்சல் ஐந்தெழுத்தின் தோற்றமாக விளங்கி மக்களுக்கு நற்கதியைப் பயக்குமென்றும் ஓர் செய்யுளில் குறிப்பிடுகிறார்.

"மேருமலையை ஒத்த தூண்களை நாட்டி,
மண்ட கோளகையின் விட்டமோட்டி
சீரியவர் அன்பின் அன்பென்னும் கயிறைப்பூட்டி,
புவியை நிகர்த்த பலகையை மாட்டி
பேரறிஞர் செய்த ஊஞ்சல்"

என்று இரண்டாம் பாடலைப் போன்றே ஐந்தாம் பாடலிலும் ஊஞ்சலின் தோற்றப்பொலிவு பிறிதொருவிதமாகக் கூறப்படுகிறது.

மாதுமை அம்மை ஊஞ்சலாடும் காட்சி துதிப்போர் உவந்தேத்தும் வண்ணம் மிகச் சிறப்பாக ஊஞ்சல் எங்கும் காட்சிப்படுத்தப்படுகிறது. "கங்கை கவரி வீச, காளிகள் கைக்குடையுடன் கூட, பாவையர் துதிகள் பேச, அரம்பையர் நடனமாட, முரசு கணநாதர் மாட்ட, தும்புரு நாரதர் யாழின் சுருதிமீட்ட, கந்தருவ மகளிரிசை நாவால் மூட்ட, கமலினியும் அனுந்திதையும் வடம் தொட்டு ஊஞ்சலாட்ட அம்பாள் ஆடுவதாக அமையும் இப்பாடல்கள் பக்திச் சுவையும் சிறந்த கற்பனை வளமும் நிறைந்ததாகக் காணப்படுகின்றன.

"காப்புச் செய்யுள், வாழி நீங்கலாக வரும் ஏனைய அனைத்துச் செய்யுட்களின் ஈற்றடிதோறும் "வத்தாக்கை மாதுமையே ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் இணைந்து வரும் வண்ணம் பாடப்பட்ட இவ்வூஞ்சல் சொல் நயமிக்கதாகவும், சத்தநயமிக்கதாகவும் விளங்குகிறது. சுன்னாகம் மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சலைப்போன்றே இவ்வூஞ்சலின் ஒன்பதாம் செய்யுளில் "ஆடீர் ஊஞ்சல்" என்னும் சொல்லொன்று அடி இயைபுத் தொடையாய் வரும் வண்ணம் பாடப்பட்டு உள்ளது.

இவ்வூஞ்சலின் "வாழி" என்னும் பகுதியில் புவி, நான்மரபு, மறை, ஆகமம், முகில், மகளிர் பதிவிரதம், பசு, வாய்மை, கருணை என்பன சிறப்புற வாழவேண்டுமென வாழி கூறப்படுகிறது.

ஊஞ்சலிலக்கணத்துக்கு அமைய முருகேச பண்டிதரால் பாடப்பட்ட ஊஞ்சல்கள் நன்கு திட்டமிட்ட முறையில் செவ்வனேயாக்கப்பட்ட ஊஞ்சல்களாக விளங்குகின்றன.

வெள்ளிமலை இதழ் 4 ஆவணி 2008

03

குடந்தை வெண்பா

சென்னையிலிருந்து 194 மைல் தொலைவில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள காவேரிக்கரையில் 342 சதுரமைல் பரப்பில் எழுந்த தாலுகாவே கும்பகோணம் ஆகும். குடந்தை என்றும், திருக்குடந்தை என்றும் அழைக்கப்படும் கும்பகோணத்தின் பழைய பெயர் குடமூக்கு எனப்படும். நீர்வளமும் நிலவளமும் மிக்க இந்நன்னகரை நோக்கி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் குடந்தையந்தாதி, திருக்குடந்தைப்புராணம் போன்ற நூல்களைப் பாடியருளினார். இவை தவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அநந்தபாரதி ஐயங்கார், ஞானச்சித்தர், சபாபதிப்பிள்ளை போன்றவர்களால் முறையே திருக்குடந்தை கும்பேசுவரசாமி இடபவாகன சேவைக்கீர்த்தனம், கும்பகோண மகாமகம் பதிகம், திருக்குடந்தை பெரியநாயகியம்மை பதிகம் முதலிய நூல்களும் பாடப்பட்டன. கும்பகோணப் பட்டணத்தின் உயர்தரக்கலாசாலையில் எட்டு வருட காலம் கற்பித்த காரணத்தாலும் அங்கேயே முருகேச பண்டிதர் நீண்ட காலம் வசித்த காரணத்தாலும் அவரால் குடந்தைப் பற்றி எழுதப் பெற்றுக் கிடைக்கப்பெற்ற நூலே **குடந்தை வெண்பா** ஆகும்.

கற்றார் காமுறும் வகையில் நற்றமிழ் வல்லாளர் முருகேசபண்டிதரால் எழுதப் பெற்ற இக் குடந்தை வெண்பா செய்யுள் தோறும் இரண்டாம் அடியின் மூன்றாவது சீர் "குடந்தையே" என வரும் வண்ணம் ஆசிரிய வணக்கம், அவையடக்கம், தலவிநாயகர் வணக்கம், வாழி நீங்கலாக நூறு வெண்பாக்களாலானது.

ஆகமம், வேதம் இரண்டையும் அளித்து அகிலம் போற்றும் வண்ணம் தன்னை ஆற்றுப்படுத் திய சங்கரபண்டிதரையும், ஞானம் என்னும் சுடரை ஏற்றி அறியாமை என்னும் இருளை நீக்கி எங்கும் தன்னை நிலை பேறுடையவனாக்கிய உடுப்பிட்டி சிவசம்புப் புலவரையும் போற்றிப்பாடும் ஆசிரிய வணக்கமானது அகவற்பாவால் ஆனது.

கட்டளைக் கலித்துறையில் பாடப்பட்ட அவையடக்கச் செய்யுள் புலவரின் அதீத மதிநுட்பத்தைப் புலப்படுத்தி நிற்கிறது. "கல்லார் பிழையறி யாரிந்த நூலிற் கலையின் மிகவல்லார் பிழையுரையார்" என முரண் தொடைக்கூடாக அவையை விளிக்கும் புலவர், "மதியிலென் போலல்லா தவரை உரைப்பாருரை" என அவைக்கு அடங்குவது போல் அடங்கி அவையடக்கம் கூறுகிறார்.

குடந்தை வெண்பாவின் செய்யுட் தோறும் குடந்தையின் தோற்றப்பொலிவும் அதன் சிறப்பும் புலவரால் மிகத் தத்துருபமாக எடுத்துரைக்கப்படுகிறது.

"ஆதியில் பிரளயம் வரப்போவதை அறிந்த பிரமதேவர், சிவபெருமானை அணுகி வேதங்களையும் சிருட்டி பீசங்களையும் காப்பாற்ற ஓர் உபாயம் கூறும்படி வேண்ட, அதற்கு சிவபிரான் மண்ணையும் அமுதத்தையும் சேர்த்துப் பிசைந்த ஓர் இடம் செய்து அதனுள் அமுதத்தை நிரப்பி சிருட்டி பீசவிதைகளை இட்டுக் குடத்தின் மீது மாவிலை, வில்வம், பூணூல், தேங்காய் ஆகியவற்றை வைத்து அமுதம் தெளித்து அதை மேருமலைக்கருகில் சேர்த்து விடும்படி கூறினார். உலகம் பிரளயத்தில் மூழ்கிக் கொண்டிருந்தபோது பிரமன் மேருமலையில் சேர்த்த அமுதக்கும்பம் தென்திசையை நோக்கி மிதந்து வந்து ஓர் இடத்தில் தங்கி விட அக்கும்பத்தை சிவன் வேடன் வடிவில் வந்து ஜீவராசிகளைக் காக்கும் பொருட்டு காவல் காத்தார். பிரளயத்தின் நீர்வடியும் தருணம் அமுதத்தை வெளிப்படுத்தும் பொருட்டு குடத்தை அம்பெய்து உடைத்தார். அவ்வாறு உடைபட்ட குடத்தின் கோண வடிவமான கும்பம் விழுந்த இடம்தான் கும்பகோணம். குடத்தின் வாசல் விழுந்த இடம்தான் குடவாசல். இதனை ஆதி கும்பேசுவரர் கோயில் தலபுராணம் விளக்கி நிற்கிறது. இந்நிகழ்வின் பல பகுதிகள் துண்டு துண்டாக குடந்தை வெண்பாவில் முருகேசபண்டிதரால் பாடப்படுகின்றன.

பிரமன் இறைவனை அணுகி வினாவிய செய்தி "பாடன்மறைவேதன் பணிந்து படைக்குந் தொழிலைக் கோடல்" என்னும் பாடலடிக்கூடாக வெளிப்படுவதுபோல் இறைவன் வேட்டுவ வடிவம் தாங்கி அம்பால் கும்பத்தைச் சரித்த நிகழ்வும் குடந்தை வெண்பாவின் பாடல்கள் பலவற்றில் சித்திரிக்கப்படுகிறது.

> **"அன்பிற் சிதைந்தமிர்த மைந்துகுரோ சத்தவதி**
> **கும்பம் பெருகும் குடந்தையே"**

என்னும் குடந்தை வெண்பா பாடலடிகள் அம்பில் சிதைந்த அமிர்தமானது, ஐந்து குரோசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையில் நான்கு திக்கிலும் சென்று பரவி, அங்குள்ள தலங்களைப் புனிதமாக்கிய செய்தியை எமக்குரைக்கிறது. திருவிடை மருதூர், திருநாகேசுரம், திருவேரகம், தாராசுரம், திருப்பாடலவனம் ஆகியவையே இங்கு புலவரால் சுட்டப்பட்ட ஐந்து குரோசத்தலங்கள் ஆகும். இதனைப் போன்று "வெள்ள முறுகலசம் வெங்கணையி னாற்சிதைவு கொள்ளமிர்த நீர்சேர் குடந்தை" வெண்பாவடியும் "ஆசரித்த கும்பத் தமைந்த சகபீங்க கோசரித் தோங்குங் குடந்தை" என்னும் வெண்பாவடியும், "பாணம் படச்சிதைகும் பத்துகுழுக்கிற் கும்ப கோணமென வோங்குங் குடந்தை" என்னும் வெண்பாவடியும் இறைவன் குடத்தை அம்பெய்து உடைத்த நிகழ்வை விளக்கி நிற்கின்றன.

"பூவையும் அணிகலன்களையும் சூடிய மகளிரின் எதிரே குயில் கூவும் எழில் சூழ் குடந்தை" என முதலாவது பாடலில் இயற்கையைப் பாடிய புலவர், அதனைத் தொடர்ந்து வரும் பாடலிலும் கற்போர் கண்டு களிப்புவகை எய்துமாறு பாடிச் செல்கிறார். "தேவர் பூசை செய்ய நிறைகொள் மலருள்ள சோலையென" இரண்டாம் பாடலில் உரைக்கப்படும் குடந்தை "செங்கரும்பு வேலியெனச் சேரத் திலகமொடு குங்குமமும் ஓங்கிக் காட்சியளிப்பதாகவும் பாடுகிறார். எழில் கொஞ்சும் இயற்கை அழகு ஆங்காங்கே கவிநயமிக்க பாடல்களாக வெளிப்படுகிறது.

நீர்வளம் தன்னால் நிலைகொள்ளும் பொன்னிநதியின் அழகு, பாடல்கள் பலவற்றில் பரவிக் காணப்படுகிறது. "பொன்னியின் பைங்கோடி இருபாலும் சொல்" எனப் பொன்னி என்னும் காவேரியைப் புகழ்ந்து பாடும் புலவர் அது குடந்தையின் அருளால் இரு மருங்கும் பொங்கிப் பிரவகித்துப் புரண்டோடும் சாட்சியை "பூருவமாய்ப் பொன்னி புரண்டிருபாலும் பெருகிக் கூர அருள்செய் குடந்தையே" எனப் பாடுகிறார். இப்பொன்னி நதியில் நீராடுபவருக்கு நோய் தீர்ந்து தேகம் நல்லழகு பெறுமென்பது "சாமளவும் பொன்னி தனிலாடி நோயின்றித் கோமளம்யா குஞ்சொ குடந்தையே" என்னும் பாடலடிக்கூடாக எடுத்துரைக்கப்படுகிறது. "தாவா வரு பொன்னித் தண்கரையில் வந்தவென்பு கோவா ரிசமாங் குடந்தையின் நீர்வளம் நிலவளத்துக்குக் காரணமாகி நற்றவம், அன்பு, கொடை, நல்லறிவைத் தந்து நல்கும் இதனை "நற்றவ மன்பு" என்னும் பாடலடி உணர்த்தி நிற்கிறது.

குடந்தை வெண்பாவானது மெய்யடியார் மனக்கண், கண்டு இன்புற்று கைதொழும் வண்ணம் சிவத்தலங்களைப் போற்றிப்பாடுகிறது. சொல்நயமும் கவிநயமுமிக்க இப்பாடல்கள் கற்றோர் பொருளுணர்ந்து ஓதத்தக்க வகையில் காலத்தால் அழியாத பாடல்களாகும்.

குடந்தைக் காரோணம்

சிவனது திருமேனியில் ஆரோகணம் (ஒன்றுபட்டுப்போதல்) ஆனபதி என்பதால் காயாரோகணம் என்றும் காரோணம் என்றழைக்கப்படும் இப்பதி

"கூவார் குயில்களாலு மயில்களின் சொற்கிளிப்பிள்ளை
காவார் பொழில் சூழ்ந்தழுகார் குடந்தைக் காரோணத்தாரே"

எனச் சம்மந்தரால் போற்றியும் பாடப்படுகிறது. இத்தலத்தில் இராமன் இராவணனைச் சங்காரம் செய்து அரக்கர் குலத்தை அழிப்பதற்காக உருத்திராம்சத்தை தனக்களிக்க வேண்டுமெனச் சிவனைப் பிரார்த்திக்க சிவபிரானும் அவன் வழிபாட்டில் மகிழ்ந்து இராமனுடைய காயத்தில் பிரவேசித்தார். இதனைக் குடத்தை புராணத்தில்

"அடியனேன் காயத்துள் நீ
அமைய ஆரோகணம் செய்
தொழுவுற வுறலாற் காயா
ரோகணம் என்னும் பேர்வுற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் இத் தலமும் நீயும்
முடிவுற விளங்கல் வேண்டும்"

என்னும் செய்யுள் அடிகள் கொண்டு அறியலாம். இந்தச் செய்தியை முருகேச பண்டிதர்.

.... - போயிலங்கை
"காவலனை ரைக்கடுத்தான் கைதொழுவான்
கண்ணருணல் காவலநா ரைக்கடுத்தான்"

என்னும் குடந்தை வெண்பா பாடலடி உணர்த்தி நிற்கிறது. "பூவார் பொய்கை அலர் தாமரை செங்கழு நீர்" எனச் சம்மந்தர் பாடுவதைப் போல் இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள பொற்றாமரைக்குளத்தைப் புலவர் "தீதின் முனிமகளாய்ச் செந்திருபொற்றாமரை"எனச் சிறப்பிக்கின்றார்.

தற்போது மகாமகக்குளத்தின் வடகரையிலுள்ள காசி விசுவேசம் என்னும் ஆலயத்தையும் குடந்தைக் காரோணம் எனச் சிலர் வழங்கி வருகின்றனர். இதனைப் புலவரின்

"உண்டதிகங் காசியினென் றோர்விரலி னாற்பகவர்
கொண்டு குறிக்குங் குடந்தை"

என்னும் அடி தெளிவுபடுத்தி நிற்கிறது. இவ்வாலயத்தைக் கருத்தில் கொண்டு பண்டிதர். "காசியில் நீங்கா கடும்பாவங்களைக் கூட குடந்தை நீக்கி விடும்" என்பதை

"காசியி னீங்காக் கடும்பவமுங் கண்டளவிற்
கூசி நடுங்குங் குடந்தையே"

என்னும் பாடலடி கொண்டு சுட்டுகின்றார் எனலாம். இத்தலம் நவநதிகளும், நவ கன்னிகளும், உமையவளும் மாந்தாதவும் பூசித்த தலமாகும்.

குடந்தைக் கீழ்க் கோட்டம்

"கொன் மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே"

என நாவுக்கரசரால் போற்றித் துதிக்கப்படும் கூத்தகப் பெருமானாகிய நடராஜர் ஐந்தொழிலுக்குக் காரணமாகிக் குடந்தைக் கீழ் கோட்டத்தில் அமர்ந்திருக்கிறார். இக் காட்சியைப் பண்டிதர்.

"அஞ்சு தொழிலு மமையக்கீழ்க் கோட்டத்திற்
குஞ்சிதத்தா ளோங்குங் குடந்தையே"

என்னும் வெண்பாவடிக்கூடாகப் புலப்படுதுகின்றார். அமுதகும்பத்திலிருந்து வில்வம் விழுந்த இடத்திலே தோன்றிய சிவலிங்கத்தின் மீதே இக்கோயில் கட்டப்பட்டதாகக் குடந்தைப்புராணம் கூறுகிறது.

சூரியபகவான் தன்மனைவி சஞ்சையால் கதிர்களை இழந்து ஒளி குன்றிக் காணப்பட்டான். இழந்த ஒளியை மீளப் பெறக் கீழ்க் கோட்டத்தை அடைந்து தீர்த்தமுண்டாக்கி அதில் மூழ்கி இறைவனை வழிபட்டான். இறைவனும் அவன் முன் தோன்றி இழந்த ஒளிக்கிரணங்களைத் திரும்பப் பெறுமாறு அருளினார். இதனால் இத்தீர்த்தம் 'சூரிய தீர்த்தமென்றும்', தலம் 'பாஸ்கர க்ஷேத்திரம்' என்றும் வழங்கி வருகிறது. இந்நிகழ்வைப் பண்டிதர் "ஆதித்தன் தன் கரத்தால் கும்பிடுவான் எய்துங் குடந்தை" என்றும் "சூரியனைக் கண்ணிடத் தோட்டினார்" என்றும் பாடுகிறார்.

நாகங்களின் தலைவனான ஆதிசேடனுக்கு நீண்ட காலமாகப் பூமியைத் தாங்கியிருந்தமையால் அயர்ச்சி ஏற்பட்டது. அவ்வயர்ச்சியால் ஏற்பட்ட சோர்வைப் போக்க மகாசிவராத்திரி அன்று குடந்தை வந்து அச்சுவத்த தீர்த்தத்தில் நீராடி, இறை அருளைப் பெற்று மீண்டும் பூமியைத் தாங்கும் வல்லமையைப் பெற்றார். நாகராஜர், நல்லருள் பெற்ற தலமென்பதால் இத்தலம் நாகேஸ்வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அவன் முழுகி எழுந்த தீர்த்தமென்பதால் இத்தீர்த்தம் நாக தீர்த்தம் என்றும் வழங்குகின்றது. ஆதித்தனும் ஆதிசேடனும் நல்லாசி பெற்றதைக் கருத்தில் கொண்ட முருகேச பண்டிதர் இந்நிகழ்வை

"முன்னிருவர் காங்கையிடை மூழ்கிமக நீரெழுந்து
குன்னந் தெரிக்குங் குடந்தை"

எனப்பாடுகிறார்.

"சேணார் மதிதோய் மாடம் மல்குசெல்வ நெடு வீடு" எனத் திருக்குடந்தை காரோணத்தைச் சம்பந்தர் பாட அதனைப் போன்று "ஆடி யெனமதி அம்பொன்னெழிற் கோபுரத்திற் கூடியெழில் காட்டும்" எனத் திருகுடந்தைக் கீழ்க் கோட்டத்தைப் பண்டிதர் பாடுகிறார். "கூச நோக்காது முன் சொன்ன பொய் கொடு வினைக்குற்றமும்" என திருநாகேச்சரத்தை நோக்கி சம்பந்தர் பாடிய அடிக்கொப்ப "கடும் பவமுங் கண்டளவிற்கூசிநடுங்குங் குடந்தையே" என்று பண்டிதரின் வரிகள் அமைகின்றன. இதனைப்போன்று திருநாவுக்கரசர் குடந்தைக் கீழ்க்கோட்டத்தை "கொக்கு இனிய கனிச்சிதறித் தேறல் பாயும் குடந்தை" எனப்பாட அதனை ஒப்ப முருகேச பண்டிதரின்.

"சொக்கியதொண் டர்க்குதவச் சொன்னமொடு நின்றார் போற்கொக்குட் பழக்குங் குடந்தை" என்னும் வெண்பாவடி அமைகிறது. "வேடுறு வேடராகி விசயனோ குடய்தார் போலும்" என திருநாகேச்சரத்தைப் பாடும் அப்பரின் தேவார அடிகள் "வேட்டுவனாய். வல்லுளி யெய்தார் வயங்கு விடங்கரென வல்லுளி பெய்தார்" என்னும் பண்டிதரின் அடிகளுடன் ஒத்திசைக்கின்றன. இவ்வாறு முருகேச பண்டிதரின் குடந்தை வெண்பா பாடலடிகள் பல. அப்பர் சம்பந்தர் பாடல்களுடன் ஒத்திசைவதாக அமைகின்றன.

குடந்தைக் காரோணம் பாடல்களைப் போலவே குடந்தைக் கீழ்க்கோட்டப் பாடல்களும் கற்றோரே பொருளறிந்து மனம் கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளன என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குடமூக்கு (கும்பேசுவரர் கோயில்)

"காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமியோடு சரச்சு வதியவள்
கோமி யும் உறையுங் குடமூக்கிலே"

எனத் திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பெற்ற கும்பேசர் ஆலயம் கீர்த்தி பெற்ற மிகவும் பழமையான ஆலயமாகக் கருதப்படுகிறது.

"சிவன் அம்பால் எய்து சிதைத்த குடத்திலிருந்து அமுதம்
தெறித்து நாற்புறமும் ஓட உடனே சிவன் அமுதத்தில் நனைந்த
வெண்மணலை இலிங்க வடிவமாக்கி கும்பத்திலிட்டுப் பூசித்தார்
இவ்வாறு பூசிக்கப்பட்ட இடத்தில் தோன்றிய கோயிலே கும்பேசர் ஆலயம் ஆகும்."

இவ்வாறு இங்கு கோயில் கொண்டுள்ள இறைவன், அமுதகும்பத்தில் தோன்றியமையால் ஸ்ரீ ஆதி கும்பேசுவரர், அமுதேசுவரர், அமுதலிங்கேசர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார். எனவே முருகேச பண்டிதரால் குடந்தை வெண்பாவில் பாடப்பட்ட

"தெள்ளமிர்த கும்பச் சிமிலிசிக்க நாதரெனக்
கொள்ள விழுஞ்சீர் குடந்தையே"

என்னும் பாடலடி இத்தலத்தை நோக்கிப் பாடப்பட்டதாகவே அறியமுடிகிறது. இதைப்போன்று "கோமியும் உறையுங் குடமூக்கிலே" என்னும் அப்பரடியுடன் ஒத்திசைவாகப் பாடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமியொடு கூடி மகிழ்ந்து மனைதோறுங்

கோமியுறையுங் குடந்தையே"

என்னும் வெண்பாவடியும், அப்பரின் "ஆவணத்துடையான் அடியார்களைத் தீவணத்திருநீறு மெய் பூசியோர், கோவணத்துடையான் குடமூக்கிலே" என்னும் பாடலடியைப் பின்பற்றிப் பாடப்பட்ட

"........சேட்படுத்துக்

கோவணங் கேட்டார் குலவுதிரு நாவலூர்க்

கோவணங் கேட்டார் குடி"

என்னும் முருகேச பண்டிதரின் பாடலடியும் இத்தலத்தையே சுட்டிப் பாடப்பட்டிருக்க வேண்டும். "நண்ணி அங்கு ஆவணத்துடையான்" என்னும் அப்பரின் பாடலடி சிவபிரான் புத்தூரில் திருமணப்பந்தலில் மணக்கோலத்தில் வீற்றிருந்த சுந்தரரை அடிமையோலைகாட்டி தடுத்தாட் கொண்ட வரலாற்றை எடுத்துரைக்கிறது. இவ்வடியைப் பின்பற்றி முருகேச பண்டிதரால் இந்நிகழ்வு

".......... அன்றொருபொய்

ஆவணங்காட்டினா ரன்பின் வழுதிபணி

யாவணாங் காட்டினா ரார்வு"

என்னும் வெண்பா பாடலடிக்கூடாக எடுத்துரைக்கப்படுகிறது. இதனைப் போன்று 'சேட்படுத்துக் கோவணம் கேட்டார்...." என்னும் பாடலடி பழையாறை நகரில் வாழ்ந்து திருநல்லூரில் சிவனடியாருக்கு கந்தையும் சீளுடையும், கோவணமும் கொடுத்து உதவிய அமர்நீதி நாயனாரைக் குறித்தே பாடப்பட்டது.

"கோவணம் கேட்டார்குடி" என்னும் முருகேச பண்டிதரின் பாடலடி இருவெவ்வேறு உட்கருத்துகள் பொதியப் பாடப்பட்ட அடியாகும். திருநல்லூரில் அமர்நீதியாரிடம் சிவன் முதுபிராமணர் வடிவங்கொண்டு கோவணம் கேட்ட வரலாற்றை உணர்த்தும் வண்ணம் பாடப்பட்ட இவ்வடி வேதமந்திரங்களை, அடியவர் கேட்கும் வண்ணம் உரைக்கும் தலமாகவும் விளங்குகிறது என்பதையும் உணர்த்தும் வண்ணம் பாடப்பட்டதாக அமைகிறது. மேலும் இப்பாடலடி சம்மந்தரின் "ஈரிரு கோவணத்தோ டிருந்தானவன் எம்மிறையே" என்னும் திருக்குடந்தைக் காரோணம் என்னும் பாடலடியுடன் ஒத்திசைந்து போவதாகவும் காணப்படுகிறது.

தொண்டை நாட்டில் வாழ்ந்த மூர்க்கநாயனார் என்னும் அடியார் சிவனடியாருக்குத் தொண்டு செய்து பொருள் முழுவதும் இழந்தார். பின் சூதாடிச் சூதாட்டத்தில் வெற்றி பெற்ற பொருளைக் கொண்டு சிவனடியாருக்குத் திருத்தொண்டு செய்து வந்தார். இவரின் பணி குடந்தையிலும் தொடர்ந்து ஈற்றில் இத்தலத்திலேயே முக்தி பெற்றார். இதனை முருகேச பண்டிதர்.

"என்றுஞ் சூதாடியன மீட்டுநன் மூர்க்கர்மலங்

கொன்றுமுத்தி சேருங் குடந்தையே" என்று பாடுகிறார்.

சேக்கிழார் பெருமானும்

"இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்

பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே

உருளாயச் சூதாடி உறுபொருள்வென் றனநம்பர்

அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார்"

என மூர்க்கநாயனாரைப் போற்றிப்பாடுகிறார்.

முனிவர்களுடன் கும்பேசரைத் தரிசிக்க வந்து விநாயகர் கேட்டும் கரும்பு கொடுக்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்புவியாபாரியின் கதையும் முருகேச பண்டிதரால் பாடப்படுகிறது. ஈற்றில் வியாபாரி தவறை உணர்ந்து விநாயகரை வணங்க, இறைவன் சக்கையாகிப்போன அவன் கரும்புக்குச் சாரத்தை கொடுத்தார். இதனால் இவ்விநாயகர் கரும்பாயிரப்பிள்ளையார் என அழைக்கப்படுகிறார். இவ்வாலயம் கும்பேசர் திருமஞ்சன வீதியில் வராகக்குளத்தின் வடமேற்கு மூலையிலுள்ளது. இதனைப் பண்டிதரின்

"மாட்டி வணிகனையோர் வண்கரும்புக் காயிரங் கொள்

கோட்டு முகன்வாழ் குடந்தையே"

என்னும் பாடலடி உணர்த்தி நிற்கிறது.

பிரமன், சண்டி, சுதர்மன், ஞானவான், கிருதவீரியன், வீரவர்மன், தர்மபாகு, சுவர்ணரோமன், சேக்கிழார், ஐயடிகள் காடவர்க்கோன் முதலான பலரும் கும்பேசுவரரை வழிபட்டுப் பேறு பெற்றவர்கள் ஆவர்.

இவர் தவிர குடந்தை வெண்பாவில் சிவனடியார் பலரின் வரலாறுகள் எடுத்துரைக்கப்படுகின்றன. மாணிக்கவாசகர் குடந்தைக்கு வந்து அருட்பேறு பெற்றதை

"…….வாசியொடு

வாதவூ ரர்க்குவந்தார் வைதுமனப் பத்தியொடு

வாதவூ ரர்க்குவந்தார் வாழ்வு"

என்னும் பாடலடிகள் விளக்கி நிற்பதைப் போல நக்கீரர் நற்பொருள் பெற்றகதை "மண்நிணொரு நாடவாதாடினார், நக்கீரர் நற்பொருளை நாடாவா தாடினார் நாடு" என்னும் பாடலடிகளுக்கூடாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன. இவை போன்று சண்டனுக்கு நல்லருளைக் கொடுத்து அருளிய நிகழ்வு "சண்டனுக்கு நல்லருளைத் தந்தகண்ட தீர்த்த நிலை கொண்டு விளங்கும் குடந்தையே" என்னும் பாடலடிகொண்டும் வீமுகன் நற்பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த செய்தி "வீமுகனு மாறா விதியாற் தனதகம்போய்க் கோமுகனுந் தேறுங் குடந்தையே" என்னும் பாடலடி கொண்டும், காசிப முனிவர் காசிபதீர்த்தத்தில் மூழ்கி இறைவனைப் பற்றி திருவருட் பேறாகிய வீடுபேற்றைப் பெற்ற நிகழ்வு "பற்றறுத்த காசிபனைப் பற்று மலிவடிவக் குற்ற மகற்றுங் குடந்தையே" என்னும் பாடலடிகள் கொண்டு எடுத்துரைக்கப்படுகின்றன.

சிறந்த கட்டிடக் கலை அமைப்புடன் மூன்று பிரகாரங்களைக் கொண்டதாகக் இக்கோயில் விளங்குகிறது. காண்பவர் கண்ணுக்கு விருந்தளிக்கும் கலைநயமிக்க இக்கோவிலை

"காண வினவக் கலைதெரியக் கண்டுணரக்

கோணடை யெய்தாக் குடந்தை"

என்னும் பாடலடிக்கூடாக முருகேச பண்டிதர் எடுத்துரைக்கிறார். நிறைகொள் கோபுரம் கொண்டு வரையில்லா புகழ்வாய்ந்த குடந்தைக் கோபுரத்தைப் பண்டிதர்

"கும்பமொன்பான் பத்தென்னக் கோபுரத்தின் மீது விண்செல்

கும்பமுங் கூடும் குடந்தையே"

எனப் பாடுவதும்

"ஆபுரத்த வென்ன வநேக விடிவிளக்குக்

கோபுரத்தி னீடுங் குடந்தையே"

எனப் பாடுவதும் இதனை நன்குணர்த்தி நிற்கிறது

எழில்மாதர் ஆடும் நடனங்கள் குடந்தையின் மாடத்தைப் பொலிவுறச் செய்கின்றன. இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனாகிய சிவனின் இருக்கையான (கோடு + அரங்கம்) குடந்தை ஆலயம் சிறப்புறுகிறது. இக்கருத்தைப் புலப்படுத்தி நிற்கும் புலவரின்

"ஆடரங்கு மாளிகையு மாடெழிலா ராடு தொறுங்
கோடரங்க ளாடுங் குடந்தை"

என்னும் பாடலுக்கு சம்மந்தரின் "கூத்தரவங்கனோவாச் சூழகன் குடமூக்கிடம்" என்னும் பாடலை அடியெடுத்துக் கொடுத்தது எனலாம்.

கன்னி காவேரியே கங்கையென்பதை அப்பர் சுவாமிகள்.

"................தாழ்சடைக்
கங்கையானவள் கன்னியெனப்படும்
கொங்கையாள் உறையுங் குடமூக்கிலே"

எனப் பாட, இப்பாடலடியுடன் இயையும் வண்ணம் முருகேச பண்டிதர்

"...............தாரமெனுங்
கங்கா தரனார் கனன்றுசமனுந்தியநா
கங்கா தரனார் கப்பு" என்றும்
".................சேற்றெழும்பூ
வைத்தகங்கை யாற்றினான் வண்பலுகுத் தான்சடையில்
வைத்த கங்கை யாற்றினான் வாழ்வு"

என்றும் பாடுகிறார்.

கமலாட்சன், தாரகாட்சன், விதுண்மாலி எனப்படும் மூன்று அசுரர்களையும் வென்று முப்புரங்களை அழித்த சிவன் உறைகின்ற வாயில் குடவாயில் என்பதை அப்பர் சுவாமிகள்

"விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்டவன்உறை யுங்குடமூக்கிலேல்"

எனப் பாட முருகேச பண்டிதர்,

".............தீபுரத்தில்
வைத்த வருளினார் மாயா மலங்களைய
வைத்த வருளினார் வைப்பு"

எனப்பாடுகிறார்.

முப்புரங்களை எரித்த நிகழ்வு பாடப்படுவதைப் போல காலனைக் காலால் உதைத்த நிகழ்வும் பண்டிதர் அவர்களால் பல்வேறு பாடல்களில் பாடப்படுகிறது.

"காலனைத் தாக்கினார் கான்மலராற் காய்ந்த சினக்
காலனைத் தாக்கினார் காப்பு"

என்னும் பாடலடியிலும்

"நோற்றவரிற் றீமை புரி நொய்யவரு மையமொரீ இக்
கூற்றுவனை யஞ்சாக் குடந்தையே"

என்னும் பாடலடியிலும் இந்நிகழ்வு சித்தரிக்கப்படுகிறது.

தூமறையின் ஒலிபெருக தூரிய மங்களம் முழங்க மாமறையோர் நின்றுரையும் பதியென சேக்கிழாரால் குறிப்பிடப்படும் குடந்தையின் வேதமந்திர உச்சாடனங்களின் சிறப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசபண்டிதராலும் பாடப்படுகின்றன.

"நாவிருக் கோதிவலம் நாளுமறை யோர்புரியோர்
கோவிருக்க ஓங்கும் குடந்தையே"

என்னும் பாடலடியும்

"நாலு மறைப்பொருளு நன்றாய் விளங்குவது
கூலியா யோங்குங் குடந்தையே" என்னும் பாடலடியும்
"சாத்திரத்தார் பஞ்சமுக சன்மத்தா ஆதிசைவ
கோத்திரத்தார் ஏத்தும் குடந்தையே"

என்னும் பாடலடியும்

"அண்டரைக் கூவிமறை யந்தணர்கள் வேள்விபுரி
குண்டநிரை சூழுங் குடந்தையே"

என்னும் பாடலடியும் ஓமியம் செய்து உயர்ந்து நிற்கும் குடந்தையையும், காமியமற்று நிஸ்காமியத்துடன் அதனைச் செவ்வனேயாற்றும் மறையந்தணர்களின் சிறப்பையும் எடுத்துரைக்கின்றன.

நாள்தோறும் நம்மை வருத்தும் இடர்களை அகற்றி மெய்யடியாருக்கு நன்மையைச் செய்யும் நாளையும் கோளையும் சம்மந்தரைப் போல் முருகேச பண்டிதரும் போற்றிப் பாடுவதும் மனம் கொள்ளத்தக்கது.

"நாளவதி வந்துமிடர் நல்கவெரீஇ நின்றுநவக்
கோளவதி யெய்துங் குடந்தையே" என்னும்

பாடலடி இதனை மெய்ப்பித்து நிற்கிறது.

குடந்தையின் தீர்த்தங்களில் ஒன்றான காவேரித்தீர்த்தம் முருகேச பண்டிதரால் போற்றப்படுவதைப் போல் மகாமகக்குளமும் முருகேச பண்டிதரால் போற்றப்படுகிறது.

"பூமருவும் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தானாடுதற்கு வந்துவழிபடுங் கோயில்"

எனச் சேக்கிழாரால் பெரியபுராணத்தில் சிறப்பிக்கப்படும் மகாமகக்குளம் கன்னியா தீர்த்தமென்றும் அழைக்கப்படும். அமுதகும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதமே தேங்கி இத் தீர்த்தமாயிற்று எனத் தலபுராணம் கூறுகின்றது. இருபது ஏக்கர் பரப்பளவு கொண்ட இக்குளத்தைச் சுற்றிலும் 16 மண்டபங்கள் உள்ளன. குரு ஒவ்வொரு இராசியிலும் ஒவ்வொரு ஆண்டாகப் பன்னிரு இராசிகளையும் சுற்றி வரப் பன்னிரு வருடங்களாகும். இவ்வாறு சுற்றிவரும்போது சூரியனின் ஆட்சி வீடாகிய சிம்ம இராசியிற் குருவும் சந்திரனும் ஒன்று சேர்ந்திருக்க சிம்ம இராசிக்கு ஏழாவது வீடும் சனியின் ஆட்சி வீடுமாகிய கும்ப இராசியில் சூரியன் இருந்து கொண்டு சிம்மராசியிலுள்ள குருவையும் சந்திரனையும் நேராக நோக்கும் நாளே மகாமகநாளாகும். மகாமகவிழா எனப்படும் இப்பெருவிழாவை முருகேசபண்டிதர்

"ஞாலமெலா மேத்துமக நாளதனி லீராறு
கோலநெடுந் தேரூர் குடந்தையே"

எனப்பாடுகிறார். இப்பெருவிழா அன்று இக்குளத்தில் நீராடி கும்பேசுவரரை வழிபடுவதன் மூலம் வாழ்வின் சௌபாக்கியங்களை இம்மையிலும் மறுமையிலும் அடையலாம்.

இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உற்றமகப் பேற்றி னுவந்துமக நீர்படிந்தோர்
கொற்றவ னேத்துங் குடந்தையே"

என்னும் வெண்பாவடி தெளிவுறுத்தி நிற்கிறது. கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, பயோதினி, சரயு, கோதாவரி, காவிரி, குமரி ஆகிய ஒன்பது புனிதநதிகளும் மகாமகக் குளத்தில் நீராடி புனிதமடைந்தன. இதனை சம்மந்தர் "பூமருவும் கங்கை முதற் புனிதமாம் பெருந்தீர்த்தம், மாமகந் தானாடுவதற்கு வந்து கோயில்" எனப்பாடுகிறார். இக்குளத்தில் நவநதிகள் தவிர விண்ணுறு தேவர்களும் தம் குற்றம் களைய நீராடி அருட்பேறு என்னும் நற்பேறினைப் பெற்றார்கள். இதனை முருகேச பண்டிதர்

"மாதகலத் தானாதி வானவர்கன் மாமகநீர்
கோதகலத் தோயும் குடந்தையே"

எனப் பாடுகிறார்.

"துறவி நெஞ்சினராகிய தொண்டர்கள் பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தனாய் ஈசன் வந்து பிறவிப்பிணி அகற்றி நோய்தீர்ப்பான்" என அப்பரால் சிறப்பித்துப் போற்றப்படும் திருக்குடந்தை, முருகேசபண்டிதரால் "கோதாட்டினாருமுக்தி கூடலாமென்று நிதங் கோதாட்டி வாழும் குடந்தை" எனச் சிறப்பிக்கப்படுகிறது.

குடந்தைக் காரோணம், குடந்தைக் கீழ்க்கோட்டம், குடமூக்கு போன்ற ஆலயங்கள் முருகேச பண்டிதரால் விதந்து பாடப்படுவது போல் தாராசுரமும் போற்றித் துதிக்கப்படுகிறது. இதனைப் பண்டிதரின்

"தாரா சுரன்வணங்குந் தாரா சுரமுகமெழில்
கூரா விளங்கும் குடந்தையே"

என்னுமடி நினைவு கூருகிறது.

கற்றார் காமுறும் வகையில் எழில் கொஞ்சும் குடந்தையின் இயற்கைவளத்தையும் அவ்வியற்கை வளத்துக்கு அணிசெய்யும் நீர்வளத்தையும் நீர்வளத்தால் நிலைபெற்று நிற்கும் நிலவளத்தையும் நிலவளத்தின் மேல் நெடுந்தோங்கி நின்று நல்வினை ஆற்றும் நற்பதியையும் **"கண்டபடி கண்டுறினுங் காணாக் கதிமறையிற் கொண்டபடி யுண்டாம் குடந்தை புகழ்"** எனப் போற்றிப்பாடும் நற்றமிழ் வித்தகன் நாவுக்கினியன் முருகேசபண்டிதரின் தெள்ளுதமிழ்ப்பாடல்கள் தேடிப்படிப் போருக்குத் தெவிட்டாத தேனினுமினியவையாகும்.

வெள்ளிமலை இதழ் 5 மார்கழி 2008

04

பதார்த்த தீபிகை

தர்க்க சங்கிரகப் பொருளை எடுத்து விளக்கும் முகமாக முருகேச பண்டிதரால் எழுதப்பட்ட நூலே பதார்த்த தீபிகையாகும். பதப்பொருட்களின் தீபிகையே பதார்த்த தீபிகையாயிற்று. இப்பதார்த்தங்கள் எவையென்பதை முருகேச பண்டிதரின்

"பொருள்பண்பு கன்மம் பொதுமை விசேடம் பொருந்துகின்ற
ஒருசம வாய மபாவ மெனப் பதத்துப் பொருள்கள்"

என்னும் பாவடிகள் உணர்த்தி நிற்கின்றன. தீபிகை எனும் சொல் விளக்கு எனப் பொருள் படும். எனவே ஆன்ம இருள் அகற்றி மெய்ஞானத்தை எடுத்து விளக்கும் பதார்த்தங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு பொருளாகக் கொண்ட அருள் விளக்கே பதார்த்த தீபிகையாகும். இந்நூல் விநாயக வணக்கம், ஆக்குவித்தோன் பெயர், ஆக்கியோன் பெயர், அவையடக்கம், நூல் செய்தகாலம் நீங்கலாக எழுபத்தெட்டுக் கலித்துறைப் பாடல்களால் ஆனது.

ஆண் யானையின் முகத்தை ஒத்த விநாயகர் திருவடிகளைப் பற்றினால் எமது பழவினைகள் அற்றுப் போகும் என்பதை,

"தந்திமாமுகத் தெந்தைதாளிணைத்
சிந்தையாலருந் தொந்த நீங்குமே"

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

எனவே முன்னர் கூறியதுபோல் தன்னை ஆக்குவித்த சிவசம்புப் புலவரையும் சிவசங்கர பண்டிதரையும் ஆக்குவித்தோன் பகுதியில் நினைவுகூர பண்டிதர் அடுத்த பாடலில் தானே இந்நூலை ஆக்கியோன் என்பதை

"யாழ்ப்பாண சுன்னை முருகேச பண்டிதன் யாத்தானே" என்னும் பாடலைக் கொண்டு செப்புகிறார்.

இந்நூல் பதார்ததோத்தேசம், திரவிய குணங்களின் வகை, வினை முதலிய நான்கின் வகை, இன்மை வகை, பிருதிவி முதலிய நான்கின் விவரணம், ஆகாய முதலிய மூன்றின் விவரணம், ஆன்மாவின் விவரணம், மனத்தின் விவரணம், உருவ விவரணம், இரச விவரணம், கந்த ஸ்பரிசங்களின் விவரணம், உருவ முதலிய நான்கிற்குமுள்ள நித்தாநித்தங்களின் விவரணம், சங்கியா விவரணம், பரிமாண விவரணம், பிருதத்துவ சையோகங்களின் விவரணம், விபாகபரத்துவாபரத்துவங்களின் விவரணம், குருத்துவதிரவத்துவ ஸ்நேகங்களின் விவரணம், சத்த விவரணம், புத்தியின் விவரணம், புத்தியின் மெய்யநுபவ விவரணம், அதிற் கரண விவரணம், பிரத்தியக்ஷப் பிரமாண விவரணம், பிரதியஷயத்தில் அறுவகைக்காட்சிக்கும் விவரணம், அநுமானப் பிரமாண விவரணம்,போலியேதுக்கள் உபமானப் பிரமாண விவரணம், சத்தப்பிரமாண விவரணம், துக்கமுதலிய ஆறின் விவரணம், மீட்டும் புத்தி முதலிய எட்டின் விவரணம், சமஸ்கார விவரணம்,கன்மசமானிய விசேக்ஷங்களின் விவரணம், சமவாய விவரணம், முன்னின்மை பின்னின்மைகளின் விவரணம், முழுதும் பாவ விவரணம், அந்நியோந்நியா பாவ விவரணமும் முடிந்ததும் முடிதலும் எனப் பல பகுதிகளைக் கொண்டது.

வெள்ளிமலை இதழ் 06 சித்திரை 2009

05

நீதி நூறு

உலகின் கண்ணுள்ள உயரிய பண்பினையும் உயரிய செயலினையும் எல்லோரும் தெரிந்து உய்துணரும் பொருட்டு உருவாக்கப்பட்ட இலக்கியங்களே நீதி இலக்கியங்களாகும். நியமம் தவறா ஒழுங்குக்கு இயைபாக மக்கள் இயங்கும் பொருட்டு 'இன்னவை செய்தற்கு உரியன. இன்னவை தவிர்த்தற்கு உரியன' எனக்கூறி அகமல்லா புறத்தின் பாற்பட்டு நிற்கும் இவ்விலக்கியங்கள் மாசற்ற இயல்புடைய அறத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இதனால் ஆன்றோரால் அற இலக்கியமென அழைக்கப்பட்ட இவ்விலக்கியங்கள் சமண சமயத்தின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகிய காலத்தில் நீதி இலக்கியங்கள் என்னும் சொல்லாட்சிக்கூடாக அறியப்பட்டன. அறிவிலும் அனுபவத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்பமாகவும் நுட்பமாகவும் ஆன்றோர் கண்ட உண்மைகளைக் கற்போர் மனதில் பதியுமாறு கதைகளுக்கூடாகவும் கொள்கைகளுக்கூடாகவும் காண்பரிய உவமைகள் தத்துவங்களுக்கூடாக வும் எடுத்தியம்பும் இவ்விலக்கியங்கள் நுண்மையும், சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும் விளங்கத்தோன்றி நிற்பவையாகும். கூரிய சொல்லாற்றல் கொண்டும் கருத்துச் செறிவுடைய நிறைகொள் பொருளாற்றல் மிக்கதாக அமையும் நீதி இலக்கியங்கள் சங்க காலம் தொட்டு இற்றை வரை தமிழர் வாழ்வியலுடன் ஒன்றனக்கலந்து மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய் கின்றன.

மரபு வழிக் கல்வி, நிறுவன ரீதியான கல்வி என இரண்டு வகையான தமிழ்க்கல்வி மரபு நிலவிய காலப்பகுதியாக 19ம் நூற்றாண்டு கருதப்படுகின்றது. பண்டைய காலத்தில் நிலவி வந்த தமிழர்களின் கல்வி மரபுடன் இயைபுபட்ட மரபுவழிக்கல்வியில் மாத்திரமன்றி நிறுவன ரீதியான கல்வி நிறுவனங் களிலும் ஆத்திசூடி, நன்னெறி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம், திருக்குறள், நாலடியார், நீதிநெறி விளக்கம் முதலான நூல்கள் போதிக்கப் பட்டன.

மனித வாழ்வியலானது அறத்தின்பாற்பட்டே அமைய வேண்டும் என்னும் நோக்கத்துக்கு அமையப் போதிக்கப்பட்ட இவ்விலக்கியங்களைப் போலவே அன்னியர் ஆட்சியின் கீழ் சிதைவுற்ற சமூகத்தைச் சீர்படுத்தவும் மனித விழுமியங்களைப் பேணி மேதகு சமூகத்தை உருவாக்கும் முகமாக இதற்கு ஒப்பான வகையில் நீதி இலக்கியங்கள் பல இக்காலத்தில் தோன்றத் தொடங்கின. அவ்வகையில் இக்காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களாக நடேசு சாஸ்திரியின் ஈசாப் நீதிக்கதைகள், அ.சதாசிவம் பிள்ளையின் நன்நெறிக் கதாசங்கிரகம், இராமசாமிப்பிள்ளையின் நீதி சாரவாக்கியம், அருந்த கிருட்டின ஐயங்காரின் நீதி வெண்பா நாற்பது, இராமபாரதியின் ஆத்திச்சூடி வெண்பா, அ.குமாரசுவாமிப்புலவரின் சாணக்கிய நீதி வெண்பா, நீதி நெறி விளக்கப்புத்துரை, அருணாசலம் பிள்ளையின் நன்னெறி வெண்பா, ச.மு.கந்தசாமிப்பிள்ளையின் கொலை மறுத்தல், தண்டபாணி சுவாமிகளின் சத்தியசூத்திரம், சத்தியவாசகம், சேனாலைப்பியின் சுவர்க்கநீதி, அப்துல்காதிர் புலவரின் சொர்க்கநீதி, உலகநாத முதலியாரின் நன்னீதி, சதாசிவம்பிள்ளையின் நன்நெறிக்கொத்து, பிலிப்பின் நன்நெறி விளக்கு போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவ்வகை யில் இக்காலப்பகுதியில் "நன்றே செய்ய வேண்டும் அதனை இன்றே இன்னே செய்ய வேண்டும்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கமைய நன்னுறத்தோன்றிய நன்னூலே முருகேசபண்டிதரின் நீதி நூறாகும்.

நீதி என்னும் வடமொழிச்சொல் ஆறாம் நூற்றாண்டளவில் தமிழ்மொழியில் கலந்து தனித்துவ முடைய தமிழ்ச்சொற் போலவே தமிழிலக்கியத்தில் பயின்று வருகின்றது. நீ என்னும் வேர்ச்சொல்லடியாகத் தோன்றும் இச்சொல் பல் பொருட்பரிமாணங்களுடையது. நீ என்னும் வேர்ச்சொல்லிற்கு அழைத்து செல், கொண்டுசெல், நடந்து வழிகாட்டு என்னும் பல்வேறு பொருட்கள் வடமொழியில் வழங்கி வருகிறது. இவ் வேர்சொல்லடியாக அமையும். "நீதி" என்னும் சொல் இயக்குதல், வழி காட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு என பல் பொருள்களை உணர்த்துகிறது" என்பார் க.த.திருநாவுக்கரசு. இஃதன்றி இச் சொல் "செயலின் நிகழ்நிலை கொள்கை முறை, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன்" என்னும் பதங்களையும் தன்னுள் கொண்டு ஒரு சொல் பல் பொருள் கிளவியாக நிற்கிறது. பரிமேலழகரின் கருத்துப்படி "நீதி" என்னும் சொல் "நயன்" என்னும் சொல் கொண்டே திருக்குறளினால் அறியப்படுகறது. (குறள் 97)

ஆசிரிய வணக்கம், அவையடக்கம், நூல் செய்த காலம் என்னும் பகுதிகள் நீங்கலாக நூறு வெண்பாக்களால் ஆன நீதி நூறு. சிந்தைக்கினிய அறவொழுக்கங்களைக் கண்டோர் பொருளு ணர்ந்து செவிநுகரும் வண்ணம் சிறப்புமிக்கதோர் இலக்கியமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அறிவால் வளர்த்த சங்கரபண்டிதரையும், அன்பு நிலைநாட்டிக் கலைதெருட்டி மெய்யறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதித்த சிவசம்புப் புலவரையும் போற்றி விதந்துரைக்கும் ஆசிரியர் வணக்கச் செய்யுளிரண்டும் நேரிசை வெண்பாவால் பாடப்பட்டன.

அவையை அடக்கும் முகமாகவும் அதேசமயம் அவைக்கு அடங்கும் முகமாகவும் அமையும் முருகேச பண்டிதரின் அவையடக்கச் செய்யுள் அகங்காரமற்ற அவரின் மெய்யறிவை உலகிற்குப். புடம் போட்டுக் காட்டுகிறது. "தாழ்ந்தேன் சொல் நூலிதனைத் தள்ளாமல்" எனக்கூறி அவைக்கு அடங்கும் முருகேச பண்டிதர் "தாழ்ந்த குருவிந்த மென்னினுங் கொள்ளுவார் கொண்டால் ஒரு நிந்தையில்லை உலகு"எனக்கூறி அடக்கமாக அவையை அடக்குகிறார்.

குடந்தை மாநகரின் கண் யாழ்ப்பாணச் சுன்னை நகர் முருகேச பண்டிதனால் 1887இல் இந் நூல் நூறு பாக்களால் ஆக்கப்பட்டதை

"செய்யசக னாண்டுதிகழ் பதினெண் ணூற்றேழில்
வையம்புகழ் குடந்தை மாநகரில் - துய்யதொரு
யாழ்ப்பாணச் சுன்னை நகரெய்து முருகேசனியான்
நூற் பாடினேனீதி நூறு"

என இச்செய்யுள் விளக்கி நிற்கிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் உட்கிடையாக நீதி நூறு நூலில் ஆங்காங்கே வெளிப்படுத்துகின்றன "எழுத்துப் பலவகர மெய்தினாற்போல வழுத்து மொருதனைப் பன்மார்க்க விழுத்தகையார் கொண்டிறைஞ்ச நிற்பான்" (நீதி நூறு 1) என்னும் முருகேச பண்டிதரின் செய்யுளடி "அகர உயிர் போல் அறிவாகி எங்கும், நிகரில் இறை நிற்கும் நிறைந்தது." என்னும் திருவருட்பயன் பாடலின் சாரமாக விளங்குகின்றது. உன்னத நிலையாகிய சிவசாயுச்சிய நிலையில் பற்றறுத்த ஆன்மா பேரின்ப வெள்ளமாகிய வீடு பேறு வேண்டி இறையடியைப் பற்ற அவ்வான் மாவுக்கு முக்தியாகிய வீடு பேற்றை இறைவன் வழங்குவான் என்பதை

"விழுத்தகையார் - கொண்டிறைஞ்ச நிற்பான் குலவு திருப்பாதங்
கண்டிறைஞ்சி னாகுங் கதி"

என்னும் பாடலடி விளக்கி நிற்கிறது. பக்தி நெறி அறிவித்த சித்தம்பலவனையன்றி பிறரறியா முக்தியாகிய ஞான நெறியை "வேதத்துறையறிந்த வித்தகருங் கண்டறியா நீதிக்கு ணின்ற நெறியென்பா" (நீ.நூ.2) என முருகேச பண்டிதர் போற்றுகிறார். "அலகுச்சோதியன்" என சேக்கிழாராலும் "சோதினவன்" என அப்பராலும் "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே" என மாணிக்க வாசகராலும் "ஒளிகொள்மேனியுடையாய்" என திருஞானசம்பந்தராலும் போற்றப்படும் இறைவனை முருகேச பண்டிதர். "சோதிக்குள் சோதியன்" எனப் போற்றுகின்றார். அனுபூதிநிலையில் இறைவனுடன் தாடலை போற்கூடி இறைபோல் பேதமின்றி நிற்கும் ஆன்மா மெய்ச்சுடராய் விளங்கும். இதனை.

"சோதியா யன்பற் றொழுவா ருளக்கருத்திற்
சோதிக்குமோர்மெய்ச்சுடர்" (நீ.நூ.2)

என்னும் பாடலடி எடுத்துரைக்கிறது.

செயலின் பொருட்டே வினை. இஃதே கன்மம்,எனவே பற்றற்ற வினையே வீடு பேறாகிய முக்திக்கான நெறி. இதனை பண்டிதரின் "இல்லை பயனில் செயல்" என்னுமடி தத்துரூபமாக விளக்கி நிற்கிறது. வினையறுத்து ஆன்மாவுக்கு அருள்பாலிக்குமிறைவன் உளதன்று எனக்கூறி பிற சமய வாதிகள் வாதுரைத்து பொருதிநின்ற போதிலும் "அவனுள்ள பொருள், என்றும் அவன் நிலைபேறு டைய பொருள்" என்பதை "ஒருவனிலை யென்ன உரைத்தானை வைது பொருது நிற்பதென்ன பொருள்" என்னும் முருகேச பண்டிதரின் பாடலடி எடுத்துரைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைகரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே"

என்னும் நாவுக்கரசரின் பாடலடியின் உயர்வீச்சாக முருகேசபண்டிதரின்

"வேடம் பலவானால் வீடும் பலவாமோ
நாடுமதஞ் சாதியினி ணண்ணுவதென் - கூடுமுண்மைச்
சாக்கியர்நன் னந்தனார் சான்றுமெய்யனபொன்றே
யாக்குமுயர் முக்தியனதை"

(நீதி. நூல் 6)

என்னும் வெண்பாவடிகள் எடுத்துரைக்கிறது. இறைவனை நாடும் திருத்தொண்டனுக்கு சாதியில்லை, பேதமில்லை, குணமில்லை, குறியுமில்லை. அவன் சிவனடியான்; அவன் எக்குலத்தில் பிறந்தாலும் தொழுகுலத்திற்குரிய மெய்யன்பொன்றே அவனை எந்தை ஈசனாக உயர்த்தி நிற்கும். இதன் அதி உன்னத தன்மையை நந்தியை விலகச் செய்த நன்னந்தனார் வாழ்க்கைக்கூடாக எடுத்துக்காட்டும் முருகேச பண்டிதரின் கவிச்சிறப்பு காத்திரமானது. கருத்தாழமிக்கது.

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே"

எனக்கூறும் ஔவையார் செயலின் செய்கை கண்டு "சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் கொடுப்பார் உயர் குலத்தார் கொடார் இழிகுலத்தார்" என்பார். ஆனால் முருகேச பண்டிதரோ ஆடு, குதிரை அனைத்தையும் நாடும் காலுண்டென்பதால் சாதி வகை கூறலாம். ஆனால் மனிதருக்கு கிடையாது. மரங்கள் ஈனும் கிளைகளில் எவ்வாறு பேதமில்லையோ அவ்வாறே மனிதனிலும் பேதமில்லை. இதனை

"மானுடருக்கீது மரமொன்றே பல் கிளைகள் ஈனுமோ வெவ்வேறென"

எனும் அடிகள் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளென விளக்கி நிற்கிறது. மனிதன் செய்யும் தொழில் பேதமுற்றாலும் மனிதனில் பேதமில்லை. குயவன் செய்யும் மட்கலத்தில் எவ்வாறு பேதமில்லையோ அவ்வாறே மனிதனும் பேதமற்றவன். இதனைச் சாதி என்று கொள்ளுவார். சக்கிரி மட்கலம் போல் ஆதலை யாய்ந்தறியார் (நீ.நூா.8) என்னும் வெண்பாவடி கொண்டு உணர்த்தும் பண்டிதர் மதம் போற்றுதற்குரியது; அது இகழத்தக்கதன்று. பற்றறுத்து அன்பும் அறிவும் துணை கொண்டு சேவிக்கும் மதம் எந்நாளும் இகழமுடியாப் பெருமிதம். இதனை "எம்மதமேனும் இகழற்க" என்னும் பாவடி கொண்டு விளக்கி நிற்பார்.

பயிலும் கல்வி, வாழ்வுக்கு நலமாகும். 'எப்பொருளிருப்பினும் கல்வியின்றேல் அவ்வாழ்வு நலமாகா' எனுங்கருத்தை "நலமிசைமற்றெப் பொருளுமெய்தாவிதனினூஉங் குற்றதுணை மக்களுயிர்க்கில்லை மகி" என்னும் தொடருக்கூடாக விளக்கும் முருகேச பண்டிதர் 'இக்கல்வி நாள்தோறும் ஆவலுடன் கேட்டுணர்ந்து கற்க வேண்டியது; கேடுபடா ஓம்புவனுக்கு வாட்டமில்லாப் பெருவாழ்வைத் தருவது' என்பார். ஈவோன் இறைவன்; அவன் சேவிப்பதற்குரியன்; அவனைப் போற்றுதல் நன்று." இதனை "ஈவோன் அவன் என்னும் தேவன் என எண்ணிச் சேவிவாயோ" (நீ.நூா.12) எனும் அடி எடுத்துரைக்கின்றது.

"கல்வியறிவுடையாரே பொருளுடையார்." (நீ.நூா.14) அக்கல்வியின் உடமையாளனாக விளங்கும் வண்புலவனுக்கு எப்பொருளும் பிற்புறமே என உரைக்கும் பண்டிதர் "இன்பம் நாடி புறப் பொருளீட்டல்" துன்பமேயாயினும் அகப்பொருட்கல்வி துன்பந் தருவது போற் தோன்றினும் தாவாத இன்பம் புரியும்"எனப் பதினாறாவது செய்யுள் கொண்டு எடுத்துரைப்பார். வாழ்வு உய்தி பெற மகவுக்கு தந்தை நல்கும் செல்வம் அறிவுச்செல்வமன்றி பொருட்செல்வமல்ல . இதனை .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்னும் வள்ளுவரின் வாயுறை வாழ்த்துக்கு ஒப்ப பண்டிதரின் "மக்கட்குத் தந்தை வருந்தி வைக்கு மாநிதியம் விச்சை மற்றல்லாது வேறில்லை" என்னும் வெண்பாவடி எடுத்துரைக்கின்றது. இதனைப் போன்று உத்தர வேதத்தின் "கண் உடையார் என்பவர் கற்றோர்" எனும் கருத்துக்கு ஒப்ப பண்டிதரின் "சீரெல்லாம் கண்ணுடையான் போல் எழுத்து எண்" என்னும் பாடலடி வெளிப் படுத்துகிறது.

கல்வியறிவுடையவனின் சிறப்பை பண்டிதரின் இருபத்தொராவது செய்யுள் எடுத்துரைக்கின்றது. கல்வியறிவுடையவன் துன்பமடையான். இடும்பை தீண்டா அவன் என்றும் இளமையுடையவனாக இருப்பான். பொன்னையடைந்தவர் பெறமுடியாத கல்விப் பொருளோடு இருப்பான் என்கிறது அச்செய்யுள். புலி பசித்தாலும் புல்லானதை உண்ணாது; இதனைப் போன்று கற்றாய்ந்த மேலோரும் கடவன செய்தற்கன்றி மற்றேதும் செய்ய மதியார். எனவே உரியதை உள்ளவாறு செய்தலே கற்றோருக்கு உவப்பைத் தரும் எனக் கூறும் முருகேச பண்டிதர் பொருட்செயலின் பொருட்டு பெற்றவரை விடுத்து பெருந்தூரம் சென்று கல்வி கற்பது குற்றமெனக் கூறிக்கடிவார்.

எல்லோரையும் வலியராக்கும் பொருள் உண்டெனின் அது கல்வியாகும். எனவே கல்வியே மிக்கது. அதுவே பயனுடைய பொருளுமாகும். அக்கல்வி அள்ள அள்ளக் குறையாத நிறைவுடை ஊற்றாகும். எனவே கல்லாத கல்வி பல்லளவு இருக்க எல்லாம் அறிந்தார்; இவ்வுலகில் ஏதேனு மொன்றறியார் எனக் கூறும் முருகேச பண்டிதர்.

"தெரியாத ஒன்றைத் தெரியுமெனச் சொல்லி
அருமை குலைவா ரறிவார்" (நீ.நூ 99)

வாழும் காலம் குறிது. அதனால் காலத்துக்கேற்ப கற்றல் சால்புடையது. அது மாத்திரமன்றி படி எடுத்து காணும் அறிவின்பயன் அடியெடுத்து முக்தியடைதல். எனவே பயனறிந்து கற்றல் சிறப்பு என் பது முருகேச பண்டிதரின் கருத்து.

ஆழறிவு கொண்டு அரிய நற்கல்வியின் சிறப்பைக் கூறிய புலவர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கான அறக் கருத்துக்களை அரிய தமிழ்கொண்டு எடுத்துரைக்கின்றார். ஈதலென்பது வாய்மை, தவம். சீலமன்பு கொண்டு ஈயப்படுவது. இல்லாமலும் மனமொப்பி ஈயும் ஈகை என்றும் சிறப்பை தருவது. எனவே காக்கை விழிமணிபோல் காதலனும் காதலியும் கருத்தொருமித்து நீக்கமின்றி வாழ்வதே அறம் என்றார். இவ்வாறு வாழும் வாழ்வில் பொய்யுரை கூறாது மெய்யுரை கூறி வாழ்தல் சிறப்பு. ஈசனடி தொழுது மாசகற்றி வாழ்தல் அதனிலும் சிறப்பு எனக் கூறும் முருகேசபண்டிதர், கொண்ட சினத்தால் கொடுஞ்சொல்லுரையாது கற்றறிந்து அதற்குத்தக ஒழுகுதலே நெறியென்பார். நல்லறம் திறம்பாமை கட்டிய காரிகையருக்கு அழகு என உரைக்கும் முருகேசபண்டிதர் "அப் பெண் கொண்டவனைத் தன் அழகால் தாங்குவாள். உண்டியிசைந் தீயாளொளித்து, நிதி சேமிப்பாள். அண்டும் அச்சத்தாற் பணிகளாற்றுவாள்" என்று போற்றுகிறார்கள். அதனை போலவே கனவானாகிய கணவனும் இல்லாளும் ஒத்தியைந்து மனமொப்பி வாழ வேண்டும் என்பார். மாது முன்னால் வந்து குடிகொள்ள மதுவினை உண்பவர் பெரும் புலையர் எனக் கூறிக் கண்டிக்கும் பண்டிதரவர்கள் சாதிமுறையெண்ணாது தம் குடிமை எண்ணாது பாதகத் துக்கு அஞ்சி பழியெண்ணாது வாழ்பவனே மேன் மக்கள் என்பார். இவ்வாறு வாழுங்காலத்தில் மனிதன் ஆனவன் செய்வன திருந்தச் செய்ய வேண்டும். அவ்வாறு செயல்களை நன்னுறச் செய்யும் காலத்தில் செல்வமின்றி வருந்த நேர்ந்த போதிலும் செயல் கைவிடலாகாது என உரைக்கும் முருகேச பண்டிதர் "நல்லறம் தன்னை மிஞ்சி இல்லை" என்பார். எனவே தன் முயன்ற அறம் செய்து தகைசார் அறனோடு நிற்பவனே மனிதன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தின் பாற்பட்டு ஆளும் ஆண்டகைமை பற்றிக்கூறும் முருகேச பண்டிதர் கள்ளோடு காமம் நீத்து தான் சார்ந்த குடிகளுக்கு இன்புற்று ஈவதை வேந்தனின் உண்மை அறம் என உரைப்பார். நீசனான போதிலும் நெறியின் கண் அரசாளும் வேந்தன் ஈசனாக மதிக்கப்படுவான் என்பர். "பேதையதிகாரம் அரசனிலும் மேலாமறிஞர் (நீ.நூ. 39) என முருகேச பண்டிதர் அரசனுக்கான பண்பினை எடுத்துரைத்த போதிலும் மன்னனுக்கு செங்கோண்மையே சிறப்பினைத்தருமென்பார். இதனைப் போன்று அந்தணருக்கு வேதமும் அன்புடையோருக்கு வாய்மையும் உழவருக்கு உறுதிபயக்கும் மேழியும் தக்க சிறப்பைத் தரும் எனவும் உரைப்பார். உழவுத்தொழிலின் மேன் மையை பொய்யாமொழியின்

"பலகுடை நீழலும் தம் குடைக்கீழ் காண்டர்
அழகுஉடை நீழ லவர்"
வாக்கிற்கு ஒப்ப
"ஏர்த்தொழிலான் மிக்க இயல்புடைய ராயிருந்தும்
பார்நிவர் கீழ் வேலையிலார் பார்த்தற்க - ஊழ்த்திறமோ
உள்ளது போதுமென் றுன்னா துடையவரும்
அன்னவர் கீழ் நிற்கு மவா" (நீதி. நூல். 30)

என்னும் வெண்பாவடி கொண்டும் விளக்குவார்.

அறத்தின் பாற்பட்டு வாழ்தலுக்குரிய சால்பு நெறிகளைச் சாற்றும் பண்டிதர் வாழ்வில் நீக்கப்பட வேண்டியசெயல்களையும் எடுத்துரைப்பார்.

"காலத்தைச் சூதிற் கழிப்பார் பொருளை விற்று
ஞாலத் தேவரு நகையாட - நூலகத்தைப்
பெண்டீரிழக்கப் பிழைப்பேனென் றெண்ணி யெண்ணிக்
கண்டவரே யின்மை தடை"

எனக் கூறி சூதாடல் தீதென உரைக்கும் முருகேச பண்டிதர் நல்லவருக்கு ஈயாத பொருள் புல்லரிட முள்ள பொருள் எனக் கூறி கொடாதவனை வையவும் செய்கிறார். நிதியை நல்வழியில் தேட வேண் டும். அவ்வாறன்றி நல்வழியற்றுத் தீய வழியில் தேடிய செல்வம் பூதமெனப் போற்றிக் காத்த போதி லும் ஒர் நாள் ஏதுமில்லாமற் போகுமென உரைக்கும் பண்டிதரின் கருத்து ஆழ் பெறுமானமிக்கது.

நட்பற்று பொருளுக்காகப் பழகும் நாணயமில்லா ஈனர் பற்றி "அன்னவருக்கன்னவரா யாடிப் பொருள் பறிப்பார் இன்னியரோ செய்நன்றி யெண்ணாரே" என்னும் வெண்பாவடி கொண்டு உரைக்கும் முருகேச பண்டிதர், "அன்னவரை நம்பற்க அவர் நட்டாற்றில் விட்டகல்வர்" எனவும் கூறி நிற்பார். இதனைப் போன்று "தீயன் செய்யும் வணக்கம் தீதெனவே முடியும். அதுநன்மை பயப்பதன்று." எனக்கூறும் முருகேச பண்டிதர், தூயர் பகைத்தாலும் நன்று; பகுத்தறிய மாட்டார். நகைத்து வெகுள்வார்" (நீ.நூ. 66) என்று உரைப்பார்.

"நெறியற்று வாழும் பெண்ணைத் தீண்டல்" இழிவு என்பதை முருகேச பண்டிதர் மிக நளினமாகவும் அதே சமயம் நாகரீகமாகவும் எடுத்துரைப்பார்.

"உண்டமெச்சி உண்கை யுடனுண்கை உண்ணவெனக்
கொண்டவுணா வுண்கை கொளாதுண்கை"

என்னும் வெண்பாவடிக்கூடாக விரியும் இச்செய்யுளில் நெறி தவறி வாழும் நங்கையரைத் தீண்டுமாடவன் தீண்டத்தகாத புல்லனாகச் சித்திரிக்கப்படுகிறான். "சொல் பொருள் பின்வரு நிலை யணியை" கற்றோரன்றி ஏனையோரும் நயக்கும் வகையில் இச்செய்யுளில் கையாண்ட அவர் இதனை போன்று 14, 16, 31, 59, 61 ஆம் செய்யுட்களிலும் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. "மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைத்த மொழியான் வரினும் முரண் என்னும் முரண் தொடை 16, 17, 25, 45, 52, 54, 58, 83, 90, 92, 95. செய்யுட்களில் மிகத் தத்துரூபமாகக் கையாளப்படுகிறது.

"அறப்பசித்தும் வெய்ய மிடிவரினும் தாங்கரிய நோய்வரினும் புல் தின்னுமோ வேங்கை" என்னும் பழமொழியை உவமையாகக் கையாண்டதைப் போல் முருகேச பண்டிதர் 7, 8, 14, 17, 19, 66, 75, 77 ஆகிய செய்யுட்களிலும் உவமை, உவமைத் தொடர்களையும் கையாண்டுள்ளார். நாலுண்டு தீயுமிழ்வார் நோக்குக்கு பாலுண்டு நஞ்சுமிழும் பாம்பினத்தைக் கூறுவதும் பேதமில்லா வாழ்வுக்கு மரமொன்றின் பல்கிளையும் சக்கிரி மட்கலத்தையும் உவமையாகக் கூறுவதும் முருகேச பண்டிதரின் கவித்துவத்துக்கு தக்க சான்றுகளாகும்.

"நகையே அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவமை என்னும் மெய்ப்பாடுகள் தோன்றும் வண்ணம் நீதி நூறை முருகேச பண்டிதர் உருவாக்கியிருப்பது சாலச் சிறப்பாகும். எல்லாமறிந்தாருமில்லை எதுவுமறியாருமில்லை. எனவே அகந்தையென்பது வீண்; இதனை நகையென்னும் சுவை விரவும் வண்ணம் "தாழ்ந்த சிறுமுயலாற் தாவிய தன்றோ குழியில்" எனக் குறிப்பிடுவார். இதனைப் போன்று "சிச்சீ, குரைமுக னொன்றே குவலயத்தி னட்பு" என்னுமடியில் இளிவரல் என்னும் மெய்ப்பாடு இயைந்து நிற்கிறது. இதனைப் போன்று "அச்சத்தா னட்புறினு மல்லோன் மறைந்து பழிச் சொற்களையே சொல்லி மிகத் தூறுவான் (41) என்னும் வெண்பாவடியும் இளிவரலை விளக்கி நிற்கிறது. இவைபோல "இல்லாளு மொத்திங் கெதிர்ப்பாதரேற் பாவமெனும் அல்லான் புறக்கொடுக்கு மாங்கு" என்னும் அடியில் பெருமிதமும் "ஈசனடி மறந்தாருக் கெய்துவது மன்னு நரகன்றி இகந்தன்னி லெய்த விலை" என்னும் அடியில் அச்சமும் "துய்க்கநிதி கோடியென வைத்தார் குலமக்க தம்முயிரைக் கோடியென வைத்தாரோர் கூற்று என்னும் பாவடியில் இளிவரலும் கூறப்பட்டன. நீதிக்கருத்துக்களை அறிவுறுத்தும் இந்நூலில் இயன்ற இடமெல்லாம் சுவை பரவுறும் வகையில் மெய்ப்பாட்டை அமைத்து முருகேச பண்டிதர் நூலை யாத்திருப்பது கற்பவருக்கு இனிமை பயப்பதாகவே அமைகிறது.

நீதியின் உரைகல்லாக விளங்கும் இந்நீதி நூறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நீதி இலக்கியங்களுக்குள் போற்றத்தக்க பொருட்பொலிவும் கவிதைச் சிறப்பும் வாய்ந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது. சொற்சுருக்கமும் கருத்தாழமும் கலை மேவும் கவிநயமும் கொண்டு விளங்கும் இந்நூல் என்றும் காலத்தால் அழியாத 'கருத்துப் பெட்டகம்' எனலாம்.

வெள்ளிமலை இதழ் 07 ஆடி 2009

06

மயிலணிச் சிலேடை வெண்பா

மணற்றி என்றும் மணற்றிடல் என்றும் பூர்வ நாமம் பெற்று விளங்கும் யாழ்ப்பாணத்தின் நடுநாயகமாக விளங்கும் பகுதி சுன்னாகமாகும். வெள்ளிமலை, வெள்ளியங்கிரி, ரஜதகிரி, ரஜதாசலம் என அழைக்கப்படும், சுன்னாகத்தில் வீறுசால் சான்றோரால் தமிழும் சமயமும் ஒருங்கே வளர்க்கப்பட்ட புனித நகராக விளங்குவது மயிலணி என்னுமிடமாகும். மயில் அணி செய்த இடம் மயிலணி எனப்படும். அதாவது "சூரபத்மனைக் கொன்ற பாபம் நீங்கிட முருகப்பெருமானால் இவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற சிவாலயத்தில் இறைவனின் திருநடனக் காட்சியைக் கண்ட அவரின் வாகனமான மயில் தோகை விரித்தாடி முருகனையும் அவரின் தந்தை சிவனையும் துதி செய்து அணி செய்தது. இதனைக் கண்ணுற்ற முருகன், மகிழ்வுடன் மயிலை நோக்கி, "உனது பெயரால் இவ்விடம் மயிலணி என வழங்கப்படும்" என்று ஆசீர்வதித்தார். அன்று தொட்டு இன்று வரை இவ்விடம் அவ்வாக்குக்கமைய 'மயிலணி' என்ற காரணப்பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமயச்சான்றோர் இவ்விடத்திலே ஆலயங்களை நிறுவி அதனையொட்டி சைவக்குருக்கள் மடங்களையும் ஸ்தாபித்தனர். அதுமாத்திரமன்றி இக்காலப் பகுதியில் கோயில்களுக்கருகாமையில் வேதாகமங்களைக் கற்றுத் தேறிய பிராமணோத்தமரைக் குடியேற்றிக் கோயிற்பூசை , திருவிழாக்கள் முதலியவற்றைச் சிறப்பாகச் செய்தனர்.எனவே இதன் மூலம் சைவசமயம் மறுமலர்ச்சி அடைந்தமையோடு சைவசமயப் பாரம்பரியமும் தளிர்த்து வேரூன்றலாயிற்று. சமயத்தை வளர்க்க முனைந்தமையைப் போன்று அவ்வளவே தமிழையும், இவ்விடத்தில் வளர்க்கத் தலைப்பட்ட ஆன்றோர் ஒரு புதிய பாடசாலையொன்றையும் நிறுவினர். சுவாமிநாத தேசிகர்,நமச்சிவாய தேசிகர், முத்துக்குமாரகவியராயர், முருகேச பண்டிதர், சங்கர பண்டிதர் முதலியோர் இப்பாடசாலையிலிருந்து கல்வி புகட்டினர். இதன் பயனாக சி.வை.தாமோ தரம்பிள்ளை, மானிப்பாய் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ஊரெழு சு.சரவணமுத்துப்புலவர், குமார சுவாமிப்புலவர், கீரிமலை கா.சபாபதிக்குருக்கள் முதலானோர் இப்பாடசாலையில் கல்வி கற்று ஈழத்தில் சிறந்த தமிழ்ப்புலமையாளர்களாக விளங்கினார்கள். இத்தகைய பேறு பெற்றவர் வாழும் மயிலணியை "மாணிக்க மேடையினும் வண்புலவோர் நாவினுமே வாணி வந்தோங்குமயிலணி "என்றும்"மெய்ஞான்றும் வண்டிசைபாடு மயிலணி"என்றும் முருகேச பண்டிதர் சிறப்பித்துப் பாடுகின்றார்.

1877 இல் ஏழாலை சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களால் நிறுவப்பெற்ற தமிழ்வித்தியாசாலை யில் முருகேச பண்டிதர் தலைமை ஆசிரியராகப் பதவி வகித்த காலத்தில் "மயிலணிச் சிலேடை வெண் பாவை" இயற்றினார் என கு.முத்துகுமாரசுவாமிப்பிள்ளை கூறுவார். இந்நூல் காப்பு நீங்கலாக இருபத்தொரு பாடல்களால் ஆனது. ஆயினும்

"வெற்றிவடிவேல் முருகன் மேவு மயிலணியைப்
பற்றிச்சிலேடை வெண் பாநூறு - சொற்றிடவே"

என்னும் காப்புச் செய்யுள் கொண்டு நோக்குமிடத்து இந்நூல் நூறு பாடல்களினால் பாடப்பட்டி ருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது. குடந்தை வெண்பா போன்று முன்னிரு பாடல் அடிகளும் மயிலணியின் சிறப்பைப் பாட வெண்பாவின் ஈற்றடிகளிரண்டும் மடக்கு அணி அமையுமாறு பாடப்பட் டுள்ளது. ஆழ்ந்த பொருட் புலப்பாடு வெளிப்படும் வண்ணம் பாடப்பட்ட மயிலணிச் சிலேடை வெண்பா அக்கால மயிலணி மக்களின் வாழ்வியற்கோலங்களையும் ஓரளவுக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மயிலணிச்சிலேடை வெண்பாவில் முருகப்பெருமானின் பெருமை பல்வேறிடங்களில் எடுத்துரைக்கப்படுகிறது. முருகப்பெருமான் உறைகின்ற மயிலணியை "வரைக் கந்த மாதனத்து வந்தார் மனை" எனும் பாடலடிக்கூடாக எடுத்துரைக்கும் முருகேச பண்டிதர் தன்னை நாடி வரும் அடியவருக்கு அருள்பாலிக்கும் கந்தப் பெருமானை "தொண்டர்கள் போய் ஆறக் கரத்தா னமைத்தங் கவர்க்கருளும் ஆறக்கரத்தானகம்" என்னும் பாடலடி கொண்டு காட்சிப்படுத்துவார். "காங்கேயர்" என் றும் "மாறன்" என்றும் முருகப்பெருமானை விளித்துப்பாடும் புலவர்,

"…..முத்துப்
பழனிமலையார் பயந்தருளும் வேற்கைப்
பழனிமலையார் பதி"

என்னும் பாடலில் மயிலணியை முருகப் பெருமான் உறையும் பழனிமலையாகவே உருவகிக் கின்றார். அத்துடன் மயிலணி வேதனையால் வெஞ்சிறையில் வாடி நலியும் தொண்டர்களின் வீடு பேற்றுக்குரிய இடமாகவும் போற்றப்படுகின்றது. முருகப்பெருமான் சூரபத்மனின் ஆணவமலத்தை நீக்கி அவனை ஆட்கொண்டதை "மாசுறு சூர் அங்கங் கெடுத்தார்" என்னும் வரியில் காட்சிப்படுத்தும் பண்டிதர், குமரக்கடவுளின் இல்லக்கிழத்தி வள்ளியைக் காணக் கிழ வேடம் தாங்கி வந்ததை "அரிவை வள்ளி காணவுரு அங்கங் கெடுத்தார்" என்னும் பாடலடி கொண்டும் காட்சிப் படுத்துவார். முருகப்பெருமானின் துணைவியான வள்ளியும் முருகப்பெருமானைப் போன்று பல வேறிடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிக்கப்படுகின்றாள். வள்ளியை "வேடிச்சி" என விளித்துப்பாடும் பண்டிதர் திருமுருகன் வள்ளிக்காக குறமேறிய கதையை "வேட்டுவரை மேவினார் மெல்லியலாம் வள்ளி தனை வேட்டு வரை மேவினார்" என்னும் பாடலடி கொண்டு எடுத்துரைக்கிறார்.

முருகக் கடவுளின் இச்சா சக்தியாக வள்ளியைப் பாடிய முருகேச பண்டிதர் அவர்தம் ஞானசக்தி யாகிய வேலையும் சிறப்பித்துப் பாடுகிறார். சூரபத்மனை முருகப்பெருமான் வேலினால் சங்கரித்த நிகழ்வை "நஞ்சஞ்ச வைத்தானை வேலினால் மல்குசரந் தண்ணெனச் செய் வேலினால் வாழ்வு" எனப் பாடிச் சிறப்பிக்கிறார்.

இயற்கை வளம் கொண்டு எழில் பொங்கும் மயிலணியின் சிறப்புக்கள் பல்வேறு பாடல்களில் மிக எளிமையாக எடுத்துரைக்கப்படுகின்றன. வயல் வளம் கொண்டு நலம் பயக்கும் மயிலணி "போய்க்கழனி வித்துநரும் போரரசருஞ் செவியின் வாய்க் கவிதை நாடு" எனப் போற்றப் படுகின்றது. இதனைப்போன்று மயிலணியின் நீர்வளம் "ஊற்றார் புனற்றடமு மூர்ப்புறஞ் சேருங்கடமும் வாற்றா மரைசேர் மயிலணி" எனவும் முருகேச பண்டிதரால் எடுத்துரைக்கப்படுகின்றது. கம்பராமாயணத்தில் "தண்டலை மயில்களாட தாமரை விளக்கம் தாங்க" என நகர்ப்புறம் சிறப்பிக்கப்பட்டதைப் போன்று தண்டலை பொன்னின் தளியும் தவமதுவார் வண்டுறக்கம் காட்டும்" என மயிலணிக் கிராமமும் முருகேச பண்டிதரால் போற்றிப் புகழ்ந்துரைக்கப்படுகின்றது. எழில் மிகு இயற்கையைப் பாடிய புலவர் அவ்வியற்கைக்கு அரண் செய்யுமிடமாக விளங்கும் ஆலயத்தை "விண்டலஞ்சேர் கோபுரமும் மெய்யோ கருமேக மண்டலந்தாங்கு மயிலணி" எனக்கூறி உவந்தேத்துகிறார். இவ்வாலயத்துக்குச் சென்று பக்தர்கள் பாடிப்பரவும் காட்சியும் புலவரால் எடுத்துரைக்கப்படுகிறது. கலைஞானம் கொண்டு வேணுவால் ஆக்குவித்த மயிலணி என்னும் பதியில் மெய்யன்போடு மெய்யற வழிபடும் அடியவருக்கு மேனிலை பெற்றோங்கும் வாழ்வினை அருள்பவனாகிய இறைவனைப் போற்றிப் பாடும் முருகேச பண்டிதர் அவன் ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்பின்றி நின்மலனாகவிருந்து அருள்பாலிக்கும் தன்மையினையும் பாடுகிறார்.

"போற்றாதவருக் கினியாள் தமிழ்முனிவ னாதியமா தவருக்கினியான் தவம்" என்னும் பண்டிதரின் பாடலடி இறைவனின் திருவருட்பேற்றை உலகுக்கு எடுத்துரைக்கின்றது. அதாவது "இறைவன் தன்னைப் போற்றித் துதிக்காதவருக்கும் இனியவனாக விளங்குபவன்; அதேசமயம் தன்னை நாடித்துதிப்பவருக்கு துதித்தலின் நிலைபேறாக விளங்குபவன்; அவ்விறைவனே தோற்றமும் முடிவுமில்லா ஆதியாகவும் சிறப்பிக்கப் படுபவன்" என்னும் இறையின் உண்மைத்துவம் இப்பாடலடியில் மிக அருமையாக வெளிப்படுத்துகின்றது. இப்பாடலடியின் ஆதார சுருதியாக "நல மிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர் சங்கரன்" என்னும் திருவருட்பயன் கூற்றே விளக்குகிறது எனலாம்.

ஆலய மகோற்சவம் ஐந்தொழில்களின் நிலைகளனாக விளங்குவது. அதிலும் தேரோற்சவம் இறைவனின் அழித்தல் தொழிலை அடியவருக்கு நினைவூட்டி நிற்பது. அழித்தல் என்பது நிலைத்து நிற்கும் தனு, கரண, புவன, போகங்களை அவை தோன்றுவதற்கு முதற்காரணமாயிருந்த மாயையில் மீண்டும் ஒடுங்கும் படி செய்தல். இதனை "ஆகமத்தில் வந்துகைக்குந் தேரார் மடிந்தருளப் பாகனென வந்துகைக்குந் தேரார்மனை" எனப்பாடும் முருகேச பண்டிதர் தேரூரச்சிறப்புப் பெறும் ஆலயத்தின் தெய்வீகச் சிறப்பினை "கோகனப்பூ மேலும் கோவேந்தர் வீதியிலும் வாகனங்களேறு மயிலணி" எனச் சிறப்பிக்கின்றார். சிலேடைத் தன்மையில் பாடப்பட்ட இப்பாடலுக்கு தாமரையிலும் அரசருக்கு அரசரான இறைவனுடைய வீதிகளிலும் அன்னங்கள் ஏறியுறைகின்ற பதியான மயிலணியில் வாயுதேவன் தேரைச் செலுத்தும் இறைவன் எழுந்தருளியுள்ளார். அவரடியினை போர்க்களத்துப் பகைவர்கள் கூடப் பகை நீக்கிப் பற்றுவர் எனப்பிறிதொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். இரட்டுற மொழிதல் என்னும் சிலேடை வெண்பா அணிக்கூடாகப் பாடப்பட்ட இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலணிச் சிலேடை வெண்பா உரைக்க உரைக்கப் பற்பொருட் பெறுமானமுடைய புதிய புதிய கருத்துக்கள் தோன்றும் வண்ணம் பாடப்பட்டுள்ளது. கல்லாதவருக்கன்றி கற்றோர் மட்டுமே பொருள் கண்டு விதந்தேத்துமாறு பாடப்பட்ட இச் சிலேடை வெண்பா முருகேசபண்டிதரின் வித்துவச் செருக்குக்கு அடிநாதமாக விளங்குகிறது. சொல் நயமும் பொருள்நயமும் மிக்க மயிலணிச் சிலேடை வெண்பாவுக்கு உரையெழுதப்படுமானால் அது முருகேசபண்டிதரின் ஆழ்ந்த கவிப்புலமையை உலகறியச் செய்யும்.

முருகேசபண்டிதரின் வித்துவச் செருக்குக்கு பிறிதொரு சான்று இவரியற்றிய நடுவெழுத்து அலங்காரமாகும்.

மைந்தன்விரை மாமிகவர் வழிமீ னாரன்
மதனவேள் புறவிதழிவ் வேழின் மீது
வந்தநடு வெழுத்துமாற் கண்டற் காக்கி
மற்றைவரி பதினான்குந் தானே கொண்டான்
அந்தநாள் வளைத்துச்சி தரித்துத் தன்கண்
ணாக்கியமர்ந் திருத்தியென வங்கை யேந்தி
முந்தவதன் கீழிருந்து நடனஞ் செய்து
முனிந்துரித்தான் மயிலணிவாழ் முதல்வன் றாளே.

இத்தனி நிலைச் செய்யுளில் நடுவெழுத்தால் கொள்ளப்பட்ட பொருள் தத்துவராமற் செய்தான் என்பது. நடுவெழுத்து எடுக்கும்படி கொள்ளப்பட்ட சொற்கள் "மைந்தன்,விதை" முதலியவற்றால் பெறப்பட்ட மதலை,வித்துமாதுலை, கவலை, ஆரால், காமன், புல்லி என்னும் ஏழு சொற்களும் ஆகும். இங்கு வரிகள் பதினான்கு என்றது நடுவெழுத்து நீங்கிய ஏனைய எழுத்துக்களையாகும். எனவே முருகேசபண்டிதரால் இயற்றப்பட்ட நடுவெழுத்தலங்காரம் ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் புதிய பொருளுக்கு வித்திட்டது எனலாம். இதனைப் போலவே நாயக்கர் காலத்தில் பெருவழக்கில் கையாளப்பட்ட நிந்தாஸ்துதி விருத்தம், விரோதசிலேடை அணி, விடுகவி போன்ற பாவடிவங்களைக் கையாண்டு தம் தனிநிலைச் செய்யுட்களைப் பாடியுள்ளார்.

"வாழ்வருடெய்வமாய் வழுத்துமன்பன்
தெய்வப்புலவருந் தேனுறைதமிழென
வெவ்வெப்பனுவலு மினிதுடனிசைப்போன்
பாரறுநெடுந்தவப் பரமசிவன் தொண்டர்கள்
சீரடியகத்தொடு சிரத்திலிருத்திேனோன்
றலங்கிளர் பதிதொறும்தழி
யிலங்கிசைவளர்முரு கேசபண்டிதனே"

என உடுப்பிட்டி சிவசம்புப்புலவரால் சிறப்பிக்கப்படும் முருகேசபண்டிதரின் வயோதிபக்காலம் திருப்பாற்றூரிலே கழிந்தது. இவருக்கு வேண்டிய வசதிகளை இறுதிக்காலத்தில் வெள்ளைய நாடாரவர்கள் செய்ததாக கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை கூறுவார். மூப்பால் உடல் தளர்ந்து, மெலிந்த முருகேசபண்டிதர் 1900 ம் ஆண்டு (விகாரி வருசம்) ஆவணி மாதம் 10 ஆம் திகதி தேகவியோகமாயினார். கூரிய நுண்மதி கொண்டு குறைவிலா சீர்கள் பெற்று ஆரியமும் செந்தமிழும் இனிதே ஆய்ந்து அரிய நூல்கள் பலவுரைத்த முருகேசபண்டிதருக்கு ஒப்பார் இவ்வுலகில் இல்லையெனலாம். எவ்விடமும் எக்காலமும் இவ்வினியார் புகழ் உள்ளவும் தமிழ் என்றும் நிலைத்திருக்கும்.

வெள்ளிமலை இதழ் 08 மார்கழி 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணக் கொட்டர் முருகேச பண்டிதர்

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

சுன்னாகத்தைச் சேர்ந்த மயிலணியில் உயர் வேளாண் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் முருகேச பண்டிதர். (இவர் காலம் 1830 - 1900) இவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடமும் நீர்வேலி சங்கர பண்டிதரிடமும் கல்வி கற்றவர். பஞ்சலக்கணமும் இவருக்கு மனப்பாடம். இவர் ஒரு தோடஞ்ஞர். தோஷம் தமிழில் தோடம் என்றாயிற்று. தோடம் - குற்றம், ஞர் - அறிபவர் என்னும் பொருட்டு. இவர் தோடஞ்ஞராயிருப்பதனால், இவரை அணுகுவதற்குப் பெரிய வித்துவான்களே அஞ்சுவர்.

இதனால் இவரைத் தோடஞ்ஞர் என்பர்; இயற் பெயர் மறைந்து தோடஞ்ஞராயது. அவரது இலக்கணப் பயிற்சியால் வந்தது. அதனால் இலக்கணக் கொட்டர் என்ற பெயர் நிலைத்தது.

என் அன்புக்குரிய ஆசிரியர் சுன்னாகம் திரு அ.குமாரசுவாமிப் புலவர் அவர்கள். புலவர் அவர்களின் ஆசிரியர், மேற் குறிப்பிட்ட இலக்கணக் கொட்டர் அவர்களே.

தோட்டஞ்ஞரான இலக்கணக் கொட்டரிடம் படித்தமையாற்போலும், புலவர் அவர்களும் ஒரு தோடஞ்ஞரே. புலவர் அவர்களின் தோடஞ்ஞத்துவம் பற்றி, மறைமலையடிகள் என வழங்கும் சுவாமி வேதாசலம் பெரிதும் பாராட்டு வழங்கியிருக்கின்றார்.

இலக்கணக் கொட்டரிடம் படித்தவர்களில், புலவர் தவிர ஏனையவர்களில், முக்கியஸ்தர்களில் ஒருவர், யாழ்ப்பாணச் சரித்திரம், பல்வேறு நூல்கள் இயற்றிய நாவலர் கோட்டம் என வழங்கும் "உவாட்டன் டேவி" திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்.

மற்றொருவர் உதயபாநுப் பத்திரிகை ஆசிரியரும், சைவசித்தாந்தப் பிரசாரகரும், பாஸ்கர சேதுபதியாற் பெரிதும் பாராட்டப்பட்டவருமான ஊரெழு சரவணமுத்துப் புலவர்.

அலங்கார பஞ்சக சண்டமாருதம்

விரைவிற் கவி புனையும் ஆற்றல் நமது இலக்கணக் கொட்டருக்குப் பிறவிச் சொத்து; கண்டனக் கவிகள் மிகப் பல.

கத்தோலிக்க வித்துவான் அருளப்ப முதலியார், நாவலர் அவர்களையும் பிறரையும் தூற்றிப் பாடிய "அலங்கார பஞ்சகம்" என்னும் நூலில் வரும் குற்றங்களை எடுத்துக் காட்டி "அலங்கார பஞ்சக சண்டமாருதம்" என்ற நூலைச் செய்யுள் வடிவில் செய்தளித்தனர்; விநோதச் சிலேடை, நடுவெழுத்தலங்காரம் முதலிய விநோதக் கவிகள் பல.

நூல்கள்:

இவர் இயற்றிய நூல்கள் பல, சில வருமாறு: மயிலணிச் சிலேடை வெண்பா, குடந்தை வெண்பா, ஊஞ்சல், பதிகம், நீதிநூறு, பதார்த்த தீபிகை முதலியன.

இவர் கற்பித்த ஊர்கள்:

இவர் யாழ்ப்பாணத்திற் பல இடங்களுக்குச் சென்று சென்று அங்குள்ளவர்களுக்குக் கற்பிப்பவர். அவர் கற்பித்த ஊர்ப் பெயர்களை அவர் மாணவர் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப் புலவர் பின்வரும் தரவு கொச்சகத்தில் காட்டுகிறார். கொச்சகம் பின்வருமாறு:

"சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
பன்னுசிறு பிட்டியள வெட்டியொடு மல்லாகந்
துன்னியகல் வளைமுதலாந் தென்னகர்வாழ் மாணவர்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே".

வடக்கே ஆசிரியர்:

இவர் வடக்கே சென்று சிதம்பரம், சென்னை, திருப்பத்தூர் முதலிய இடங்களில் தமிழாசிரியராயிருந்தவர்.

விநோத சம்பவமொன்று:

கும்பகோணத்தில் உயர்தரக் கல்லூரி ஒன்றுக்குத் திறமை படைத்த பண்டிதர் ஒருவர் தேவை. பண்டிதர் பலர் அந்த இடத்துக்கு வர முயன்றார்கள். கல்லூரி அதிபரும் ஆசிரியரும் கூடி எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை வைத்துப் பண்டிதரைத் தெரிவதென்று விளம்பரம் செய்தார்கள்.

வடதேசப் பண்டிதர்கள் பரீட்சைக்குச் சமுகஞ் செய்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து ஒரே ஒருவர் மாத்திரம் சமுகஞ் செய்தார்.

சிறந்த வித்துவான்களால் தயாரிக்கப்பட்ட பரீட்சை வினாக்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டன.

ஒருவர் விடையெழுதாமல் வினாக்களிலிருந்த பிழைகளை வரிசைப்படுத்தி, திருத்தங்களை எழுதி விட்டுச் சும்மா இருந்தார். இச் செய்தி கல்லூரி அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் சும்மா இருப்பவரின் விடைத்தாளை உற்று நோக்கினார். அவருக்குப் பேராச்சரியமாய் இருந்தது. முதுகில் தட்டி உமக்கு எவ்வித பரீட்சையும் வேண்டாம்; பதவியை ஏற்றுக்கொள்ளும் என்றார்.

இலக்கணக் கொட்டர் அக் கல்லூரியின் தலைமைப் பண்டிதர் ஆயினர்.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் அக் கல்லூரி ஆசிரியராய் இருந்தது இலக்கணக் கொட்டருக்குப் பின்பு ஆகலாம்.

செந்தமிழ்க் களஞ்சியம்
1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணக் கொட்டர்

பிரம்மஸ்ரீ தி.சதாசிவஐயர்

நிரம்பிய கல்வியறிவும் கவிதா சாமர்த்தியமும் சொல்வன்மையும் ஒருங்கமையப்பெற்றுத் தமிழ் நாடெங்கும் தம் இசை பரவ விளங்கிய தமிழ்வாணருள் பூ.முருகேச பண்டிதரும் ஒருவர் என்பது நாம் அறியத்தக்கது. இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சுன்னாகத்துக் கல்லாக் கட்டுவன் என்னும் இடத்தில் சைவ வேளாள குலத்திற் பிறந்தவர். இவர் இற்றைக்கு ஏறக் குறைய நாற்பது ஆண்டு களுக்கு முன் இருந்தவர். இவர் இவ்வுலக வாழ்வை நீத்து மறைந்த தினம் 3-9-1898க்குச் சரியான விகாரி வருஷம் ஆவணி மாதம் உ௲-ந் திகதி ஆகும்.

இவர் உரிய பிராயத்தில் தமிழ்க் கல்வி கற்கத் தொடங்கி விரைவில் இலக்கிய இலக்கண நூற் பயிற்சியில் தலைசிறந்து விளங்குவாராயினர். பஞ்சலக்கணமும் நன்கு கைவரப்பெற்றுத் தமிழ் மொழியில் பெரிதும் அபிமானம் பூண்டுள்ளவர். நிரம்பிய புலமையின்றி நூல்செய்பவர் உரை செய்பவர்களையெல்லாம் அஞ்சாது எதிர்த்து அவர் நூலிலுள்ள குறை குற்றங்களை எடுத்துக் காட்டிக் கண்டனம் செய்யும் வழக்கமுடையவர். அதனால் அக்காலத்தில் இவருக்கு "இலக்கணக் கொட்டர்" என்ற பட்டப் பெயரும் வழங்கியதென்பது.

இவர் விரைந்து கவிபாடும் ஆற்றல் படைத்தவர். பிரபந்தங்கள் பல இயற்றியவர். எனினும் இவ்வறிஞர் பெருமானுக்கு மிக்க உவப்பானதும் மனதுக்கிசைந்ததுமாய செயல் மாணவருக்குக்குப் பாடஞ் சொல்வதேயாம். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற அமுத வாக்கின்படி, தான் கற்றறிந்து இன்புற்ற கலையாரமுதை ஏனையோரும் பெற்று இன்புறுதல் வேண்டும் என்னும் உட்கோளுடையவராய்ப் பற்பல ஊர்களிலுஞ் சென்று சென்று இருந்து தம்மை அடைந்த மாணவருக்கு அன்போடும் ஆதரவோடும் முறைப்படி பாடஞ்சொல்லி அவர்களைக் கல்வியறிவில் முன்னேறச் செய்து வந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் அளவெட்டி, சுன்னாகம், கோப்பாய் முதலிய ஊர்களிலும், இந்தியாவில் சிதம்பரம், கும்பகோணம், சென்னை முதலிய இடங்களிலும் தமிழா சிரியராக இருந்து தமிழ்க் கல்வியைப் பரப்பி வந்தார். இவரிடத்திலே கற்ற மாணவருட் பலர் கலை வல்ல சான்றோராய் விளங்கினர். அறிவாற்றலும், புலமையும், நூல்செய் வன்மையும் படைத்து, விளக்கிற் கொழுத்திய தீப்பந்தம் போலப் பெரும் புகழ் நிறுவி விளங்கிய அறிஞர் திலகமாகிய, சுன்னாகம், அ.குமாரசுவாமிப் புலவர் அவர்களும் இவருடைய மாணாக்கர் ஆவர். முருகேச பண்டிதர் தம் தமிழ் வித்தியா குரவர் என்பதையும், அவர் திறத்துத் தாம் வைத்துள்ள பெருமதிப்பையும், புலவரவர்கள் தாஞ் செய்த "மேகதூதக் காரிகையில்"

"தூய மயிலணிச் சுப்பிரமண்யனைத் தூருமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர்நாகநாத சபாமணியைக்
காய மொழிமனஞ் சேர்த்துது நங்கண் மணிகளென்றே"
என வரும் குருவணக்கச் செய்யுளில் நன்கு காட்டியிருக்கின்றனர்.

அளவெட்டியில், எனது தந்தையார் தியாக ராஜ ஐயரும், அருணாசல உடையாரும், அப்புக் குட்டிச் சக்கிடுத்தாரும் ஆதியோர் இவரிடம் இராமாயணம், கந்தபுராணம் என்னும் நூல்கள் பாடங்கேட்டு வந்தனர். அக்காலத்தில் பண்டிதரவர்கள் எங்கள் வீட்டில் உணவுகொண்டு அங்குத் தங்கியிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடஞ் சொல்லி வந்தார்களாம். சாப்பாட்டில் காரமான பதார்த்தமே இவருக்கு மிகப் பிரியமானது என்றும், வீட்டுச் சமையலிற் சாதாரணமாய்ச் சேர்க்கப்படும் காரம் இவருக்குப் போதியதாயிராமையால், மிளகாயை அரைத்துத் திரட்டிய திரளையையாவது. இடித்த பொடியையாவது இலையில் நிரம்ப இடுவித்து உண்பது இவரது வழக்கம் என்றும் என் தந்தையார் சொல்லக் கேட்டிருக்கிறேன். "இவ்வளவு அதிக காரம் சேர்த்துண்பது உடலுக்கு ஆகாதே" என்று என் தாயார் சொன்னால், அதற்கு இவர், "அம்மா! தடிமனுக்கு இடிமன் போடவேண்டும்" என்று வேடிக்கையாகச் சொல்வாராம்.

ஒருமுறை என் தந்தையாரையும் உடனழைத்துக்கொண்டு மல்லாகம் என்னுங் கிராமத்து வழியாய் அயற் கிராமமாகிய தெல்லிப்பழைக்கு ஒருவரைப் பார்த்தற் பொருட்டுப் போனார்; போகும் போது மல்லாகத்திலுள்ள நீதிஸ்தல வழியாகப் போனார்கள். நீதிஸ்தலத்தைச் சுற்றி நல்ல முட்கிளுவை நாட்டி வேலியிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டு போனவர்கள் போன கருமம் முடித்துக்கொண்டு திரும்பியும் அவ்வழியே வந்தார்கள். வந்தபோது அங்கிருந்த வேலிக் கால்களைச் சில கூலிக்காரர் நின்று அரையளவு உயரத்துக்கு மட்டமாய் வெட்டிக் குறைப்பதைக் கண்டு வியப்புற்று அதன் காரணத்தை அவர்களிடம் வினவினார். கூலிக்காரர் அது நீதிபதியாகிய மறைத்துரையின் கட்டளையென்று விடையிறுத்தனர். அது கேட்ட நம் கவிவாணர் அங்கு நின்றபடியே,

"வெட்டிநட்ட முட்கிளுவை மெத்த வுயரமென்று
மட்டமாய் வெட்ட மறைத்துரையும் - சட்டமாய்
இட்டானே கட்டளையை யிட்டபடி யாகிலிது
பட்டுவிடும் பட்டுவிடும் பார்"

என்ற வெண்பாவைச் சொல்லிவிட்டுத் தந்தையரோடு வீட்டுக்குச் சென்றனராம். சிலநாட்கள் கழித்து அவ்வழியே தான் சென்றபோது அவ்வேலிக் கதிகால்கள் ஒன்றும் உய்யாமல் எல்லாம் பட்டுப்போயிருப்பதைத் தான் கண்டதாக என் தகப்பனார் கூறுவர்.

மேலும், இவர் மனதில் கவலையாவது விசாரமாவது இல்லாமல் எப்போதும் உற்சாகமாயும் வினோதப்பிரியராயுமேயிருக்குஞ் சுபாவமுடையவராம். தம் மாணாக்கரோடு வேடிக்கை பண்ணி விளையாடுபவர் என்பது அருணாசல உடையார் சொல்ல யான் கேட்டறிந்ததென்பது.

பண்டிதரவர்கள் தம்மாணவருட் சிலரையும் அழைத்துக்கொண்டு (யாழ்ப்பாணம்) பட்டினத்திற்கு நாவலரவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்பதற்கு இடையிடையே போவதுண்டு. அப்படி ஒருநாள் இரவு பிரசங்கத்துக்குப் போய்த் திரும்பி வரும்போது, அது அமாவாசையையடுத்த நாளாதலின் மிக்க இருள் செறிந்திருந்தது. அக்காலத்தில் இருளில் வழிச்செல்வோர் கையிலெடுத்துப்போதற்கு இக்காலத்து உள்ளது போன்ற "லாந்தர்" விளக்கு ஒன்றுங் கிடையாது. பனங்கருக்கு, தென்னம் பாளை, ஓலை முதலியவற்றாலாய சூள் (சுளுந்து) வெளிச்சமே கையிலெடுத்துச் செல்வர். அப்படியே இவர்களும் ஒரு சூள் வெளிச்சத்தோடு வந்தனர். அப்போது நமது பண்டிதமணிக்கு ஒரு வேடிக்கை பண்ண வேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. நந்தாவில் என்னுமிடத்தை அணுகிய போது இவர் தான் முன்னதாக விரைந்துபோய் அங்குச் சமீபத்தில் வசித்த ஒருவரைப் பார்த்து விட்டு வருவதாகவும், அவர்களை மெதுவாகப் பின்னே நடந்து வரும்படியும் சொல்லிவிட்டு ஒருவரை மாத்திரந் தன்னோடழைத்துக்கொண்டு விரைந்து முன்னதாகச் சென்றனர். சிறிது தூரஞ்சென்று சனசஞ்சாரமில்லாத ஓரிடத்தை அடைந்ததும், தன்னுடைய இடுப்பு வேஷ்டியைக் களைந்து மற்றவரிடங் கொடுத்துவிட்டு அவர் வைத்திருந்த கைக்கோலை வாங்கிப் பிடித்துக் கொண்டு ஒரு சந்துமறைவில் மற்றவர்கள் வரவை எதிர்நோக்கி நின்றனர். அவர்கள் அன்று நடந்த பிரசங்க விஷயத்தைப்பற்றி ஆரவாரமாய்ப் பேசிக்கொண்டும், வழிநடுவையே பார்த்துக்கொண்டும் வந்தாராதலின், பக்கத்தில் நின்ற பண்டிதரைக் கண்டிலர். இவர் தமக்கருகே அவர்கள் வந்ததும் கையிற் பிடித்திருந்த கோலை யோச்சி அவர்கள் கொண்டுவந்த சூளை அடித்து வீழ்த்தி அதில் நெருப்பு இல்லாமல் அணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போம்படி செய்துவிட்டனர். எதிர்பாராத விதமாய்த் திடீரென நிகழ்ந்த இதனால், அவர்கள் ஏங்கித் திகைத்து இருளில் வழிதெரியாது தட்டுத் தடுமாறி முன்னோக்கி ஓடினார். சிறிது தூரஞ்சென்று அப்பாற் செல்ல அஞ்சி அப்படியே நின்றுவிட்டனர். பண்டிதரும் தம் வேஷ்டியை வாங்கி உடுத்திக்கொண்டு அவர்கள் நின்ற இடத்தை அடைந்து அவர்கள் செல்லாது நின்றதன் காரணத்தை வினவினர். அவர்கள் "ஐயா, நாங்கள் சற்று முன்பு அவ்விடத்தில் வந்தபோது, ஒரு பேயோ பிசாசோ அறியோம், ஏதோ கறுப்பாக ஒன்று வந்து திடீரென சூளை அடித்துப் பறித்து எங்களைத் தொந்தரவு செய்யத் தொடங்கினது. நாங்கள் பயந்து ஓடி வந்து விட்டோம். ஐயா! நீங்கள் எப்படித் தப்பி வந்தீர்கள்" என்று ஆச்சரியமும் பயமுந் தோன்றக் கூறினார்கள். அதற்கு இவர் "அந்தப்பேய் உங்களை அடிக்கக் கொண்டுவந்த கம்பையும் உங்களிடமிருந்து பறித்தெடுத்த சூளையும் இதோ கொண்டுவந்திருக் கிறேன். இனி நீங்கள் பயப்பட வேண்டியதில்லை" என்று சொல்லிச் சிரித்தனர். அவர்கள் ஒருவாறு விஷயத்தை ஊகித்தறிந்து எல்லாருமாகச் சிரித்து மகிழ்ந்து வீடு சென்றனராம்.

இவர் கோப்பாயில் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில் அவ்வூரிலிருந்த கென்ஸ்மன் (Hensman) என்னும் கிறிஸ்தவர் ஒருவர் வீட்டில் கள்வர் புகுந்து பொருட்களைக் கொள்ளை கொண்டு வீட்டையும் தீக்கிரையாக்கிப் போயினர். பின்பு அவர்கள் பிடிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டபோது இருவர் சுவரேறிக் குதித்து ஓடித் தப்பினர். எஞ்சிய இருவர் தண்டனையடைந்தனர். இச்சம்பவத்தை யும் அது நடந்த காலத்தையுங் குறிப்பிட்டுப் பண்டிதர் ஒரு கவி செய்தார். அது வருமாறு:-

"வெள்ளை வேலன் வயிரவன் காசிதன்
வீர னோடரு ளம்பல மென்றிடுங்
கள்வர் நால்வருங் கோவையிற் றன்மதங்
காட்டுங் கென்சுமன் வீட்டை நெருப்புறீ இக்
கொள்ளை கொள்ளக் கொடுத்து மறியலின்
கூட மேறி யிருவ ரொளித்திடப்
பள்ள னோடரு ளம்பலந் தான்சிறைப்
பட்ட வாண்டு விபவப் பெயரதே"

என்பதாம். இதிற் குறித்த விபவ வருடம் கி.பி. 1868க்குச் சரியாகும். அதனால் இச்சம்பவம் நிகழ்ந் ததும் இக்கவி சொல்லப்பட்டதும் 1868ம் ஆண்டில் என்பதறியலாம்.

1938 ஈழகேசரி ஆண்டு மடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்
துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

(சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர்)

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள்
பழுத்துள நாவினன் பாக்களொர் நான் கொடு பாவினங்கள்
வழுத்திடப் பாடு முருகேச பண்டிதன் வாதியெனத்
தொழத்தகு விற்பனன் சென்று பரகதி துன்னினனே.

(வித்துவான் சி.கணேசையர்)

பன்னாகத் தானங் குடந்தைவெண் பாமடக் காப்பகர்ந்த
வன்னாகத் தானபொதியத்த கத்திய மாமுனிநேர்
சுன்னாகத் தான்பண் டிதன்றிரு நீற்றினன் றோமிலொளி
மன்னாகத் தான்முரு கேசனு மீழநன் மண்ட லமே.

(அல்வாய் கணபதிப்பிள்ளைப் பண்டிதர்)

ஆரியமும் செந்தமிழும் இனிதின் ஆய்ந்தே
அரியபல நூலுரைகள் ஆக்குந் தீரன்
சீரியநற் குணங்களெலாந் திகழ்ந்த செம்மல்
செகம்புகழும் சங்கரபண் டிதவேள் பாலும்
பார்புகழும் கவிஞனாய்க் கல்வி மானாம்
பண்புடைய சிவசம்புப் புலவன் பாலும்
கூரியநுண் மதியோடு கற்றுத் தேர்ந்தோன்
குறைவில்சீர் முருகேசக் குரிசில் மாதோ.

(சுன்னாகம் கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org